தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

# இராசராச சோழன்

முடிசூடிய

# 1000 ஆவது

# ஆண்டு விழா

நினைவுச் சிறப்பிதழ்

# தமிழ்ப் பொழில்

## பதிப்பாசிரியர் குழு


1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
   தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
   செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
   பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
   எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
   தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
   தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
   தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை.

7. திரு. புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
   முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
   867, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
   பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள்
    உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.


---


வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் : திரு. எம். சந்திரமௌலி, ஜெமினி அச்சகம்,
1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.

# இராசராச சோழன் விழா

தமிழகத்தின் புகழுக்குக் காரணமாக விளங்கிய பண்டைத் தமிழ் வேந்தருள் குறிப்பிடத்தக்க பேரரசன் முதலாம் இராசராச சோழன் ஆவான். வானளாவிய பெருவுடையார் திருக்கோயிலை எழுப்பியதோடு தமிழையும், தமிழ்ப்பண்பாட்டினையும் மீண்டும் பெருங்கோயிலாக நிலவச்செய்த இம்மன்னன் முடிசூடி இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளாகின்றன. இந்த ஆயிரமாவது ஆண்டினை அவன் செங்கோல் ஓச்சிய தஞ்சையில் விழா எடுத்துச் சிறப்பிக்கத் தமிழக அரசு விரும்பியுள்ளதாகவும், அதன் நினைவாகத் " தமிழ்ப் பொழில்" இதழ் ஒன்றினைச் சிறப்பு மலராக வெளியிட வேண்டித் தமிழக அரசு நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு மடல் எழுதியதனை ஏற்று இரத்தாட்சி ஆனித்திங்கள் இதழைக் கூடுதல் பக்கங்களோடு வெளியிட சங்கம் முடிவுசெய்து, தக்க பேரறிஞர்களிடமிருந்து கட்டுரைகளையும், கவிதைகளையும் தமிழக அரசு தொல்பொருள் துறையினரிடமிருந்து நிழற்படங்களையும் பெற்று இச்சிறப்பு மலரை வெளியிடுகின்றது. இம்மலர் உருவாக உதவிய பெருமக்கள் அனைவருக்கும்எங்கள் நன்றி உரியதாகும்.

இராசராசன் சதய விழாவைக் கொண்டாடுவதோடு, அவன் முடிசூடிய நாளினைக் கொண்டாடுதற்கு இவன் ஆட்சியேற்று ஆற்றியுள்ள சிறந்த செயல்களே காரணமாகும்.

## இராசராசனின் அரசியலும் ஆட்சியும் :

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்களின் இறைவனாகக் கருதப்படுவான். மன்னர்கள் நாட்டையும் நாட்டு மக்களையும் தம் உடைமையாகவே கருதுவர். அருண்மொழித் தேவன் ஆட்சிபுரிந்த முறை, மன்னவன் மக்களின் காவலன் ; நாடு மக்கள் யாவர்க்கும் உரியது; மக்கள் யாவரும் சரிநிகர் சமானமானவர்; ஆடவர்க்கும் மகளிர்க்கும் ஒத்த உரிமையுண்டு என்பதனை உணருமாறு அமைந்துள்ளது.

அருண்மொழித்தேவன் அற நிலையங்களிலும் ஆலயங்களிலும் அறநெறி பிறழாமல் ஆட்சிபுரிந்து அவற்றைத் தணிக்கை செய்து ஆலயங்களில் இசை நாடகக்கலைகள் ஓங்குமாறு செய்தவன். தான் ஓர் அருங்கலை விநோதனாக இருந்து அக்கலையுணர்வை

அனைவரும் பெற்று மகிழச் செய்தவன். தொல்லோர் வளர்த்த நல்ல பல கலைகளை வல்லாரைக் கொண்டு நிலைபெறச் செய்தவன் இவ்வண்டமிழ் வேந்தனாவான். இக்காலப் பொறியியல் வல்லுநரும் கட்டிடக் கலைஞர்களும் வியந்து பாராட்டும் வண்ணம் தெக்கண மேரு என்று பாராட்டப் பெறும் வானளாவிய கற்கோயிலை மருதஞ் சான்ற தஞ்சையிலே எழுப்பியவன். திருக்கோயில்கள் மெய்ஞ் ஞானத்தையும் கலைஞானத்தையும் ஒருங்கு வளர்க்கும் நிலையம் என்பதனைச் செயல்முறைப் படுத்திய செம்மல் இராசராசன்,

பல்வேறு சாதி சமய இனங்களாக வாழும் மக்களுக்கெல்லாம் காவலன் என்ற கடமையை நன்குணர்ந்து தன் முன்னோர்கள் பரம்பரையாக மேற்கொண்ட சைவநெறியைத்தான் சார்ந்து ஒழுகினும், பிறசமயங்களைச் சமமாக மதித்து அச்சமயநெறிகள் வளரவும் துணை நின்றவன். சிவபாதசேகரனாகிய இவன் நாகைப் பட்டினத்தின்கண் விஜயோத்துங்க வர்மனால் எழுப்பப் பெற்ற புத்த விகாரத்திற்கு ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச் சந்தமாக அமைத்து "இராசராசப் பெரும்பள்ளி" என்று பெயரிடுவதற்கு உடன்பட்டமையும், மணலூரில் திருமாலுக்கு ஜெயங் கொண்ட சோழவிண்ணகரமும், தலைக்காட்டிற்கு அண்மையில் இரவிகுல மாணிக்க விண்ணகரமும் எடுப்பித்து பல நிவந்தங்களை அளித்தமையும் இவனுடைய சமரச உணர்வைக் காட்டுவனவாகும்.

பொதுநலம் பேணுதலைத்தானே மேற்கொள்ள நினையாது தன் பட்டத்தரசியரும், உடன்பிறந்தாரும், தன்மக்களும் அவரவர் விரும்பியாங்கு ஆலயங்களை எடுக்கவும் நிவந்தங்கள் புரியவும் மகிழ்ந்துதவி பெண்ணுரிமையைப் பேணியவன் இப்பெருமகன். திருக்கோயில்களில் செந்தமிழ் மந்திரம் ஒலிக்கவும் இசைக்கவும் வேண்டித் தில்லைவாழ் அந்தணர் தம் வசமிருந்த திருமுறைகளைக் கைப்பற்றி நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு முறைப் படுத்தி விண்ணப்பிக்கச் செய்த பேராளனாவான்.

நாடுவளம் பெற நாடு முழுவதையும் அளந்து நிலவரியை ஒழுங்குபடுத்தியதுடன், ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடாக, கூற்றங்களாகப் பிரித்துக் கிராம சபைகளையும் வாரியங்களையும் அமைத்து அவற்றை ஆளுதற்குத் தகுதியும் ஆற்றலும் வாய்ந்த தலைவர்களைக் குடவோலை முறையால் மக்களே தேர்ந்து எடுத்துக் கொள்ளுமாறு செய்த இவனது அரசியலறிவு எண்ணத் தக்கதாகும். ஈழத்தின்மேல் படையெடுத்து வென்று ஆங்கு தமிழ்ப் பண்பாட்டினையும் சமயக் கோட்பாடுகளையும் வேரூன்றச் செய்த திறனும், வடதிசைப் பகையை மாற்றுதற்கு வேங்கி நாட்டு

# தஞ்சைப் பெரியகோவில்—அளவுகோல்

வே. இராமன்

**பெரியகோயில் :**

தமிழ்நாட்டுக் கோயில்கள் என்றாலே நம் மனக்கண் முன் நிற்பது வானளாவ ஓங்கி நிற்கும் அழகிய கோபுரங்களும், விமானங்களுமேயாகும். தமிழகத்துக் கோயில்களிலே மிகவும் உயர்ந்ததும், உன்னதமான அமைப்புக் கொண்டதும் தஞ்சையிலுள்ள "பெரிய கோயில்" என்றழைக்கப்படும் "ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோயிலாகும்". இக் கோயிலுடன் இணைந்த அந்தராளம், மஹா மண்டபம், மற்றும் அகன்ற பிரகாரங்களும், நீண்ட நெடிய மதிற் சுவர்களும், அழகிய கோபுரங்களும், எழிலார்ந்த கலைத்திறன் கொண்ட சிற்பங்களும் ஒருங்கே கொண்ட மாபெரும் திருக்கோயில் தஞ்சைப் "பெருவுடையார் கோயில்" ஆகும்.

**முழக்கோல் :**

இம் மாபெரும் கோயிலின் கட்டிட அமைப்பை அளந்தறிந்து

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மன்னனுக்குத் துணை புரிந்து அவன் வாயிலாகப் பிறரை ஒடுக்கியும், விமலாதித்தனுக்குத் தன் மகள் குந்தவையை மணஞ்செய்து கொடுத்து அவர்களை உறவாக்கிக் கொண்ட அறிவும் இவனுடைய இராச தந்திரத்திற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

சேரன் செங்குட்டுவனுக்குப் பின் அலைகடல் நடுவண் பலகலம் செலுத்தி முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் முதலிய நாடுகளை வென்றமை இவன் கப்பற்படை வலிமையைக் காட்டும். தமிழக வரலாற்றில் பெருஞ்சுடராக அமைந்து தமிழ்மொழி—தமிழ்க்கலை—தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை உலகறியச் செய்த இப் பெருமகனின் நினைவைப் போற்றுவதும் அவன் வழிநின்று நாட்டைப் பேணுவதும் தமிழர்களின் நன்றிக் கடப்பாடாகும்.

வாழ்க இராசராசன் புகழ் !

— பதிப்பாசிரியர் குழு —

செய்ய சிற்பி எடுத்துக் கொண்ட அளவுகோல் அதாவது முழக்கோல் "கிஷ்கு" என்றழைக்கப்படும் ஒருவகை முழக்கோல் ஆகும்.

பண்டைக்கால சிற்பக்கலை மரபும், அதற்கென வகுக்கப்பட்ட அளவுமுறையினையும் கலைச்சிறப்பு மாறாமல் ஸ்தபதிகளால் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றது

**பலவகை முழக்கோல்கள் :**

நிலம், மனை, சாலை, முதலானவற்றை அளவிட ஓர் அளவு முறையும்; வீடு, மாளிகை, மன்றம், கோயில், குளம், கிணறு ஆகியவற்றை அளவிட ஓர் அளவு முறையும்; மஞ்சம், கட்டில், தொட்டில், ஊஞ்சல், நாற்காலி ஆகியவற்றை அளவிட ஓர் அளவு முறையும்; தேர், சப்பரம், வண்டி ஆகியவற்றை அளவிட ஓர் அளவு முறையும்; சிற்பப் படிமங்களை வடிமைக்கப் பிறிதொருவகை அளவு முறையினையும் விரிவாகச் சிற்பநூல்கள் விளக்குகின்றன.

**முழக்கோல் வகைகள் :**

சிற்ப நூல்கள்* பலவகையான முழக்கோல்களைக் கூறுகின்றன. அவை முறையே;

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | விரல் | கொண்டது | : | கிஷ்கு |
| 25 | ,, | ,, | : | பிராஜாபத்தியம் |
| 26 | ,, | ,, | : | தனுர்முஷ்டி |
| 27 | ,, | ,, | : | தனுர் கிரஹம் |
| 28 | ,, | ,, | : | பிராச்சயம் |
| 29 | ,, | ,, | : | வைதேகம் |
| 30 | ,, | ,, | : | வைபுல்யம் |
| 31 | ,, | ,, | ; | பிரகீர்ணம் |

இவ்வாறு பலவகையான முழக்கோல்கள் சிற்ப நூல்களில் கூறப்பட்டாலும் ஒரு சில முழக்கோல்களே ஸ்தபதிகளால் பயன் படுத்திவரப்பட்டுள்ளன.

**கிஷ்குமுழம் :**

பொதுவாக ஒரு முழத்திற்கு 24 விரலை அடிப்படை அளவாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருக்கின்றது. 24 விரல் கொண்ட "கிஷ்கு" முழத்தையே தஞ்சைப் பெரியகோயில் நிர்மாணம் செய்ய

* காசியபம் சிற்பநூல் 22 ; 196

கையாளப்பட்டிருக்கின்றது! எனவே இக்கிஷ்கு முழத்தைத் "தஞ்சை முழம்" என்றும், ஸ்தபதிகள் அழைப்பர். இம் முழக்கோல் அளவே திருவண்ணாமலை திருக்கோயிலையும் அமைக்கப் பயன் படுத்தப்பட்டமையால் இந்த முழக்கோலை "அண்ணாமலை முழம்" என்றும் அழைப்பர்.

### தச்சு முழம்

தமிழகத்தின் பண்டைக் காலத்தே 24 விரல் கொண்ட அளவு கோல் இருந்தமையை "நூல்நெறி மரபின் அரங்கம் அளவு கோல் அளவிருபது நால்விரலாக" என்ற இலக்கிய அடிகளால் அறியமுடிகின்றது. இதன் பொருட்டு இக்கிஷ்கு முழத்தை "தச்சு முழம்" என்றும்; "சிற்பமுழம்" என்றும் சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர்.

### செந்நெல் :

தமிழ்நாட்டில் விளையும் தானியமான "செந்நெல்"லே விரல் அளவு கொள்வதற்குப் பயன்படுத்தியுள்ளனர். இந்நெல் அளவினைக் கொண்டு "யவை" என்றும், விரல் அளவை "அங்குலம்" என்றும் பிரித்து அளவீடாகக் கையாண்டுள்ளனர் முன்னோர்.

### அங்குலம் :

எந்த நுட்பமான பொருளை நம் கண்களால் காண இயலாதோ அதற்குப் பரமாணு என்று பெயர். இத்தகைய நுட்பமான பரமாணுவைக் கொண்டு அளவு முறையைக் கண்டுள்ளனர். அவை முறையே[2],

| | | |
|---|---|---|
| 8 பரமாணுக் கொண்டது | : | ஒரு தேர்த்துகள் |
| 8 தேர்த்துகள் | : | ஒரு மயிர் நுனி அகலம் |
| 8 நுனி மயிர் | : | ஒரு ஈர் |
| 8 ஈர் | : | ஒரு பேன் |
| 8 பேன் | : | ஒரு நெல் (யவை) |
| 8 நெல் | : | ஒரு விரல் (அங்குலம்) |

என்றும்,

1. சிற்பச்செந்நூல் — கணபதிஸ்தபதி — தொழில் நுட்ப கல்வி இயக்கம் சென்னை — வெளியீடு.

2. அரங்கேற்று காதை — சிலப்பதிகாரம்,
காசியபம் சிற்பநூல்.

2. காசியபம் சிற்பநூல் 22 : 189
மயமதம் ,, ,, 5 : 20

8 செந்நெற்களை அகலவாட்டில் ஒன்றொடொன்று நெருங்க அமைத்து அதன் மொத்த நீளத்தை ஓர் அங்குலமாகவும், 4 செந்நெற்களை நீளவாட்டத்தில் ஒன்றொடொன்று நெருங்க அமைத்து அதன் மொத்த நீளத்தை ஓர் அங்குலமாகவும் அளவீடாகக் கொண்டனர் சிற்பநூலோர்.

### மானாங்குலம் : [1]

8 நெல் அகலம் கொண்டது ஓர் அங்குலமாகும். இதனை அளப்பதற்குரிய பொதுவான அங்குல அளவாகக் கொண்டது ''மானாங்குலம்'' என்றழைக்கப்பட்டது.

### முழம் :

ஆறு மானாங்குலம் கொண்ட நீள அளவை ''தாளம்'' என்றும், இரண்டு தாளம் கொண்டது ''விதஸ்தி'' என்றும், இரண்டு விதஸ்தி கொண்டது ஒரு ''கிஷ்குமுழம்'' என்றும் அளவீடாகக் கணக்கிடப்படவேண்டும். சுருங்கக் கூறின்,

6 மானாங்குலம் : 1 தாளம்.
2 தாளம் (12 விரல்) : 1 விதஸ்தி[2].
2 விதஸ்தி (24 விரல்) : 1 முழம்.[3] ஆகும். விதஸ்தியை அரை முழம் என்றும், 2 விதஸ்திகொண்ட கிஷ்குமுழ அளவை முழுமுழம் என்றும் சொல்லலாம்.

### கிஷ்கு முழத்தின் உட்பிரிவுகள் :

24 விரல் கொண்ட கிஷ்கு முழம் ''உத்தம'' முழம் என்றும் $23\frac{1}{2}$ விரல் கொண்ட கிஷ்குமுழம் ''மத்தியம்'' முழம் என்றும், $23\frac{1}{4}$ விரல் கொண்ட கிஷ்குமுழம் ''அதம'' முழம் என்றும் மூன்றுவகை அளவுகோல்களாகப் பிரிக்கலாம். இம் மூன்று அளவுகளில் அதம கிஷ்கு முழத்தை பழனி, மதுரை கோயில்களைச் செய்த ஸ்தபதிகள் பயன்படுத்தியமையால் இந்த முழக்கோலை ''மதுரை முழம்''[4] என்றும் அழைப்பர்.

### கருவறைச்சுவர் பகுதிகளும், அளவை முறைகளும்

இக்கோயில் கருவறைச் சுவர் அமைப்பினை வெறும் நீண்ட சுவராக அமைக்கப்பெறாமல் அலங்கார வரிவர்க்கங்களோடு அமையப்பெற்றிருப்பதை காண்கிறோம். அமையும் அலங்கார

---

1. மானம் : அளவு, இது 1 3,8'' ஆங்கில அளவிற்கு சமமாகும்.
2 12 விரல் = 12 × 1 3/8'' = 1 : 4 1/2''
3. 24 விரல் = 24 × 1 3,8'' - 29 . 5''
4. 23 1/4 விரல் = 2;8''

அணிக்குஏற்ப ஒவ்வொரு பகுதியும் தனித்தனிப் பெயருடன் அழைக்கப்படுகின்றது. அதாவது கருவறைச் சுவர் பகுதியை பல பகுதிகளாகபிரித்துக் கர்ணகூடு, அஹாரை, பஞ்சரம், அஹாரை, முகபத்ரம், அஹாரை, பஞ்சரம், அஹாரை, கர்ணகூடு என்று 9 பத்திகளைக் கொண்டதாக அமைக்கப்பெற்றிருக்கின்றது. சுவரின் மையப்பகுதி முகபத்ரம் என்றும், கோடிப்பகுதி கர்ணகூடு என்றும் பெயர் பெறும்.

கருவறைச் சுவரின் நீளம் கிஷ்கு முழத்தால் 28 முழம், 13 விரல் கொண்ட அளவினதாக அமையப்பெற்றுள்ளது. இது 941 7/8" ஆங்கில அளவிற்கு சமமானதாகும். கருவறைச் சுவரில் இடம் பெறும் பகுதிகளான கர்ணகூடு 3 முழம் 14 விரல்; அஹாரை 2 முழம் 2 விரல்; பஞ்சரம் 3 முழம் 2 விரல்; அஹாரை 2 முழம் 2 விரல்; முகபத்ரம் 6 முழம் 21 விரலும் அளவினதாகக் கொண்டு அமையப் பெற்றிருக்கின்றது.

கருவறை நீளத்தால் சுமார் 2$\frac{8}{4}$ மடங்கு அளவினதாக விமானம் உயரம் கொள்ளப்பட்டுள்ளது.

## முழக்கோல் செய்வதற்குரிய மரங்கள் :

சந்தனம், தேவதாரு, கருங்காலி, தேக்கு, மா, பனை, வேங்கை, செண்பகம் ஆகிய மரங்களும்; பொன், வெள்ளி, தாமிரம், இரும்பு ஆகிய உலோகங்களும் முழக்கோல் செய்வதற்கேற்றவையாகும். அளவுகோல் தயாரிக்க தேர்ந்தெடுக்கப்படும் மரமானது வளைந்தோ வெடிப்புள்ளதாகவோ, மிகவும் மிருதுதன்மை கொண்டதாகவோ இருத்தல் கூடாது. மேலும் முழக்கோல் செய்யும் முறை, அளவுகள் பொறிக்கும் முறைகளைப் பற்றியும் சிற்பநூல்கள் விரிவாக விளக்குகின்றன.

## முழக்கோலின் சிறப்பு :

வீடு, மாளிகை, அரண்மனை, கோவில் ஆகியவைகளையும் இவ் கிஷ்குமுழத்தால் அளவிடலாம். இவ்வாறு தஞ்சை முழம் என்றும்; தச்சு முழம் என்றும்; சிற்ப முழம் என்றும்;அண்ணாமலை முழம் என்றும்; மலவகை சிறப்புப்பெயர்களால் அழைக்கப்படும். இம் முழக்கோலை தஞ்சை மாவட்டத்தில் இன்றளவும் ஸ்தபதிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற தனித்தன்மைத் கொண்ட சிறப்பான அளவைக் கொண்டது இக் கிஷ்குமுழமாகும்.

## ஆதார நூல்கள் :

சிற்பச் செந்நூல்,
காசியபம், மயமதம் சிற்பநூல்கள்,

---

2, பிரிவு ; பகுதி எனக் கொள்ளலாம்.
* ஏறத்தாழ 216''-0"

# திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில் கல்வெட்டுகள்

டாக்டர் இரா. கலைக்கோவன்

சோழத் தொல்குடியில் எழுகதிரோனாய்த் தோன்றிய பெருமகன் முதலாம் இராசராசன் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்த தன்னிகரற்ற மன்னர்களுள் ஒருவனாய்ப் புகழ்ச்சியைத் தொட்ட இப் பெருவேந்தன் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயில் இன்றளவும் தமிழர் கலைத்திறமைக்கோர் இமயமாய்ச் செம்மாந்து நிற்கிறது. தானும், தன் வாழ்வரசியருமாய், இவ்வேந்தன் எடுப்பித்த கோயில்களும், அக்கோயில்களுக்குச் செய்தளித்த செப்புத்திருமேனிகளும், வழிபாடுகளும் இன்னபிற கடமைகளும் தொய்வின்றி நடக்க வாரி வழங்கிய கொடைகளும், நினைக்குந்தோறும் மெய்சிலிர்க்க வைக்கும் வரலாற்று உண்மைகளாம். அருள்மொழிவர்மன் என்ற பிறப்புப் பெயருடைய இப்பேரரசன் தன்னால் கட்டப்பட்ட கோயில்களை மட்டுமல்லாது தன் முன்னோர்களால் கட்டப்பட்ட கோயில்களையும் தன் கண்ணேபோல் காத்துப் போற்றியதைக் கல்வெட்டுகள் வழி அறிகிறோம்.

எத்தனையோ கோயில்கள் எழுச்சிமிக்க இப்பேரரசனின் அன்பான அரவணைப்பில் செழித்தன. அப்படிச் செழித்த அருட்கோயில்களில் ஒன்றுதான் வயலூர்த் திருகற்றளிப் பரமேசுவர் கோயில்.

திருச்சியில் இருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவில் புத்தூருக்கு மேற்கில் செந்நெல் வயல்களுக்கும், வாழைத்தோப்புகளுக்கும் நடுவில், வயலூர் திருத்தலத்தில் இக்கற்றளி அமைந்துள்ளது. திருச்சி குழுமணி சாலையில், திருச்சியிலிருந்து எட்டாவது கிலோமீட்டரில், அதவத்தூருக்குச் சற்று முன்னதாக, குமார வயலூருக்கான குறுக்குச்சாலை வலப்புறத்தில் திரும்புகிறது. பிரிவுப் பாதையில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் எடுப்பான கோபுரத்துடன் அமைந்திருக்கும் இத்திருக்கோயில், கட்டப்பட்ட காலத்தில் சிவத்தலமாகவே இருந்தது. எடுப்பிக்கப்பட்ட காலத்திலும், அதற்குப் பின் ஒரு நூற்றாண்டு காலம் வரையும், 'திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில்' என்றுதான் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. பிறகு உத்தம சோழன் காலத்தில், 'திருக்கற்றளிப் பெருமான் கோவில்' அல்லது 'திருக்கற்றளி மகாதேவர் கோயில்' என்று பெயர் மாற்றம்

(தொடர்ச்சி பக்கம் 193)

# இராச ராசனும் திருமுறைகளும்

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,

தமிழகத்தில் இடைக்காலத்தில் வந்துபுகுந்த அயலவர் ஆட்சியை மாற்றித் தமிழ் மக்களது உள்ளத்திலே 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் நல்லுணர்வினைத்தூண்டி நாட்டில் உரிமையுணர்வு நிலை பெறுதற்கு இன்றியமையாத தெய்வக் கொள்கையினைக் கடைப்பிடித்துப் பழைய திருக்கோயில்களைக் கற்றளிகளாக்கியும், புதிய கோயில்களை நிறுவியும், அக்கோயில் களில் நாளும் இன்னிசையால் தமிழ் வளம் பெறத் தேவார ஆசிரி யர்கள் அருளிச் செய்த திருப்பதிகங்களைப் பாடுதற்கு ஓதுவார் பலரை நியமித்தும், செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரவும் நாட்டுமக்கள் பசியும் பிணியும் பகையும் நீங்கி நல்வாழ்வு பெறுதற் கான நீர்ப்பாசனத்திட்டங்களை வகுத்து நிறைவேற்றியும் தமிழக மக்கள் வாழ்வுக்கு ஆக்கந் தரும் நெறிமுறைகளை அமைத்துதவிய பெருமை பிற்காலச்சோழ மன்னர்க்குரிய தனிச்சிறப்பாகும்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற் றாண்டு முடியத் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த சோழமன்னர்களுள் கல்வி தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதப் பண்புகள் அனைத்தும் வாய்ந்து பகைவரைப் புறங்கண்டு தமிழகத் தையும் அதனைச்சூழ்ந்துள்ள புறநாடுகளையும் தன்னடிப்படுத்தி ஆட்சி புரிந்த பெருவேந்தன் முதலாம் இராசராச சோழன் என்பது வரலாற்றறிஞர் பலரும் அறிந்தவுண்மையாகும்.

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழனுக்கு வானவன் மாதேவி வயிற்றிற் பிறந்த இளையமகன் அருண்மொழிவர்மன் என்ற பெயருடைய முதலாம் இராசராசனாவன். இவன் பால்பருகும் குழந்தையாயிருந்த காலத்திலேயே தந்தை சுந்தரசோழன் இறந் தனன். தாய் வானவன்மாதேவியும் தீப்பாய்ந்து உடனுயிர் துறந்தாள். இச்செய்தி,

*செந்திரு மடந்தைமன் சீராஜராஜன்*
*இந்திர சமானன் இராஜ சர்வஞ்ஞ னெனும்*
*புலியைப் பயந்த பொன்மான், கலியைக்*
*கரந்து கரவாக்காரிகை சுரந்த*
*முலை மகப்பயந்து முழங்கெரி நடுவேனுந்*
*தலைமகற் பிரியாத்தையல் ... ... ...*
*சுந்தரசோழன் மந்தர தாரன்*
*திருப்புய முயங்குந்தேவி''* (தெ.இ.க.தொ. VII எண் 863)

எனவரும் திருக்கோவலூர்க் கல்வெட்டால் இனிது விளங்கும்.

இவ்வாறு பாலுண்ணும் பருவத்திலேயே பெற்றோரையிழந்த அருண்மொழிவர்மன் கண்டராதித்த தேவர் மனைவியாரும் தன் சிறிய பாட்டியும் ஆகிய செம்பியன் மாதேவியாராலும் தமக்கை குந்தவையாராலும் அன்புடன் பேணி வளர்க்கப் பெற்றான். செம்பியன் மாதேவியாரும் குந்தவையாரும் அறிவுறுத்திய அறிவுரைகளை இவன் கடைப்பிடித்தொழுகினமையே சிவநெறித் தொண்டிலும், சிற்பம், ஓவியம், இசை முதலிய கலை வளர்ச்சியிலும் பெரிதும் ஈடுபட்டு உழைத்ததற்குக் காரணமாகும்.

தன் சிறிய தந்தை உத்தமசோழனது ஆட்சியில் இளவரசனாக விளங்கிய இவன் உத்தமசோழன் இறந்தபின்னர்க் கி பி. 985–இல் இராசகேசரியென்னும் பட்டத்துடன் சோழ நாட்டின் பெருவேந்தனாக முடிசூடினான். இவ்வேந்தன் கி.பி. 988-இல் சேரனையும் அவனுக்கு உதவியாக வந்த பாண்டியனையும் காந்தளூர்ப் போரிற் புறங்கண்டு வாகை சூடினான். அது பற்றியே இராசராசன் (அரசர்க்கு அரசன்) என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். சேரநாடு பாண்டியநாடு சோழநாடு என்னும் மூன்றிற்கும் இவன் ஒருவனே பெருவேந்தனாகத் திகழ்ந்தமையால் மும்முடிச் சோழன் என்ற சிறப்புப் பெயரும் இவனுக்கு உரியதாயிற்று.

காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய வேந்தர் பெருமானாகிய இராசராசன் தமிழகத்தைச் சூழ்ந்துள்ள வேங்கைநாடு, கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம் முதலிய நாடுகளை வென்றடக்கியதுடன் அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி ஈழநாட்டையும் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும் வென்றடக்கினான். இவ் வெற்றிகள் அனைத்தும் இவனது மெய்க் கீர்த்தியில் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளமை காணலாம். இலங்கைத் தீவாகிய ஈழமண்டலம் இராசராசனுக்குரிய சிறப்புப் பெயரால் மும்முடிச் சோழமண்டலம் என வழங்கப்பட்டு இராசராசன் ஆட்சிக்குள் அடங்கியிருந்தது என்பதும், இராசராசன் ஆட்சிக்காலத்தில் ஈழநாட்டின் தலைநகராகிய பொலனருவா நகரம் அவ்வேந்தன் பெயரால் சனநாத மங்கலம் என வழங்கப்பெற்றதென்பதும், ஈழநாட்டு மாதோட்டம் இராசராசபுரம் என இவனது பெயரிடப்பெற்றதென்பதும் இலங்கையிலும் தமிழகத்திலும் வரையப்பெற்றுள்ள கல்வெட்டுக்களால் நன்கு விளங்கும். ஈழநாட்டிற் சோழர் தலைநகராய் விளங்கிய பொலனருவாவில் உள்ள சிவாலயம் சிற்ப அமைப்பில் பத்துப் பதினோராம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சோழர் நிறுவிய கோயில்

களைப் போன்று அமைந்துள்ளமையும் இங்குக் குறிக்கத்தகுவ தாகும்.

தன்னிகரற்ற பெருவேந்தனாகத் தமிழகத்தை ஆட்சி புரிந்த இராசராசன் தான் பெற்ற வெற்றிச் செயல்களுக்கு உரிய அடையாளமாகச் சோழநாட்டின் தலைநகராகிய தஞ்சையிலே சிவ பெருமானுக்குரிய திருக்கோயிலாகத் தன் பெயரால் எடுப்பித்த இராசராசேச்சரம் என்னும் பெருந்திருக்கோயில், இவ்வேந்தர் பெருமானது சிவபக்தித்திறத்தையும் சிற்பம், ஓவியம், இசை முதலிய கலைகளில் இவனுக்குள்ள பேரார்வத்தையும் புலப்படுத்தும் திருவருள் நிலையமாகத் திகழ்கின்றது. கலைநலம் பொருந்திய இப்பெருங்கோயிலையுருவாக்கிய இராசராசன் இதன்கண் நாள் வழிபாடும் திருப்பதிகம் ஓதுதலும் ஆடலும் பாடலும் நாடொறும் திகழ விளைநிலங்களையும் பிற பொருள்களையும் நிவந்தமாக வழங்கியுள்ளமை இவனது சிவபத்தியின் மேன்மையினையும் கலை யுணர்வினையும் நன்கு புலப்படுத்துவதாகும்.

இராசராசனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் சிவபாத சேகரன் என்பதும் ஒன்று. சிவபெருமான் திருவடியினைத் தன் முடியிற் கொண்டவன் என்பது இதன் பொருள். வடநாட்டின்மேற் படை யெடுத்துச் செல்லும் சேரமன்னன் செங்குட்டுவனை வாழ்த்தி வழியனுப்பும் நோக்குடன் ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்த திருமாலுக்கு அணிந்த மலர் முதலிய சேடத்தினை ஏந்தித் திருமாலடியார் வந்து ஏத்தியபோது அம்மன்னன் தெண்ணீர்க் கரந்த செஞ்சடைக் கடவுளாகிய சிவபெருமானது வண்ணச் சேவடி யினை மணிமுடியிற் கொண்டிருந்தமையால் ஆங்கது வாங்கித் தன் தோளில் அணிந்து கொண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறும். இதனைக் கூர்ந்து நோக்குங்கால் தமிழ் வேந்தர்கள் சிவனடி பொறித்த முடியினைச் சூடிக்கொள்ளுதலைத் தெய்வ வழிபாட்டு மரபாகக் கொண்டிருந்தனர் என்பது நன்கு துணியப்படும். சங்க காலத் தமிழ் வேந்தனாகிய சேரன் செங்குட்டுவனைப் போன்றே பிற்காலச் சோழ மன்னனாகிய இராசராசனும் சிவனடி பொறித்த முடியினையணிந்திருந்தான் என்பது சிவபாத சேகரன் என வழங்கும் சிறப்புப் பெயரால் உய்த்துணரப்படும்.

"திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெரு மானார் நல்லவாறே" எனத் திருநாவுக்கரசர் அருளிய வண்ணம் சிவபெருமான் திருவடியைச் சென்னிமேற்கொண்டு ஆட்சிபுரிந்தசெம்மாற் சிவபாதசேகரன் எனப் பாராட்டப்பெற்ற இராசராச சோழன் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் நம்பியா

ரூரன் ஆகிய மூவரும் அருளிய தேவாரப் பதிகங்கள் அனைத்தையும் தேடித் தொகுக்கும் பேரார்வமுடையவனாய்த் திருநாரையூரிற் பொல்லாப் பிள்ளையார்பால் நல்லருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு தில்லையில் தேவாரப் பதிகங்களாகிய திருமுறைகளைத் தேடிக்கண்டு அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்துத் திருவெருக்கத் தம்புலியூரில் திரு நீலகண்ட யாழ்ப்பாளர் மரபில் தோன்றிய பாடினியார் ஒருவரைக் கொண்டு அப் பதிகங்கட்குப் பழைய முறையிற் பண்ணமைக்கச் செய்தனன்.

நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு தில்லைப் பெருங் கோயிலில் தேவாரத் திருமுறைகளைத்தேடித்தொகுத்து அவற்றை முன்போல ஏழு திருமுறைகளாக வகுத்துப் பண்ணடைவு செய்த சோழமன்னன் திருவாரூர்த் தியாகராசப் பெருமானை வழிபட்டுச் சோழநாட்டை ஆட்கிபுரிந்தவன் என்றும், இராசராசன், அபயகுல சேகரன் என்னும் பெயர்களையுடையவன் என்றும் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது.

*"ஆயுமறை மொழி நம்பியாண்டார் நம்பி*
*அருள் செய்தகலித்துறையந்தாதி தன்னைச்*
*சேயதிருமுறைகண்ட ராசராச*
*தேவர்சிவாலய தேவர் முதலாயுள்ள*
*ஏயகருங் கடல்புடை சூழுலகமெல்லாம்*
*எடுத்தினிது பாராட்டிற்று"*

எனத் திருமுறைகண்ட புராண ஆசிரியர் கூறுதலால் இப்பொழுது கிடைத்துள்ள தேவாரத்திருப்பதிகங்கள் அனைத்தையும் தேடிக் கண்டு ஒரு சேரத்தொகுத்தமையால் திருமுறைகண்ட சோழன் எனப்போற்றப்பெறும் சோழமன்னன் இராசராசன் என்னும் பெயருடையவன் என்பது திருமுறை கண்டபுராண ஆசிரியர் கருத்தாதல் நன்கு தெளியப்படும்.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பதிகங்கள் முதல்மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் நான்கு ஐந்து, ஆறு திருமுறைகளாகவும் சுந்தரர் அருளிய பதிகங்கள் ஏழாந்திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பெற்றன. மூவர் அருளிய தேவாரப்பதிகங்கள் பண்முறையெனப் பெயர் பெற்றன. இம்முறையமைப்பினையடியொற்றி மணிவாசகப் பெருமான்அருளிய திருவாசகம்திருக்கோவைஎட்டாந்திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் சேந்தனார் முதலிய ஒன்பதின்மர் பாடியருளிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய திருப்பதிகங்கள் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம்

பத்தாந் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் அருளிய திரு முகப்பாசுரம் முதல் நம்பியாண்டார் நம்பி அருளிய திருநாவுக்கரசர் திருவேகாதசமாலையீறாகவுள்ள பனுவல்களின் தொகுதி பதினோராந்திருமுறையாகவும் வகுக்கப்பெற்றன. அருண்மொழிவர்மனாகிய இராசராசன் காலத்திற்குப்பின் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் நாயனார் இயற்றியருளிய வரலாற்றுக்காப்பியமாகிய திருத்தொண்டர் புராணம் மேற்குறித்த பதினொரு திருமுறைகளை யடுத்துப் பன்னிரண்டாந் திருமுறையெனப் போற்றப் பெறுவதாயிற்று.

முதலாம் இராசராச சோழனது இயற்பெயர் அருண்மொழித் தேவன் என்பதற்கும். 'சிந்தையருட் சிவமாகத் தெளிவித்தான் அருள் சென்னி" எனத் திருமுறை கண்ட புராணவாசிரியர் 'அருட் சென்னி' எனக் குறித்துப் போற்றுதலால் திருமுறை கண்ட சோழன் தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயிலைக் கட்டிய முதலாம் இராச ராச சோழனே என்பது ஆராய்ச்சியாளர் பலரும் ஒப்பமுடிந்த முடிவாயிற்று.

சிவநெறிச் செல்வனாகிய முதலாம் இராசராச சோழனது 19-ஆம் ஆட்சியாண்டில் தொடங்கப்பெற்ற தஞ்சைப் பெருங்கோயில் திருப்பணி இவ்வேந்தனது 25-ஆம் ஆட்சியாண்டில் நிறைவேறியது. அவ்வாண்டிலேயே நீர் தெளித்தலாகிய குடுமுழுக்கு விழாவும் நிகழ்த்தப் பெற்றது. திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவராகிய கருவூர்த்தேவர் சிவபாதசேகரன் மேற்கொண்டு நிகழ்த்திய தஞ்சை இராசராசேச்சரத்திருக்கோயில் திருப்பணிக்குப் பல்லாற்றானும் உடனிருத்து உதவி புரிந்தார் என்பது, செவி வழிச் செய்தியாலும், தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயிற் கருவறை முதற்சுற்றில் இராசராசனுடன் அவர் உடனிருப்பதாக வரையப்பெற்றுள்ள ஓவியத்தினாலும், தஞ்சைப் பெருங்கோயிலில் எழுந்தருளிய சிவ பெருமானைப் பரவிக் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாத் திருப்பதிகத்தினாலும் நன்கு விளங்கும்.

முதலாம் இராசராச சோழன் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் திருநல்லம் கோயிலில் நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்ய ஓதுவார் இருவர்க்கு நிலமளித்த செய்தி அவ்வூர்க்கோயிலிற் பொறிக்கப்பெற்றுள்ளது. இப்பெருவேந்தனது ஆட்சியில் அரசியலதிகாரியாயிருந்த பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பான் தேவார ஆசிரியர்களாகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரையர்

நம்பியாரூரர் என்னும் மூவர் திருவுருவங்களையும் தஞ்சைப் பெருங் கோயிலில் எழுந்தருளுவித்து நாள் வழிபாட்டிற்கு நிவந்த மளித்துள்ளான். இராசராச சோழன் தஞ்சையில் தன்னாற் கட்டப் பட்ட இராசராசேச்சரத் திருக்கோயிலில் நாள்தோறும் தேவாரத் திருப்பதிகங்களை இசையுடன் பாடுதற்குப் பிடாரர் (ஓதுவார்) நாற்பத்தெண்மரும் அவர்களுக்குத் துணையாக உடுக்கை வாசிப் போர், மத்தளம் முழக்குவோர் இருவரும் ஆக ஐம்பதின்மரை நியமித்து நிவந்தம் வழங்கியுள்ளான். இச் செய்தி, "ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் கொடுத்த பிடாரர்கள் நாற்பத் தென்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்த மாய் ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்திலே பெறவும்'' (தெ இ.க தொ எண் 65) எனவரும் கல்வெட்டுப் பகுதியால் நன்கு புலனாகின்றது. தஞ்சைக் கோயிலில் தேவாரம் பாடுதற்கு நியமிக்கப்பெற்ற பிடாரர்கள் ஐம்பதின்மர் பெயர்களும் சிவன் என்ற பட்டத்துடன் மேற்குறித்த கல்வெட்டிற் பொறிக்கப்பெற்றிருத்தல், திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்யும் பிடாரர்கள் பால் இராசராசன் கொண்டுள்ள நன்மதிப்பினைப் புலப்படுத்துவதாகும் இவர்களிற் பலர் தேவார ஆசிரியர் மூவர்க்குரிய திருப்பெயரையே தமக்குரிய இயற் பெயராகக் கொண்டுள்ளனர். இவர் தம் பெயரமைப்பினை யெண்ணுங்கால் இவர்கள் விண்ணப்பஞ்செய்யும் திருப்பதிகங்கள் மூவர் முதலிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களே யென்பது நன்கு விளங்கும். முதலாம் இராசராசனுக்கு முன்னிருந்த சோழமன்னர் அனைவரும் திருக்கோயில்களில் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்தற்கு நிபந்தம் வழங்கியுள்ளார்கள் என்றாலும் அருண்மொழித் தேவனாகிய இவ்வேந்தர் பெருமானைப் போன்று ஐம்பதின்மர் என்ற பெருந்தொகையில் ஓதுவார்களை நியமித்துத் திருக்கோயில்களில் நாளும் இன்னிசையால் திருமுறைத் தமிழைப் பரவச் செய்யத் திட்டம் வகுத்ததாகத் தெரியவில்லை. தேவாரத் திருப்பதிகங்களைத் தேடித் தொகுத்து முறைப்படுத்தித் தந்த நம்பி யாண்டார் நம்பியின் திருமுறைப் பகுப்பினை உளத்துட்கொண்டு இயலிசை வல்லார் பலரும் ஒருங்கு கூடிப்பண்பொருந்தப்பாடி இறை வனை வழிபாடு செய்தற்குரிய திருமுறை வழிபாட்டினை முதன்முதல் வகுத்து வழிகாட்டிய பெருமை முதலாம் இராசராச சோழனுக்கே யுரிய தனிச் சிறப்பாகும். இவ்வேந்தன் இசையுடன் ஆடற்கலை யினை வளர்த்தல் வேண்டித் தஞ்சையிற் குடிய மர்த்திய தளிச் சேரிப்

# இராசராசனும்—கருவூர்த்தேவரும்

மு. சண்முகம் பிள்ளை,

மாமன்னன் இராசராசன் காலத்திலே அவனுக்குக் குருவாய் விளங்கியவர் கருவூர்த்தேவர். இவரைக் கருவூர்ச்சித்தர் என்றும் கூறுவது உண்டு. வைத்தியம், இரசவாதம், பூசாவிதி, வேதாந்தம், ஞானம் போன்ற பல நூல்களை ஆக்கியவரும் இக்கருவூராருக்குக் காலத்தால் மிகப்பிற்பட்டவர் எனக்கருதப்படுபவருமாகிய கருவூர்ச் சித்தர் என்பார் இவரின் வேறானவராவர். இந்தச் சித்தரையும் இவருக்கு முற்பட்டு 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கருவூர்த் தேவரையும் ஒருவராகக்கருதி ஒருவருக்கு உரிய செய்தியை மற்றொருவருக்கு ஏற்றியும் உரைப்பாராயினர். கருவூர்த்தேவரையும் கருவூர்ச்சித்தர் எனக் கூறலாமாயினும் இருவரையும் வேறு பிரித்து அறியக் கருவூர்த்தேவர் என்றே குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

கருவூர் கொங்கு நாட்டில் உள்ளது. பண்டைய சேரமன்னர்களின் கோநகராகவும் இது நிகழ்ந்தது. கரிகாற் சோழனோடும் தொடர்புடைய பழையநகரம் இந்தக்கருவூர் பகைவரிடமிருந்து

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெண்டுகளுக்கு எடுத்தபாதம், மழலைச் சிலம்பு, சீருடைக்கழல் எனவரும் திருமுறைத் தொடர்களைப் பெயராகக் குறித்துள்ளமை திருமுறைகளை நாட்டுமக்களுள்ளத்தே நிலைபெறச் செய்யுந் திறத்தில் இவ்வேந்தன் கொண்ட பேரார்வத்தினை இனிது புலப்படுத்துவதாகும்.

சிவபாத சேகரனாகிய இராசராசன் தான் நாள்தோறும் நிகழ்த்தும் சிவபூசையில் இசையில் வல்ல பிடாரர்களைக் கொண்டு தேவாரத் திருப்பதிகங்களைப் பண்பொருந்தப் பாடும்படி செய்து திருமுறைத் தெய்வ இசையால் சிவபரம்பொருளை நினைந்து போற்றும் தூய சிந்தையனாகத் திகழ்ந்தான். இவ்வாறு உலக மக்கள் பலருங் கூடும் திருக் கோயில் வழிபாடுகளிலும் தான் தனித்தமர்ந்து செய்யும் சிவபூசையிலும் திருமுறைகள் இடம்பெற இவ்வேந்தர் பெருமான் செய்த திருமுறைத் தொண்டினையுளத்துட் கொண்டே 'சேயதிருமுறை கண்ட ராசராசதேவர்' எனச் சேக்கிழார் புராணமுடையார் இம்மன்னனைச் சிறப்பித்துப் போற்றியுள்ளார் எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

தப்பிக்கருவூரில் மறைந்து வாழ்ந்தான் இளைஞனாயிருந்த கரிகாற் சோழன். அப்பொழுது சோழநாட்டுப் பேரரசனைத் தேர்ந்தெடுக்கக் கழுமலம் என்னும் ஊரிலிருந்து பட்டத்து யானையை விடுத்தனர். அந்த யானை கருவூரிலிருந்த கரிகாலனுக்கு மாலைசூட்டி அவனை முதுகின்மேல் சுமந்து வந்ததனால் அவன் சோழப்பேரரசனானான்.

*'கழுமலத்து யாத்த களிறும் கருவூர்*
*விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய*
*வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால*
*தீண்டா விடுதல் அரிது.*

என்னும் பழமொழிநானூற்றுப்பாடல் (62) கரிகாலன் வரலாற்றுச் செய்தியை நமக்குத் தெரிவிக்கிறது.

கருவூரில் வாழ்ந்த சங்கப்புலவர்களும் பலராவர். கருவூர்ஓத ஞானி, கருவூர்க்கதப்பிள்ளை, கருவூர்கிழார், கருவூர்ச்சேரமா னெந்தை, கருவூர்ப்பவுத்திரன் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர் இவர்களுள் பக்தி ஞானங்களால் சிறந்து விளங்கியவர் கருவூர் ஞானியாவர். இத்தகு ஞானியரின் கால்வழியில் வந்தவரே இராச ராசன் காலத்தில் வாழ்ந்த கருவூர்த்தேவர்.

செயற்கரிய செய்வார் பெரியர் என்னும் வள்ளுவர் வாக்கை மெய்ப்பிப்பார் போல இராசராசனுக்குக்குருவான கருவூர்த்தேவர் அவனுக்கு அரசியல் வழி காட்டியாய் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டிய சித்தராயும் விளங்கினார். சித்தர்களின் பெருமையைத் தாயுமானவர்.

*'கெசதுரகம் முதலான சதுரங்க மனமாதி*
*கேள்வியின் இசைந்து நிற்பக்*
*கெடிகொண்ட தலமாறும் மும்மண்டலத்திலும்*
*கிள்ளாக்குச் செல்ல மிக்க*
*தெசவிதம தாய்நின்ற நாதங்கள் ஒலிடச்*
*சிங்காச னாதிபர்களாய்த்*
*திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை*
*திகழ்ந்திட வசந்த காலம்*
*இசைமலர் மீதுறை மனம்போல ஆனந்தம்*
*இதயமேற் கொள்ளும் வண்ணம்*
*என்றைக்கும் அழியாத சிவராச யோகமாய்*
*இந்த்ராதி தேவர்க ளெலாம்*



பெருவேந்தன் இராசராசன் பெருங்கொடை வழங்கிய தோர்
ஆணையதைப் புலப்படுத்தும் ஆனைமங்கலச் செப்பேடுகள்
(ஹாலந்து நாட்டு லெய்டன் அருங்காட்சியகத்தில் உள்ளவை)



பெருவேந்தன் இராசராசன்
ஆட்சிக்காலத்திலிருந்த நாணயங்கள்



கருவூர்த் தேவர் அறவுரை கேட்கும்
இராச ராசன் எழில்மிகு ஓவியம்

*விசயசய சயஎன்ன ஆசிசொல வேகொலு*
*இருக்கும்நும் பெருமை எளிதோ*
*வேதாந்த சித்தாந்த சமரசநன் நிலைபெற்ற*
*வித்தகச் சித்தர் கணமே!*
(தாயு. 7. சித்தர். 6)

என்று போற்றுகின்றார். மனம் முதலிய கரணங்களை அடக்கிக் காற்றைப் பிடிக்கும் கணக்கறியும் சிவராச யோகியராய்த் தேவரும் போற்றும் பெருஞ்சிறப்பைப் பெற்றவர் சித்தர் என்பது தெரியவரும். மேலும் வேதாந்த சித்தாந்தங்களையும் கடந்து சமரச நன்னிலை பெற்ற வித்தகராயும் இவர் விளங்கினர். கருவூர்த் தேவரும் இத்தகு பெருமை வாய்ந்த சித்தராகவே திகழ்ந்தவராவர்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் தாம் பாடிய பதிகங்களில் திருக்கடைக்காப்பு வைத்துள்ளார். அவரை ஒத்துக் கருவூர்த் தேவரும் திருவிசைப்பாப் பதிகங்களில் கடைக்காப்பு பாடியுள்ளார். பதிகத்தின் முத்திரைப் பாடலான இப்பகுதியில் தேவர் தம்மைப் பற்றிய சில குறிப்புகளைத் தந்துள்ளார். இக் குறிப்புகளிலிருந்து தெரியவரும் வரலாற்றுச் செய்திகள் சிலவே.

திருக்கடைக்காப்புச் செய்யுள்களில், கருவூரன், கருவூரனேன், கருவூர் என்று இவ்வாறு ஊர்ப்பெயராலே தம்மைச் சுட்டுகின்றார். இவர் கருவூரில் தோன்றியவர் என்பதும் அந்தணர் குலத்தில் வந்தவர் என்பதும் தெரியவருகின்றன. ஆரணமும் அருந்தமிழு மேயன்றிப் பலகலைகளிலும் வல்ல சித்தராயும் சிவ யோகியாயும் இவர் திகழ்ந்தார். கையில் ஒடு ஏந்திப் பிச்சை ஏற்று உண்டு திரியும் எளியராயும் இவர் காணப்படுகிறார். இவருக்கு முன்னை வினைவயத்தால் வந்த ஒருவகை நோயினால் வருந்தினர் என்றும் அருமருந்தாகிய காயகற்ப மருந்து உண்டு உடலினை உறுதி செய்து நீடித்து வாழ்ந்தார் என்றும் கருதுவர். தான் பெற்ற பெரு ஞானத்தால் எல்லா உயிர்களின் நிகழ்ச்சிகளையும் அறியும் பேராற்றல் படைத்து விளங்கினார்.

இராசராசன்(985–1014) தஞ்சைப் பெரியகோவிலில் பெருவுடையாரை நிலைநாட்டும் போது பீடத்துடன் பந்தனமருந்து இறுகிக் கட்டிப்பட்டுப் பற்றாமல் இளகிப்போன நிலை கண்டு இராசராசன் வருத்தமுற்றான். அப்பொழுது கருவூர்த்தேவரால்தான் பெருமானை நிலைநாட்ட முடியும் என்று தெய்வவாக்கு ஒன்று எழுந்ததாம். அப் பொழுது அக் கூட்டத்திலிருந்த போகநாதர் என்னும் சித்தர் கருவூர்த் தேவரை அங்கு அழைத்துவரச் செய்தனராம். தேவர்

வந்து பெருவுடையாரைத் தொட்டுத் தம் தவவலிமையால் மருந்து இறுகிப் பொன்போலாகி இலிங்கத்தைப் பிடித்துக் கொள்ளுமாறு செய்தார். இராச ராசன் பெரு மகிழ்ச்சியுற்றான். அவரைத் தம் குருவாகக்கொண்டு அவர்தம் அறிவுரைபெற்றுச் சிறப்புற்றான். கருவூர்த்தேவர் இராசராசனுக்கு நல்லுரை வழங்கும் பாங்கில் தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தின் மேனிலையில் ஓர் ஓவியம் அமைக்கப்பட்டிருத்தலும் காணலாம்.

இராசராசனின் மைந்தராகிய இராசேந்திரன் காலத்திலும் இவர் இருந்தார். அவன் கட்டிய கங்கை கொண்ட சோழீச்சரத்தையும் இவர் பாடிச் சிறப்பித்துள்ளார்.

கருவூர்த்தேவருக்குப் பின்னாளில் தனிக்கோயில் எடுத்து வழிபட்டு வரலாயினர். தஞ்சைப் பெரிய கோயிலின் மேலைத் திருச்சுற்றில் கருவூராருக்குத் தனிக்கோவில் ஒன்று உள்ளது. கருவூரில் உள்ள திருவானிலைக் கோயிலிலும் திருச்சுற்றில் கருவூரருக்குத் தனிச் சந்நிதி காணப்படுகிறது. இந்த ஊரின் தலபுராணமாகிய கருவூர்ப்புராணத்தின் இறுதிச் சுருக்கம், கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கம்' என்பதாகும். இதில் தரப் பட்டுள்ள வரலாறு பல அற்புதங்களை அவர் செய்ததாகக் கூறுகின்றது. அவர் தஞ்சையில் செய்த பெருஞ்செயலையோ திருவிசைப்பாப்பாடிய செய்தியையோ இது குறிப்பிடவில்லை. எனவே, இப்புராணத்தில் குறிக்கப் பெறும் கருவூரார் கருவூர்த் தேவரினும் வேறாவர் என்று கருத இடமாகியது என்பர்.

கங்கை கொண்ட சோழனாகிய இராசேந்திரன் தாம் எடுப்பித்த கங்கைகொண்ட சோழேச்சரத் திருக்கோயில் விமானத்தின் தென் கீழ்ப்பகுதியில் தம் அருளாசிரியராகிய கருவூர்த்தேவரின் திரு வுருவைக் கல்லில் அமைத்து வைத்துள்ளான். இத் திருவுருவமே கருவூர்த்தேவர்க்கு அமைந்த திருவுருவங்களுள் மிகப் பழமை யானது என அறிஞர் கருதுகின்றனர்.

சோழப் பேரரசர் இருவராலும் போற்றப்பெற்ற கருவூர்த்தேவர் சோழநாட்டிலேயே வாழ்ந்திருத்தல் வேண்டும். இவர் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று இறைவனைப் போற் றித் திருப்பதிகங்கள் பாடியுள்ளார். மெய்யடியார் கூட்டத்து நாளும் இன்னிசை பாடித் தமிழ் பரப்பிய பெருந்தொண்டர் இவர். இவர் தில்லைச் சிற்றம்பலம், திருக்களந்தை, ஆதித்தேச்சரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி,

தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருது என்னும் திருத்தலங்களில் கோயில் கொண்டுள்ள பெருமான் மீது திருவிசைப்பாப் பதிகங்கள் பாடியுள்ளார். மாமன்னரான இராசராசனும், இராசேந்திரனும் தஞ்சையிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும், கட்டிய பெருங்கோயில்களையும் இவர் பாடியிருப்பது சிறப்பாகக் கருதத்தக்கது.

இராசராசேச்சரத்துக் கோயில் கொண்டுள்ள பெருமானே எனக்கு உற்ற உறவினராயுள்ளார். அவருடைய அழகிய திருவடிகள் என் நெஞ்சிடம் புகுந்தன. ஆதலினால் இப்பெருமானைத் தவிர வேறு உறவினர் எனக்கு எதற்காக என்று இராசராசேச்சுரப் பதிகத்தின் முதற்பாடலில் தெரிவிக்கின்றார்.

*'நெற்றியிற் கண்என் கண்ணின்நின்று அகலா;*
*நெஞ்சினில் அம்சிலம்பு அலைக்கும்*
*பொற்திரு வடிஎன் குடிமுழுது ஆளப்*
*புகுந்தன; போந்தன இல்லை;*
*மற்றுஎனக்கு உறவுஏன்? மறிதிரை வடவாற்று*
*இடிபுனல் மதகில்வாழ் முதலை*
*எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை*
*இராசரா சேச்சரத்து இவர்க்கே!'*

என் குடும்பம் முழுவதையும் ஆட்கொண்டு அருளும் பெருமான் என்று அப்பெருமானுக்கு அடிமைத்திறம் பூண்டு தாம் பெற்ற பேற்றினைக் கருவூர்த்தேவர் எடுத்துரைக்கின்றார்.

இராசராசன் மாமன்னனாய்த் திகழ்ந்தமையின் ஏனைய அரசர்கள் தஞ்சையில் வந்துபணிந்து போற்றுவாராயினர். அம்மன்னர்கள் வணங்கும்போது முடிகள் மோத அவற்றில் உள்ள மணிகள் உதிர்ந்து கிடக்கின்றன. மாடமாளிகைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மதில் சூழ்ந்த தஞ்சைநகரப் பெருவீதியிலே பெருமான் திருவுலா வருகின்றார். பெருவுடையார் விடைமேல் வருகின்ற காட்சியைப் போற்றிப் புகழ்கிறது பின்வரும் பாடல்:

*'சடைகெழு மகுடம் தண்நிலா விரிய*
*வெண்ணிலா விரிதரு தரளக்*
*குடைநிழல் விடைமேல் கொண்டுஉலாப் போதும்*
*குறிப்புஎனோ? கொங்குஇணர் அனைய*
*கொடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்து*
*உக்கசெஞ் சுடர்ப்படு குவைஓங்கு*
*இடைகெழு மாடத்து இஞ்சிசூழ் தஞ்சை*
*இராசரா சேச்சரத்து இவர்க்கே!'*

# மாமன்னன் இராசராசனும் தேவாரப் பதியங்களும்

டாக்டர். த. கோ. பரமசிவம்.

மாமன்னன் இராசராசனுக்கும் பிறவாயக்கைப் பெரியோன் சிவ பெருமானுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவன் சிவபாதசேகரன். சிவனைப்பற்றிய பெருமைகளையும் சிறப்புகளையும் பேசி மனித வாழ்க்கையைக் கலையமாக்கிய திருமுறைகளை அரிதின் முயன்று வெளிக் கொணர்ந்து பரவச் செய்த பேராளன். தான் எழுப்பிய ஒப்பற்ற திருக்கோயிலாகிய இராசராசேசுவரத்தில் மூவர் முதலி களான திருநாவுக்கரையர், ஆளுடையப்பிள்ளையார், சுந்தரர் ஆகியோர்க்கு முதன்முதலாகச் செப்புத் திருமேனிகள் செய்து வழிபட்டவன். இராசராசன் இல்லையேல் திருமுறைகள் இல்லை, மூவர் வரலாறும் இல்லை, பின்தோன்றிய முடிமணியாம் பெரிய புராணம் இல்லை ; ஏன்-தமிழிலக்கியத்தின் 300 ஆண்டுக்கால வரலாறே மற்றொரு இருண்ட காலத்தை உருவாக்கியிருக்கும். இந்த பேருண்மையை முதற்கண் மனங்கொண்டு அவன் தேவாரப் பதிகங்களுக்குச் செய்த சிறப்பை ஒரு கல்வெட்டின் துணை கொண்டு இங்குக் காண்போம்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மதில் சூழ்ந்த தஞ்சையின் மாண்பையும் இராசராசேச்சரப் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் திருவருட் பாங்கையும் கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில் பலபடியாகப் போற்றிப் புகழ்ந்துள்ளமை காணலாம்.

*'மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து*
*வஞ்சகர் நெஞ்சகத்து ஒளிப்பார் ;*
*அங்குஅழல் சுடராம் அவர்க்குஇள வேனல்*
*அலர்கதிர் அனையவா ழியரோ*
*பொங்குஎழில் திருநீறு அழிபொசி வனப்பில்*
*புனல்துளும்ப அவிர்சடை மொழுப்பர் ;*
*எங்களுக்கு இனியர் ; இஞ்சிசூழ் தஞ்சை*
*இராசராசேச்சரத்து இவர்க்கே.'*

(திருவிசைப், 9 : 9)

## இராசராசேசுவரத்தில் தேவாரம்

இராசராசனுக்கு முன்பும்மூவர் முதலிகள் அருளிச்செய்ததேவாரப் பதிகங்கள் கோயில்களில் பாடப்பெற்று வந்துள்ளமையைச் சில குறிப்புகளால் அறிகிறோம். ஆயினும் அவற்றை முழுதும் அறிந்தார் களில்லை ; அங்குமிங்குமாகச் சிதறிய பாடல்களை-அவ்வவ்வூர் களிலுள்ளார் அவ்வவ்வூர்களின் பதிகங்களை மட்டுமே அறிந்தார் வாய்க்கேட்டுப் பாடியிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது. தேவாரப் பாடல்களை முறையாகப் பாடும் வழக்கம் இராசராசன் காலம் முதலே தலையெடுக்கத் தொடங்கியது. அம் மாமன்னன் தான் முதன்முதலாகத் தேவாரப் பதிகங்களுக்காக அறக்கட்டளை ஒன்றை நிறுவி நாள்தோறும் பாடிவரும் ஏற்பாடுகளைச் செய்தான். தான் எழுப்பிய இராசராசேசுவரத்தில் மட்டும் நாள்தோறும் தேவாரப் பாடல்களைப் பாடி வருவதற்காக 48 ஓதுவார்களையும் உடன் இசை எழுப்புவார் இருவரையும் நியமித்து, அவர்களுக்கான ஊதியத்தையும் வரை செய்து அவ் அறக் கட்டளையைக் கல்லில் பதிவு செய்து பெருமைப்படுத்தினான்.

ஒரு கோயிலில் மட்டும் 50 பேர்கள். அதுவும் முழுநேர ஊழியமாகப் பணிசெய்யுமாறு ஏற்பாடு செய்திருக்கிறான் என்றால் அவன் தேவாரப்பதிகங்கள் மாட்டுக் கொண்ட பற்றும், திருக்கோயில் களில் எப்போதும் தமிழ் மணம் வீசவேண்டும் என்பதில் கொண்ட ஆர்வமும் தெளிவாக விளங்கும்.

ஆயிரக்கணக்கான அந்தணர்களைப்பிற மாநிலங்களிலிருந்தும் கொண்டுவந்து குடியேற்றியவன் அவன். வடமொழி ஆகமபூசை முறைகளை ஆதரித்தவன். ஆயினும் தான்கட்டிய பெரியகோயிலில் வேத மந்திரங்களை ஓதுவதற்கு இத்தகு சிறப்பை அவன் செய்ய வில்லை. இவ்வுண்மையை ஊன்றிப்பார்க்கும்போது அவனது தமிழுணர்வும் தேவாரப்பற்றும் மூவர்முதலிகள்பால் அவன் கொண்ட காதலின் சிறப்பும் மேலும் விளக்கமாகின்றதன்றோ?

## கல்வெட்டு காட்டும் அரச ஆணை :

'உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த பிடாரர் கள் நாற்பத்தெண்மரும், இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும்,இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும், ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேஸரியோடொக்கும் ஆட வல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப்பண்டாரத் தேய் பெறவும்',

இது கல்வெட்டின் முதல் பகுதியாகும். அரச ஆணையின் தலைமைச் செய்தியைத் தெரிவிப்பதாகும். என்ன தொழில், எத்தனை ஆள்கள், எந்தஇடம், எவ்வளவு ஊதியம், போன்ற விவரங் களைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் அடுத்தபகுதி இராச ராசனுக்கு இப்பணி தொடர்ந்து நடைபெறவேண்டுமே. நிலை யில்லாத இந்த ஐம்பதுபேர்களால் மட்டும் தொடர்ந்து விடுமா? போன்ற எண்ணங்களை உண்டாக்கி, அதற்கான விடிவையும் கண்டு ஆணைவழங்கிய செய்தியைத் தெரிவிப்பதாக அமைந் துள்ளது.

'இவர்களில் செத்தார்க்கும் அனாதேசம் போனார்க்கும் தலை மாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப்பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்யவும்.

'அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப்பெறவும். அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாரின்றியொழியில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும், ஆக இப்படி உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருளின படி கல்லில் வெட்டியது' என்று அக்கல்வெட்டு தொடர்கிறது. அக் கல்வெட்டின் இறுதிப் பகுதி அவனே தெரிந்தெடுத்த 50 பேர்களின் பெயர்களை விரிவாகக் கூறிமுடிகிறது

ஆணையின் இரண்டாம் பகுதி, இத்திருப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். அதுவும் தகுதியுடையாரே அதனைச் செய்யவேண்டும். திருப்பணியில் வரும் இடையூறுகளான இறப்பு, இடப்பெயர்ச்சி, தகுதியில்லா முறை, தலைமாறின்றிப் போதல் போன்றவற்றையும் களைந்து மாற்று ஏற்பாடுகளைச் செய்யும் வழிவகைகளையும் நீடு நினைந்து இயற்றிய சிறப்பைத் தெரிவிக் கின்றது. இராசராசேசுவரத்தில் நாளும் தமிழ் மணக்க வேண்டும். தகுதியுடைய இசைவாணர்களைக் கொண்டே அதுபரவவேண்டும். இவ்விரு கோட்பாடுகளில் அவன் கொண்ட பற்றையும், செயற் பாட்டையும் நாம் தெளிவாக உணரலாம்.

## திருப்பதியம் விண்ணப்பம்

இராசராசன் தேவாரப்பாடல்களைத் திருப்பதியம் என்றே குறிப்பிடுகின்றான். பதியம் என்ற சொல் பதிகம் என்பதன் மாற்று வடிவமாகும். பதிகம் என்ற சொல் தெய்வத்தைப்பற்றிய 10 பாடல்

கள் கொண்ட தொகுப்பு எனப் பொருள்படும் இலக்கிய வகையாகும். மூவர் முதலிகள் அருளிச் செய்த பாடல்கள் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்ட தொகுப்புகளாய் அமைந்திருக்கின்றன. கண்டாரைக் கண்ணாலும் கருத்தாலும் கவரும் சிவனைப் பற்றிய பாடல்களாகவும், கேட்டாரைப் பிணித்து உய்விக்கும் அற்புதத்தை நிகழ்த்தும் பாடல்களாகவும் அவை திகழ்வதால் தேவாரப் பாடல்களை அவன் திருப்பதியம் என்றே தன் ஆணையிலும் குறிப்பானாயினான்.

இறைவனுடைய புகழை, பெருமையை, வரலாற்றை, வாழ்வியல் சிந்தனைகளை வழங்குவன அவை. அத்தகு செய்திகளை அவனிடமே பாடி நிற்பதால் அதனை விண்ணப்பஞ் செய்தல் என்று குறித்தான் போலும்! தொண்டு செய்தே பக்தியைப்பரப்பிய அப்பர் பெருமானிடம் அவன்கொண்டகாதல் மிகுதி. அவரது திருவாக்கில் முகிழ்ந்த 'பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்' (திருத்தாங்கானை மாடப்பதிகம்) என்ற தொடர் திருமுறை முழுவதற்குமாய் அமைந்த நோக்கை வெளிப்படுத்துவதாகும். இதனை ஆழ்ந்து சிந்தித்த இராசராசன் தேவாரம் பாடுவதை–இறைவனுக்காகவும் – மக்களுக்காகவும் பாடப்படுவதை - (பதிகங்கள் மக்கள் இவ்வாறு வணங்கி, இவ்வாறு உய்ய வேண்டும் என்று முறையிடும் செய்தியைத் தாங்கியமைந்திருத்தலின்) விண்ணப்பம் என்ற சொல் மிகப் பொருத்தமாகவும், செறிவாகவும் விளக்குவதாகக் கொண்டு அதனையே பயன்படுத்துகிறான். ஆடவல்லான், செப்புத் திருமேனி, உடையார் (சுவாமி என்பதற்கு) தலைமாறு, வளநாடு, போன்ற அழகிய தமிழ்ச் சொற்களை அறிமுகஞ் செய்தமை போலவே இவ்விண்ணப்பத்தையும் அவன் மொழிப் பற்றோடு அறிமுகஞ்செய்து நடைமுறையில் கொண்டு வந்தான் எனில் அது மிகையாகாது.

### விண்ணப்பஞ் செய்வார்.

தேவாரப்பதிப்பங்களை நாள்தோறும் முறையான இசையுடன் விண்ணப்பஞ்செய்வார்களை இன்று நாம் ஓதுவார்கள் என்றும் ஓதுவாமூர்த்திகள் என்றும் அழைக்கின்றோம். ஆயின், அன்று இராசராசன் அவர்களை ''பிடாரர்'' என்றே அழைத்திருக்கிறான். பிடாரர் என்ற சொல்லுக்கு மருத்துவர், இசைக்காரர், ஆசாரியர் போன்ற பொருள்கள் இருப்பதை நாம் அறிவோம். தேவாரம் ஓதுபவர்கள் இம்மூன்று பொருள்களுக்கு முரியவர்களாகத் திகழ்ந்தமையின் மிகப் பொருத்தமான பொருட்செறிவான அச்சொல்லாலேயே அவர்களை அழைத்தமை போற்றற்குரியதாம்.

ஆம், அவர்கள் நம் உள்ளப்பிணியைப் போக்கும் அற்புதமான பாடல்களைப்பாடி, உள்ளப்பிணியையும், அதனால் உண்டாகும்

உடற்பிணியையும் ஒரு சேர நீக்குவர். அவர்கள் பாடும் பாடல்கள் இம்மைப் பிணிகளான இவ்விரண்டைத் தவிரப்பிறவிப்பிணி என்ற ஒப்பற்ற பிணியையும் போக்கி பிறவாயின்பத்தை நல்குவன. எனவே அவர்களை மருத்துவர் என்பதில் தவறில்லை. அவர்கள் காலையில் எந்தப் பண்ணில் விண்ணப்பஞ் செய்ய வேண்டும், மாலையில் எந்தப் பண்ணில் பாடவேண்டும். இரவில் எப்பாடல் களைப்பாடித் துதிக்க வேண்டும், எந்தெந்த நிலங்களில் எந்தெந்தப் பண்ணில் பாடிப் பரவவேண்டும் என்பன போன்ற இசை நுணுக்கங் களையறிந்துபாடும் இசை வல்லுநர்கள். தேவார இசையில் இடம் பெறாத தமிழ்ப்பண் இல்லை. எனவே அவர்களை இசைகாரர் என்பதில் வியப்பில்லை. அவர்கள் சிவனையே நாளும் சிந்திப்ப வர்கள், சிவன் புகழையே பாடிப்பரவுவர், சிவத்தொண்டுகளையே செய்து பிற ஆன்மாக்களையும் உய்யும் வகை உய்வுபடுத்தும் ஒழுக்க சீல ஆசாரியர்கள். ஆகவே, அவர்களை ஆசாரியர் என்று சொல்வதில் செறிந்த பொருளுண்டு எனலாம். இவ்வாறு பல்வேறு காரணங்களை அடியாகக் கொண்டே தேவார ஓதுவார்களைப் பிடாரர் என்ற சொல்லால் இராசராசன் அழைத்து மகிழ்ந்தான்.

## தேவார இசை

திருப்பதியங்களை அவர்கள் எவ்வாறு பாடினர் என்பது குறித்து அதிகம் நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை. தேவாரத்துக்குரிய உடன் இசைக்கருவிகளாக இரண்டு தோற்கருவிகளை மட்டுமே இக்கல்வெட்டில் நாம் காண்கின்றோம். அவை உடுக்கையும் கொட்டி மத்தளமும் ஆகும். இன்று பெரும்பாலும் பயன்படுத்தப் பெறும் மிருதங்கம், குழல், தாளம் போன்றவையும் குறிப்பிடப் பெற வில்லை. ஆம், குழல், நாதசுரம் போன்ற துளைக்கருவிகளோ; யாழ், வீணை போன்ற நரம்புக்கருவிகளோ, பதலை (தபேலா), முழவு, தவில் போன்ற தோற்கருவிகளோ, தாளம் சேகண்டி போன்ற கஞ்சக் கருவிகளோ அன்றைய திருப்பதிய இசையில் இடம் பெறாதது குறிக்கத் தக்கது. இன்று உடுக்கையும் கொட்டி மத்தளமும் அம்மன் கோயில்களில் மட்டும் சிறு தெய்வ வழிபாட்டு டன் நின்றுவிட்டன. அன்று தேவாரப் பண்களுக்கேற்ப உடுக்கை வாசிக்கும் விற்பன்னர்கள் இருந்தனர். இன்று அவ்வாறு இசைப்பார் இல்லை.

நாள்தோறும் விண்ணப்பஞ் செய்த அவர்கள் தனித்தனியே பாடினார்களா? அல்லது 48 பேர்களும் ஒன்றிப்பாடினார்களா என்பது தெரியக்கூடவில்லை. எனினும் இணைந்து பாடியிருப்பர் என்றே எண்ணத் தோன்றுகிறது. கிட்டத்தட்ட தியாகராசரின்

திருவையாறு ஆராதனையில் பலரும் ஒன்று கூடி பஞ்சரத்ன கீர்த்தனை பாடுவது போன்று அமைந்திருக்கலாம்.

## ஊதியச்சிறப்பு

விண்ணப்பஞ் செய்யும் பிடாரர்களுக்கு அவன் நாள்தோறும் வழங்கிய ஊதியம் மிகச் சிறந்த நிலையில் அமைந்திருந்தது. விண்ணப்பஞ் செய்யும் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 3 குறுணி நெல் ஊதியமாகத் தருமாறு ஆணை பிறப்பித்துள்ளான். அவ் வூதியம் இன்று அரசிதழ் பதிவு பெற்ற ஓர் அலுவலரின் நாள் ஊதியத்துக்கு ஒப்பானதாகும். இப்படி 50 பேருக்கும் வழங்கிட ஆணை. ஊதிய விவரத்தில் இன்னொரு சிறப்புச் செய்தி இன்று பக்கவாத்தியக்காரர்களுக்கு வாய்ப்பாட்டு பாடுவாரின் ஊதியத்தை விடக் குறைந்த ஊதியத்தை வழங்குவதையே காண்கிறோம். ஆயின் அன்று இராசராசன் பாடுவார்க்கும் இசைக்கருவிகளை இயக்கு வார்க்கும் ஒரே அளவு ஊதியத்தைவழங்கிச் சிறப்பித்துள்ளான். ஊதியக் கொள்கையையும். தேவார ஓதுவார்க்கு அவன் அளித்த சிறப்பையும் இச்செய்தி நமக்கு நன்கு விளக்குவதாகும்.

ஊதியத்தை நாட்கூலியாக வழங்கியதில் சிறப்புச் செய்தி உள்ளது. பணி செய்தால்தான் ஊதியம் பெறமுடியும்-உடல்நிலை காரணமாகவோ வெளியூர் செல்லல் போன்ற பிற காரணமாகவோ விண்ணப்பஞ்செய்ய முடியாதவர்கள் அவர்கட்கு ஈடாக-தகுதி யானவர்களை வேண்டிய நாளைக்கு அமர்த்தி விண்ணப்பஞ்செய்ய வேண்டும். அவ்வாறு பிறர் செய்யும்போது செய்தவர்களே அவ் ஊதியம் பெறவேண்டும்-இந்த அடிப்படை எக்காரணம் கொண்டும் ஊழியம் தடை பெறுதல் கூடாது என்ற சிறந்த செயற்திறனைக் காட்டுவதாகும்.

## பீடாரர் பெயர்களால் அறியலாகும் சிறப்புச் செய்திகள்

தேவாரத்தை அவன் உலகந்தழுவிய பெருமறையாகக் கருதி னான்.அதை ஒரு நாட்டாரோ,ஒரு இனத்தாரோ,ஒரு மொழியாரோ, ஒரு வகுப்பாரோ,ஒரு குடியாரோ,ஒரு நிறத்தாரோ, ஒரு வயதாரோ, நிலையாரோ மட்டுந்தான் பாடவேண்டும் என்று நினைக்கவில்லை. ஆண்டவன் முன் அனைவரும் சமம். எனவே அனைவரும் பாடுந் தகுதியும், வழிபடும் தகுதியும் படைத்தவர்கள் ஆவர் என்பது அவனது கொள்கை. இதனை அவன் தெரிந்தெடுத்த 50 பேர்களின் முகவரி நமக்குப் புலப்படுத்துகிறது.

ஒவ்வொருவர் பெயரும் மூன்றாக நான்காக அமைந்துள்ளன. இயற்பெயர், தேவாரச்சொல்லோ தொடரோ கொண்ட தகுதிப்

பெயர், இராசராசேச்சுரத்துடன் கொண்ட சிறப்புப் பெயர்-சிவனுடன் ஒன்றிய சிவப்பெயர் (தீட்சா நாமம்) என்ற முறையில் அமைந் துள்ளன. அவர்தம் பெயர் முன் அமைந்த ஊர்ப்பெயர்கள் அவர் தம் ஊரையும் நாட்டையுஞ்சுட்டுவன.

'திருவெணாவல் செம்பொற்சோதியான தக்ஷிணமேருவிடங்கப் பிச்சனான ஞாநசிவன்', 'பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜ ராஜப்பிச்சனான சதாசிவன்'

இப்பெயர்களில் திருவெணாவல் என்பது ஊர்ப்பெயர், செம் பொற்சோதி, திருவாஞ்சியத்தடிகள் என்பன தேவாரத்து இடம் பெற்ற தொடர்களாலான தகுதிப் பெயர். தக்ஷிணமேருவிடங்கப் பிச்சன், இராஜராஜப்பிச்சன் என்பன இராசராசேசுவரத்துடன் ஒன்றிய சிறப்புப் பெயர்கள். ஞானசிவன், சதாசிவன் என்பன சிவ னோடு ஒன்றிய ஆசாரியப் பெயர்களாம்.

இவர்களில் எல்லாருடைய பெயரும் சிவன் என்றே முடிவது சமய உலகில் ஒரு சிறப்பு நிலையாகும். சதாசிவன், ஞானசிவன், பூர்வசிவன், மநோத்மசிவன், தர்மசிவன், கவசசிவன், ஸத்யசிவன், வாமசிவன், நேத்ரசிவன், ஓங்காரசிவன், தத்புருஷசிவன், உருத்ர சிவன், அகோரசிவன், விக்ஞானசிவன், யோகசிவன், ஈசானசிவன், ஹிருதயசிவன், மகாசிவன், சோமசிவன் எனச் சிவப்பெயர்களாகவே அவர்தம் பெயர்கள் முடிகின்றன.

செம்பொற்சோதி, அம்பலத்தாடி, சீருடைக்கழலான், திரு நாவுக்கரையன், திருஞான சம்பந்தன், கபிலாயன், ஆரூரான், எடுத்த பாதம், சீராளன், சிவக்கொழுந்து, அம்பலக்கூத்தன், மழலைச்சிலம்பன், நமச்சிவாயம், பெண்ணோர்பாகன், என்பன திருப்பதியத்தோடும், நாயன்மாருடனும் ஒன்றிய நிலையைக் காட்டும் சிறப்புப் பெயர்களாம். இவை ஊழியத்தைக்காட்டுவதுடன் தேவாரப்பதியத்துடன் அவர்கள் ஒன்றிய நிலையையையும் காட்டு வனவாம். இவை அத்தனையும் திருப்பதிகங்களில் இடம் பெற்ற சொற்களும் சொற்றொடர்களுமாம். திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யும் பணியாளர்க்கு எவ்வளவு பொருத்தமான பெயர்கள் இவை!

ஐயாறன், திருவெணாவல், திருவாய்மூரான், திருமலைகூத்தன் காளிசம்பந்தன், மறைக்காடன், ஆரூரன், என்பன அவர் தம் ஊர்ப் பெயர்களையும், இதற்குமுன் அவர்கள் பணிசெய்து வந்த ஊர் களையும் குறிப்பனவாம்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடுகள் புலனாக்கும் இராசராச சோழனின் பேராற்றல்கள்

தொகுப்பு: பேராசிரியர் **சி. கோ. தெய்வநாயகம்.**

சங்க காலத்திற்குப் பின் சற்றேறத்தாழ ஏழு நூற்றாண்டுகள் வரலாற்றில் சிறப்பிடம் பெறாத சோழர் மரபினை 'சூரிய குலம்' என்பதற்கு பொருள்பட கி. பி. 9ஆம் நூற்றாண்டில் ஒளிவழங்கச் செய்தவன் பரகேசரி விசயாலய சோழனாவன். அது முதலாகக் கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை நான்கு நூற்றாண்டுகளில் தமிழகப் பெருமை பெறும்வண்ணம் பேரரசோச்சிய சோழர் குடியின் சிறந்த தோன்றல்கள் முதல் இராசராசனும், முதல் இராசேந்திர சோழனுமாவர்.

தமிழகத்தின் கட்டிடக் கலைச்சிறப்பிற்கும், எண்ணிக்கைக்கும், கல்வெட்டுப் பெருக்கத்திற்கும், சிற்பக்கலையின் செழுமைக்கும், காரணங்கள் இவர்களே. இராசேந்திர சோழனது ஆட்சிக்காலத்தில் வெளியான செப்பேட்டுத் தொகுதிகளுள் நான்கு தொகுதிகள்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

காச்யபன், பட்டாலகன், அம்பலத்தாடி, கூத்தன், அரையன், பொற்சுரன், நக்கன், அப்பி, மாதேவன், செட்டி, ஐந்நூற்றுவன், ஆச்சன், சுசபாலி, சோமன், செல்வன், இராமன், போன்ற அடைகள் அவர்தம் குலம், தொழில், குடி ஆகியவற்றை எடுத்துக் காட்டுவன ஆம் மறையவர்களைத் தூயதமிழ் பாடும் வண்ணம் ஆளாக்கிய பெருமை இராசராசனுக்கே உரியது. தூமறைபாடும் வாயனாம் இறைவன் சொற்றமிழ் காதலித்தானன்றோ ? அதனை இராசராசன் நிகழ்த்திக் காட்டினான்.

இவ்வாறு தேவாரப்பதிகங்கள் மீது இராசராசன் கொண்ட பற்று, கொள்கை, சிறப்பு ஆகிய பல செய்திகளை அவன் நிறுவிய திருப்பதிய விண்ணப்பக்கட்டளையைக் காட்டும் கல்வெட்டு வெளிப்படுத்துகின்றமையைக் காண்கிறோம். நாம் செய்த பாவம் இன்று ஒரே ஒரு ஓதுவார்கூட அக்கோயிலில் இல்லை. திருப்பதிய விண்ணப்பம் இல்லை. நம் தவக்குறைவையும் சமய இழி நிலையையும், தமிழ்மொழிமீது கொண்ட புன்காதலையும் என்னென்பது!

கிடைத்துள்ளன. அவற்றுள் இவனது எட்டாவது ஆட்சியாண்டாகிய கி. பி. 1020ல் வெளியிடப்பெற்றது திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலப் பேரறச் செப்பேட்டுத் தொகுதியாகும். இத்தொகுதியே கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேட்டுத் தொகுதியாகும்.

கி. பி. 985 முதல் 1014 வரையில் தமிழகத்திலும் வட இந்தியாவிலும் மட்டுமல்லாது கடல் கடந்தும் சோழர்களின் பேரரசினைப் பரவச்செய்து தஞ்சையிலிருந்து அரசோச்சிய மாமன்னர்கள் முதல் இராசராசசோழனும் அவன் மகன் முதல் இராசேந்திர சோழனும் ஆவர்.

அரச இலக்கணங்கள் அனைத்தும் அமைவரப்பெற்ற இராசராசன் தமது ஆட்சிக்காலத்தே நிறுவிய அழியாக் கலைச் சின்னம் தஞ்சைப் பெரியகோயிலாகும். ஆயிரமாண்டுகள் கழிந்தும் அவனது பேராட்சிச் சிறப்பினை அழியாச் சான்றென விளக்கி நிற்பது அக்கற்றளியாகும். அதனைப் போன்றே தமிழன்னைக்கு நாளும் நற்றொண்டாற்றிவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உடைமையாக உள்ள ''கரந்தைத் தமிழ்ச்சங்கச் செப்பேட்டுத் தொகுதியும்'' இராசராசனின் புகழ் பாடுகின்றது.

இராசராசனின் வரலாற்றில் புதிய, சிறந்த நிகழ்ச்சிகளை இத்தொகுதியின் முதற் பகுதியாகிய மன்னர் மரபுப் புகழ்ச்சியுரையின் வடமொழிச் செய்யுட்கள் விளக்குகின்றன. இவ்வடமொழிச் செய்யுட்களை பேராசிரியர் சி.கோவிந்தராசனார் அவர்கள் அற்றைநாள் சரசுவதி மகால் நூலக வடமொழிப் பண்டிதர் திருமிகு. நாவில்பாக்கம் வேதநாதாச்சாரியரின் துணையுடன் 1952இல் தமிழ்ப்படுத்தி தமிழ்ப்பொழிலில் வெளியிட்டுள்ளார்கள். அத்தமிழாக்கப் பகுதியினை அடுத்துக் காணலாம். 1-26 எனத் தொடங்கும் எண் வரிசையில் 1 என்பது தொடர் எண்ணையும், 26 என்பது முதற்பகுதியின் செய்யுள் எண்ணையும் குறிப்பதாகும்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேட்டுச் செய்திகளில் முதல் இராசராசன்

1-26 அரசர்களுள் சிறந்த அவன் (II பராந்தகன்) வானுலகைக் காப்பதற்குச் சென்ற பொழுது அரசர்களின் முடிவரிசைகளால் தழுவப்பட்ட பாதபீடத்தை உடையவனும் சோழ மரபிற்கு விளக்குப் போன்றவனுமான (அந்த) இராசராசன் என்னும் அவனுடைய மகன், ஆதிசேடனுடைய உடலின் அழகைப் பற்றுகிற புயத்தினால் சுமை பொருந்திய இவ்வுலகைத் தாங்கினான்.



இராசேந்திர சோழன் பெருங்கொடை செப்பும்
கரந்தைச் செப்பேட்டின் காப்புமிகு ஏடுகள்



கரந்தைச் செப்பேட்டின் காப்பு முத்திரை

2-27 பெருவலியினையே செல்வமாகக் கொண்டவனுமான சீராசராசன் சிங்கள, பாண்டிய, கேரள அரசர்களையும் கொங்கேசுரவர்களையும், மாளவர்களையும், தெலுங்கர்களையும், கங்கர்களையும், கலிங்கர்களையும், வங்கர்களையும், மகதர்களையும், சாளுக்கிய அரசர்களையும், குருநாட்டு அரசர்களையும், ஏனைய எல்லா அரசர்களையும் தோள்வலியால் (போரில்) வென்று அவர்களுடைய யானைகளையும், குதிரைகளையும், நாடுகளையும், இரத்தினங்களையும், செல்வங்களையும் கைப்பற்றினான்.

3–28 எவனுடைய யானைகளின் தந்தங்களாலுண்டான வடுக்கள் இன்றளவும் துங்கபத்திரை ஆற்றினுடைய கரைகளிலுள்ள பலையைச் சார்ந்த இடங்களில் எங்கும் விளங்குகின்றனவோ.

4-29 அவன் (இராசராசன்) ஊழிக்காலத்துக் கடல் போன்ற தனது படையைத் திருப்பிவிட்டு ஒரு நொடியில்தான் ஒருவனாகவே குதிரையில் ஏறிக் கொண்டு மிக்க வேகத்துடன் வந்து கொண்டிருக்கிற சத்தியாசிரயனுடைய படையை,விண்ணினின்றும் வேகத்துடன் விழுகின்ற கங்கையைச் சிவபெருமான் சடையினால் தாங்கியதைப் போல் விளையாட்டாக (தனது) கொடிபோன்ற வாளினால் ஏற்றான்.

5–30 பெருந்தோள் படைத்த அவன், வாணாசுரனையொத்த ஒளியுள்ளவனான வாணராசனைப் படைக்கலங்களால் அடியோடு அழித்து போகதேவனுடைய தலையைத் துணித்தான்.

6-31 கேசவனுக்கு ஒப்பானவனும் கேசவன் என்னும் பெயருள்ளவனுமான சத்தியாசிரயனுடைய சேனைத் தலைவன் அந்தராசராசனால் போரில் உயிருடன் பிடிக்கப்பட்டான்

7-32 பகைவருடைய படையை அழித்துக் கொண்டிருக்கும் அவ்வரசரேறு ஊழிக்காலத்தில் எல்லா மக்களையும் அழிக்கும் பினாகம் என்னும் வில்லையுடைய சிவபெருமான் போல் விளங்கினான்.

8-33 அவ்வரசனால் (இராசராசனால்) பகைவர்களின் படை அழிக்கப்படும்பொழுது ஆங்காங்கு இருகால்கள், இருதுடைகள், வயிறு, மார்பு, கைகள், தலை இவைகளில் வெட்டுப்படாதான் ஒருவனும் இல்லை.

9-34 அவன் (இராசராசன்) குதிரைகளின் வரிசைகளாகிற அலைத் தொகுதிகளை உடையதும், யானைகளாகிற முதலை

களால் சூழப்பட்டதும், காலாட்களின் கூட்டங்களாகிய கொந்தளிக்கும் நீர்ப்பரப்பை உடையதும், மண்ணுலகத்தையே மறைப் பதுவுமான சத்தியாசிரயனுடைய படையாகிய கடலைத் தனது புயங்களாகிய மந்திர மலையினால் வலிமையுடன் கடைந்து புகழாகிய மதியுடன் வெற்றித் திருமகளையும் விரைவில் ஏற்றுக் கொண்டான்.

10-35. மனுவம்சத்திற்குக் கொடிபோன்றவனும், எமனுக் கொப்பானவனுமான அவன் (இராசராசன்) ஒரே குதிரையுடன் வலிமை பொருந்திய சத்தியாசிரயனை இரத்த ஆறுகள் சூழ்ந்த போர் முனையினின்றும், ஒரேநொடியில் ஓடச்செய்து, அவனது தோள்வலியால் ஈட்டப்பட்ட மதம் பொருந்திய யானைகள், குதிரைகள், இரத்தினங்கள், பெண்கள், குடைத்தொகுதிகள் இவை யாவற்றையும் பறித்துக் கொண்டான்.

11-36 கதிரவன் எழுதலினால் பளபளப்பான தாழ்வரைகளை உடைய மலைவரையிலும் (உதய பர்வதம்) தென்கடல் வரையிலும் பகலவன் போய் மறைகிற மலைவரையிலும் சிவபெருமான், வீற்றிருக்கும் சிறந்த மலைவரையிலும் (இமயம்) தங்களுடைய மரபுகளைக் காப்பாற்றுவதில் நோக்கங் கொண்ட அரசர்கள் யாவரும் பலவகையான இன்பங்களை 'தாம்) அனுபவிப்பதற்கு நித்யாதித்ய விநோதனுடைய (நாளும் நிலைத்து நிற்கும் ஞாயிறு போன்ற அவ்வரசனுடைய) தாமரை போன்ற இரு பாதங்களை அடைந்தனர்.

12-37 வள்ளலான அவ்வரசன் தம்பாதத்தை அடையும் அரசர்கட்கு பல்லாற்றானும் ஆதரவு கொடுத்து வந்தான். அதனால் இணையற்ற வீறுடைய அவனை உலகில் நல்லோர்கள் 'இராசாசிரயன்' என்று சொல்லுகிறார்கள்.

13-38 தேவேந்திரன், எமன், வருணன், குபேரன் ஆகிய இவர்களுடைய செல்வங்கள் யாவும், மனிதருட் சிறந்தவனான அவனால் (இராசராசனால்) முறையே அவரவர்களுடைய திசைகளை வென்று பறிக்கப்பட்டன.

14-39 கலியின் வலியைச் சிதைப்பதற்காகத் திருமாலே உலகில் பிறந்துவிட்டார் என்று எவனைச் சிறப்பித்துச் சொல்லு வார்களோ அப்படிப்பட்டவனும் மனுக்குலத்திற்கு அணியாய் விளங்குகின்றவனுமான மதுராந்தகன் என்னும் அரசனைப் புத்திமானான அவ்வரசன் தோற்றுவித்தான்.

15–40 அவன் (மதுராந்தகன்) புன்சிரிப்பினாலும், வடிவழகினாலும் தாய் தந்தையர்க்கு மகிழ்ச்சியையும், பகைவர்களுக்குப் பெரும் அச்சத்தையும் நாளும் கொடுத்துக் கொண்டு வளர்ந்து வந்தான்.

16–41 அவன் எனது பொறையைத் தரை தாங்கும் தரமுடையதோ இல்லையோ என்று ஐயுற்றவன் போல, செவிலித் தாயரின் கையைத் தன் கையால் பற்றிக் கொண்டு தரையின் மீது மிக மிக மெதுவாகக் கால்களை (எடுத்து) வைத்தான்.

17–42 அவன் இளம் பருவத்திலேயே எல்லா வேதங்களையும் சாத்திரங்களையும் அறிந்தவனாய், குதிரை ஏற்றம் யானை ஏற்றம், தேரேறுதல் இவைகளில் மிக்க பயிற்சியுள்ளவனும், வாட்போரின் நுணுக்கங்களை அறிந்தவனும், எறிபடைக் கலங்களில் தேர்ச்சி பெற்றவனுமாகி,

18-43 இராசராசன் பூமியை அனுபவித்து விட்டுச் சொர்க்கத்தைச் சுகமாக அனுபவிப்பதற்குச் சென்ற பொழுது குணங்களாகிய இரத்தினக் குவியல்களுக்குக் கடல் போன்றவனான தைரியம் நிறைந்த இந்த மதுராந்தகன் பூமியின் பாரத்தைத் தாங்கினான்.

19–51 மான கேடத்தை நான் பிடிக்காத வரையில் ''கரிஹரவிகாரம் செய்வதில்லை'' என்னும் தந்தையினுடைய (இராசராசன்) சூளுரையை நிறைவேற்றி வைப்பதற்காக அரசன் (மதுராந்தகன்) அப்பட்டணத்தைப் பிடிப்பதில் ஆவல் கொண்டான்.

20-57 எண்ணற்ற சிறந்த நற்குணங்களின் குவியல்களை உடையவர்களும், நேர்நின்றுபோர் செய்வதில் ஈடுபட்ட உறுப்புக்களை உடையவர்களும், போர்க்களத்தில் தேர்ச்சி பெற்றவர்களும் அவரவர் வருணத்திற்கேற்ற தண்டத்தை உடைய வருமான சிற்றரசர்களுடன், மக்களுடைய கண்களையும், மனத்தையும் கவர்ந்தபோரில், அழிக்கும் விளையாட்டைச் செய்து கொண்டு விளங்குகின்ற அவ்வீரன் (மதுராந்தகன்) தனது புயங்களால் தன் தந்தையான இராசராசனை, நிறைவேற்றப்பட்ட சூளுரையை உடையவராகச் செய்தான்.

இவ்வாறு மேலைச் சாளுக்கிய சத்தியாசிரமமான கி. பி. 1009 ஆம் ஆண்டளவில் இராசராசன் வெற்றிபெற்ற நேரடிப்போர் நிகழ்ச்சிகளையும் பிறவெற்றிச் செயல்களையும் பரணி இலக்கியத்தின் தோற்றமுறையில் உணர்த்திச்செல்லும் இச்செப்பேட்டுச்

# இராசராசனும் கோயில் ஆய்வும்

**கி. ஸ்ரீதரன்**

இராசராசன் தமிழகத்தை ஆண்ட மன்னர்களில் சிறப்புற ஆண்ட மன்னன் ஆவான். இவன் காலத்தில் கோயிற்கலைகள் மற்றும் ஆட்சிமுறை சிறந்திருந்தது. இம் மன்னன் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பெற்றன. மேலும்பல கோயில்களில் சிறப்பாக வழிபாடு நடைபெறுவதற்கு தானங்கள் அளிக்கப்பெற்றதாக பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தானங்கள் அளிக்கப்பட்ட போதிலும் அந்நிபந்தம் சரியான முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதை அறிய அவ்வப்பொழுது அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டது என கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு கோயிற்கணக்கு களும், வழிபாடுகளும் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டனவா என்பது குறித்து கோயில் ஆய்வு செய்யப்பட்டதாக பல சோழர் கால கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இங்கு முதலாம் இராச ராச சோழன் காலத்தில் நடைபெற்ற கோயில் ஆய்வுகள் மட்டும் குறிப்பிடப்படுகிறது.

இராசராசசோழன் கல்வெட்டுக்களில் இவ்வாறு கோயில் கணக்குகள், வழிபாடுகள் சரியாக நடைபெறுகிறனவா என்பதை ஆராயும் அதிகாரிகள் 'ஸ்ரீ காரியம் ஆராய்கின்ற' என குறிப்பிடப் படுகின்றனர். இவர்கள் கோயில்களின் கணக்குகளைச் சரிபார்க்க சரியில்லாமல் இருந்தால் தண்டம் விதிக்கவும், அதிகாரம் பெற்றிருந்தனர் மேலும் ஒரு குறிப்பிட்ட நிபந்தம் கல்வெட்டாக

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் இராசராசனது பெரும்புகழை நிலைநிறுத்தும் சான்று களாகும்.

இச்செப்பேட்டுச் செய்திகளும் ஆய்வுரைகளும் தமிழில் பேராசிரியர், சி. கோவிந்தராசனார், சி. கோ தெய்வநாயகம் ஆகிய இருவரையும் ஆசிரியர்களாகக்கொண்டு மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பதிப்பாகவும், ஆங்கிலத்தில் டாக்டர் கே. ஜி கிருஷ்ணன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு நடுவணரசு தொல்பொருளாய்வுத் துறையின் வெளியீடாகவும் வெளி வந்துள்ளன.

பொறிக்கப்படாமல் இருந்தால் கல்வெட்டாகப் பொறிக்கவும் ஆணையிடும் உரிமை இருந்தது.

திருவெறும்பூர், சோமூர், மரக்காணம், திருவாமாத்தூர், திருநாவலூர், தாதாபுரம், திருவல்லம், திருமால்புரம், திருவேதிகுடி முதலிய கோயில்களின் கல்வெட்டுகளில் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன.

## மதுராந்தகன் கண்டராதித்தன்

இவன் உத்தமசோழனின் மகன் ஆவான். முதலாம் இராசராசனின் காலத்தில் கோயில் ஆய்வு செய்யும் அதிகாரியாக இருந்திருக்கிறான். அவனது நான்காம் ஆட்சியாண்டில் இவன் திருமாற்பேறு அக்னீசுவரர் கோயிலை ஆய்வு செய்த போது கோயிலின் நிலங்கள் பிறரால் எடுத்துக்கொள்ளப்பட்டதையும், இறைவனுக்கு படைக்கப்படும் அமுது குறைந்திருப்பதையும் கண்டுபிடித்து குற்றம் செய்தவர்களுக்கு தண்டம் விதித்தான்[1].

மேலும் திருவல்லம் (வ. ஆர்க்காடு) கோயிலுக்கு முதலாம் இராஜராசனின் ஏழாவது ஆட்சியாண்டில் சென்று வழிபாடு செய்தான். இறைவனுக்குப் படைக்கப்படும் அமுதில் கறியமுது, நெய்யமுது, தயிரமுது படைக்காமலும், விளக்குகளும் சரியாக ஏற்றப்படாமலும் இருந்ததைக்கண்டான். திருவல்லம் சபையினரை அழைத்து இக்கோயில் பெருமானுடைய வரவு செலவும், அரசன் ஆணைக்கும் திருவோலைக்கும் உரியவண்ணம் சொல்லுக எனக் கேட்டான். பின்னர் கோயில் நாள் வழிபாட்டிற்கு வருவாய் குறைவாகயிருத்தலைக் கண்டு தான் ஏழு கழஞ்சு நான்கு மஞ்சாடி பொன் அளித்தான். கோயில் நிலங்களை தனதாக்கி கொண்டவர்களுக்கு 74 கழஞ்சு பொன் அபராதம் விதித்தான். கோயில் வழிபாடு முறையாக நடைபெற இவ்வதிகாரி எடுத்துக்கொண்ட முயற்சி போற்றதக்கதாகும்.[2]

## உலகளவித்த திருவடிகள் சாத்தன் :-

உலகளவித்த திருவடிகள் சாத்தன் என்பவன் கரூர் அருகில் உள்ள சோமூர் கோயிலின் கணக்குகளைச் சரிபார்த்தான். தவறு செய்தவர்களைத் தண்டித்து அதன் வருவாயைக் கொண்டு இறைவனுக்கு நெற்றிப்பட்டம் ஒன்று செய்தளித்தான் என அக்கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது.[3]

மரக்காணம் பூமீசுவரர் கோயிலில் கோயிலின் செலவுகள் பற்றிய புகார்களை ஆரூரன் உடைய திவாகரன் ஆகிய அருண்

மொழி மூவேந்த வேளான் என்பவன் விசாரித்ததாக அக்கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[4]

தாதாபுரம் என்ற ஊர், தெ. ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. இவ்வூர் ராஜராஜபுரம் எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படு கின்றது. இங்குள்ள கோயில்கள் குந்தவை பிராட்டியரால் கட்டப் பட்டது. ஆரூரன் அரவரையன் என்ற பராக்கிரம சோழ மூவேந்த வேளான் என்ற அதிகாரி கோயில் பண்டாரத்திற்கு அளிக்கப்பெற்ற நிபந்தங்களைப் பரிசீலனை செய்து அவற்றைக் கல்லில் பொறிக்க வும் ஏற்பாடு செய்தான்.

முதலாம் இராசராசனின் 18 ஆவது ஆட்சி ஆண்டில் திருநாவலூர் கோயில் ஆய்வு செய்யப்பட்டது. பொன் மற்றும் நெல் வருவாய் சரிபார்க்கப்பட்டது. நிலங்கள் பற்றிய பழைய விவரங்கள் கிடைக்கவில்லை. எனவே நிலத்தை திரும்பவும் புதிதாக அளக்க செய்து அங்கிருந்த நகரத்தார் மூலம் கோயிலுக்கு 700 கலம் நெல்லும் 30 கழஞ்சு பொன்னையும் அளிக்கச் செய்தான். இதே கோயில் 24-ஆம் ஆட்சியாண்டில் நடைபெற்ற ஆய்வின்போது இதற்கு முன்பு அளித்த தானங்கள் கல்வெட்டாக பொறிக்கப்பட வில்லை. எனவே அவற்றை கல்வெட்டாக பொறிக்க ஆணையிடப் பட்டது.

திருவாமாத்தூர் கோயிலில் இராசராசனின் 23-ஆம் ஆட்சி யாண்டில் அரசு அதிகாரி தமுலன் கொற்றனங்கி என்பவன் ஆய்வு செய்தான். இறைவனுக்குப் படைக்கப்படும் அமுதினை 21 கோயில் ஊழியர்களுக்குப் பிரித்து அளிக்கும்படி ஆணையிட்டான். மேலும் கோயிலில் நடைபெறும் ஸ்ரீபலி நிகழ்ச்சியின் போது மணி அடிக்க இருவரை நியமித்தான். இதே அரசு அதிகாரி 25 ஆம் ஆட்சி யாண்டில் கோயிலின் ஸ்ரீ பலி நிகழ்ச்சியின்போது சந்திரசேகர பெருமாளை ஊர்வலமாக எடுத்துச் செல்லவும், உவச்சர்களை நியமிக்கவும் ஆணையிட்டான்.

இராசராசனின் 26-ஆம் ஆட்சியாண்டில் ஊர்ச்சபையையும், மக்க ளையும் அழைத்துக்கோயிலைப்பற்றி விசாரித்தான். விசாரணை யின் போது 'ராசகேசரி' என்று அழைக்கப்படும் மரக்காலை உபயோகப் படுத்தாமல் 'வீதி விடங்கன்' என்ற மரக்காலை உபயோகப்படுத்து வதால் சிறிது நெல் மீதமாவதை அறிந்து அந்நெல்லை நாள்தோறும் இறைவனுக்கு அக்கார அடிசில் என்ற அமுதாகப் படைக்க உத்தர விடப்பட்ட செய்தி கூறப்படுகிறது. கோயில் வழிபாடு சிறப்பாக நடக்க அதிகாரிகள் எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டனர் என்பது தெளிவாகிறது.

# இராசராசனின் புதுமைப் படைப்புகள்

குடவாயில் பாலசுப்ரமணியன்

பல்லவர்களில் இராஜசிம்மன் எவ்வாறோ, சேரர்களில் செங்குட்டுவன் எவ்வாறோ, பாண்டியர்களில் பராந்தக நெடுஞ் சடையன் எவ்வாறோ அவ்வாறு சோழர்களில் வானளாவும் புகழ் பெற்றவன் செந்திரு மடைந்தைமன் சீராஜராஜன். தங்கள் திருக்குலத்தோர் தடவரை எழுதிய பொங்கு புலிப்போத்துப்புதுக்கத் துங்கத் திக்கினிற் சேனை செலுத்திய பெருவீரன். எண்ணற்ற மன வெழுச்சிகளை யுடையவன் (அத்யந்த காமன்) என்ற சிறப்பு விருதை இராஜசிம்ம பல்லவன் பெற்று, எண்ணிலாப் புதுமைப் படைப்புக்களை மல்லையில் எவ்வாறு படைத்தானோ, அதே போன்று தஞ்சையில் தன்னிகரில்லாப் புதுமைக் கலைப் படைப்பு களைச் செய்தான் வானவன் மாதேவியாம் பெண்மான் பெற்ற இப் புலி.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவேதிகுடி, திருச்சிக்கு அருகில் உள்ள திருவெறும்பூர் கோயிலும் ஆய்வு செய்யப்பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் உணர்த்துகின்றன.

மேற்கண்ட சான்றுகளால் "ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற" அதிகாரி களுக்கு விசாரணை செய்யவும், தண்டம் விதிக்கவும், நிபந்தங்களைக் கல்வெட்டாகப் பொறிக்கவும் அதிகாரம் இருந்து வந்ததை அறி கிறோம். வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் கோயில்களைப் பாதுகாக்கவும், வழிபாடு சிறப்பாக நடைபெற முதலாம் இராசராச சோழன் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையும் அறிய நம் மனம் மகிழ்கிறது.

## குறிப்புகள் :-


1. 282 of 1906.
2. S. I. I. vol III-49, 218 of 1921.
3. 199 of 1917
4. 28 of 1919.
5. 17 of 1919
6. Early Chola Temples-S. R. Balasubramaniyam Page-66
7. ,, Page-80

கலைப்பித்தனாக வாழ்ந்த இம் மன்னவன் தனது பாட்டியும், சைவச் செம்மல் கண்டராதித்தரின் தேவியுமான செம்பியன் மாதேவியார் போற்றிவளர்த்த செப்புத்திருமேனிகள் வடிக்கும் கலையை மிகவும் போற்றினான். உலகமே வியக்கும் ஒப்பரிய இவ்வார்ப்புக் கலையின் பொற்காலத்தை உருவாக்கியவர்கள் இவ் விருவர் தாம். மாமன்னன் இராஜராஜன் காலத்தில் தமிழகத்துத் திருக்கோயில்களில் எண்ணிலாச் செப்புத் திருமேனிகள் இடம் பெற்றன.

தனக்கு முன்னவர்களும், பின்னவர்களும் செய்தறியாதன செய்து புதுமைப் படைப்புக்களை இம்மன்னவன் தோற்றுவித்தான். இதற்குத் தஞ்சை இராஜராஜேச்சரத்துக் கல்வெட்டுக்கள் சான்று பேசுகின்றன. மாமன்னன், அவர்தம் தேவியர், பெருந்தரத்து அதிகாரிகள், சோழநாட்டுப் பெருமக்கள் ஆகிய அனைவரும் இக் கலையைத் தெய்வக் கலையாகப் போற்றினர். மன்னரின் முயற்சியாலும், மற்றவர்களின் ஆக்கந்தாலும் பலதிருமேனிகள் வடிக்கப் பெற்றன.

வரலாற்றுக் காலந்தொட்டு, அண்மைக்காலம் வரை, படைக்கப் பெற்ற இத்துறைப் படைப்புகளில் இதுவரை யாருமே செய்யாத புதுமையான செப்புத் திருமேனிகளைத் தஞ்சையிலும், பிறஇடங்களிலும் செய்தளித்த இம்மன்னவன் கலையுலகில் தனி யிடம் பெறும் தகைமையாளனாவான். திருமகள்போலப் பெருநிலச் செல்வியைத் தனக்கே உரியவளாகக் கொண்ட பெருவீரனான இவன் தஞ்சை இராஜராஜேச்சரத்து மேல் நிலைமாடங்களில் திருப்பு மிடமெல்லாம் திரிபுரம் எரித்த செல்வனின் திருக்கோலம் இடம் பெறச் செய்த மாண்பு நோக்குதற்குரியது. அதனால்தான் தான் செய்தளித்த திருமேனிகளிலெல்லாம் புதுமைகளைப் படைத்துத் தனது உள்ளக் கிடக்கையை உலகுக்கு உணர்த்தினான்.

**இராசராசன் அணிந்தவை ...**

''உடையார் ஸ்ரீ இராஜராஜதேவர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரம் உடையார்கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருவித்த செப்பத்திரு மேனிகள்''. என்ற பட்டியல்கள் தஞ்சைப் பெருங்கோயில் திருச்சுற்று மாளிகையின் தூண்களிலெல் லாம் பொறிக்கப்பெற்றுள்ளன. காலம் காலமாக கல்லில் மட்டுமே சிற்பிகள் வடித்த திருசேய்ஞலூர் பிள்ளையார் கதையை (சண்டேசுவரர் புராணம்) செம்பிலும் வடித்த புதுமையைக் காண முடிகிறது.

*"தழைத்ததோர் ஆத்தியின் கீழ்த்*
*தாபர மணலாற் கூப்பி*
*அழைத்தங்கே ஆவின் பாலைக்*
*கறந்து கொண்டாட்டக் கண்டு*
*பிழைத்த தன் தாதை தாளைப்*
*பெருங்கொடு மழுவால வீசக்*
*குழைத்ததோர் அமுதம் ஈந்தார்*
*குறுக்கை விரட்டனாரே"*

— என நாவுக்கரையர் காட்டும் சேய்ஞலூர் பிள்ளையாருக்கு, திருமாலை முடியிற் சூட்டும் சண்டேச்வர பிரசாத தேவர், அவர் எழுந்தருளி நின்ற பத்மம், முசலகன், நப்பிராட்டியார் உமா பரமேஸ்வரி, ஒரேஹஸ்தமுடைய மகாதேவர், சண்டேச்வரர், விழுந்து கிடந்தாராக அவர் தாதை, பிரசாதம் பெறுகின்றாராகச் செய்யப் பட்ட சண்டேச்வரர், பிரசாதமாகச் செய்யப்பட்ட புட்பமாலை என்று இச் செப்புத்திருமேனிகளை மாமன்னன் இராஜராஜன் செய்தளித்த தாகக் குறிப்பிடுகிறது இக்கல்வெட்டு.

பிழைசெய்த தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசிப் பிஞ்ஞகன் அருளினைப் பெற்ற இவ்வரலாறு முழுவதையும் — விழுந்துகிடக்கும் தாதை உட்பட செப்புத்திருமேனிகளாகச் செய்தளித்தவன் இவனொருவனே.

இதேபோன்று பத்துத் திருக்கரங்களுடன் "பஞ்சதேகமூர்த்தி" இலிங்கபுராணத்தேவர், ஆலமர் செல்வர் போன்ற மூர்த்திகளின் செப்புத் திருமேனிகளும் எடுத்தான். இதில் மேரு, மேருவின் சிகரம், ஒன்பது பெருங்கிளைகளும், நாற்பத்திரண்டு சிறுகிளைகளும் உடைய ஆலமரம், அதன் கீழ் முசலகன், புலி, முனிபுங்கவர்கள், கின்னரர்கள், கின்னரிகள், போன்ற உருவங்களுடன் தென்திசைக் கடவுளின் எழில் திருமேனி காட்சி நல்கியதாகக் கல்லெழுத்துக்கள் கூறுகின்றன. இவ்வகையான செப்புத் திருமேனிகள் வேறு எங்கும் எடுக்கப்பட்டதாகவரலாறே இல்லை.

'விரித்த பல் கதிர்கொள் சூலம், வெடிபடு தமரு கங்கை, தரித்த தோர் கோல கால பயிரவனாகி வேழம் உரித்து, உமை அஞ்சக் கண்டு வொண் திருமறைவாய் விள்ளச் சிரித்தருள் செய்தாரான, வேழமுரித்த வேதநாயகனின் செப்புத் திருமேனியை அட்ட வீரட்டங் களில் ஒன்றான வழுவூரில் இப்பெருமன்னன் இடம் பெறச் செய்தது வார்ப்புக்கலையில் தமிழனின் திறமையை உலகுக்குணர்த்தும் தனி முத்திரையாகும்.

## மன்னன் வழியில்

தஞ்சைப்பெருங்கோயில் செப்புத் திருமேனிகள் வரிசையில் புதுமைப் படைப்புக்களை மட்டுமே மாமன்னன் செய்விக்க, அவனுடைய தேவியர்களும், அக்கன் குந்தவையும், பெருந்தரத்து அதிகாரிகளும் பலதிருமேனிகளையும் பிரதிமங்களையும் செய்தளித்தனர். இவ்வரிசையில் இராஜராஜேச்சரத்து சீகார்யம் அதிகாரியான பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் எடுத்த செப்புப் பிரதிமங்கள் சிறப்புவாய்ந்தவையாகும்.

தண்டமிழ் பாடிய சமய குரவர்களின் பிரதிமங்கள், "தத்தா நமரே காண்" என்ற மிலாடுடையார் பிரதிமம், பெரிய பெருமாளான இராஜராஜன் பிரதிமம். இவர் தம் பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமம், பொன்மளிகை துஞ்சின தேவரான சுந்தர சோழர் பிரதிமம், அவர்தம் தேவி வானவன் மாதேவியார் பிரதிமம் போன்றவை தென்னவன் மூவேந்த வேளானாலும், குந்தவை பிராட்டியாலும் எடுக்கப் பெற்ற செப்புப் பிரதிமங்களாகும்.

இராஜராஜப் பெருந்தகையின் சேனாபதி கிருஷ்ணன் இராமன், தன் மன்னனைப் போன்றே புதுமைகள் செய்வதில் நாட்டம் மிகக்கொண்டு திகழ்ந்தான் என்பதைத் தஞ்சை மற்றும் திருவெண்காடு கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தஞ்சைப் பெருங் கோயிலில் இவன் எடுத்த செப்புத்திருமேனிகள் வரிசையில் உமை யொருபாகன் திருமேனி குறிப்பிடத்தகுந்தவொன்று. இதில் உமைபாகம் பட்டும் தனித்து காட்சி நல்க, செப்புத் திருமேனியில் அப்பகுதிக்கு மட்டும் பித்தளை பூசப்பட்டதாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

## திருவெண் காட்டிலும் ...

இவ்வாறு பலவகைத்திறங்களும் பெற்ற ஒப்பரிய வார்ப்புக் கலைப் பள்ளி ஒன்று தஞ்சையில் திகழ்ந்தது போன்று திருவெண் காட்டிலும் திகழ்ந்திருக்கிறது. இதற்கு மாமன்னனும், அவனுடைய பெருந்தரத்து அதிகாரிகளும் பெரிதும் ஆக்கம் அளித்தனர். என்ற செய்திகளை வெண்காட்டுக் கல்வெட்டுக்கள் கூறி நிற்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் திருவெண்காட்டில் புதையுண்டு கிடந்த பல செப்புத்திருமேனிகள் இன்று தஞ்சைக்கலைக் கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

"வேண்டு நடை நடக்கும் வெள்ளேறேறி வெண்காடு விகிர் தனாரான" இடபாரூடரின் திருமேனி உலகச்சிற்ப இயல் வல்லுநர்

# ''இலக்கிய நோக்கில் இராசராசன்''

(பேராசிரியர் **கி. கோதண்டபாணி**, தஞ்சாவூர்)

ஈராயிரம் ஆண்டுகட்குமுன் தமிழகத்தில் வாழ்ந்த பெரியார் ஒருவர் ஆண்டால் முதிர்ந்தும் அருள் தோற்றத்தால் இளமையுற்றும் விளங்கினார். அவர் வாழ்ந்து கழித்த ஆண்டுகள் பலவாயினும் நரை திரை முதலிய மூப்புக் குறிகள் சிறிதும் பெற்றாரில்லை. இவ்வாறு, தாம் இளமை எழிலுடனும், வளமான உடற் பொலிவுடனும் வாழ்ந்ததற்கு ஏற்ற ஏதுக்களை ஒரு புறப்பாட்டின் மூலம் இனிது விளக்குகின்றார். தன் இளமையின் பொலிவிற்கு முதற் காரணமாய் அவர் கூறியிருப்பது மாட்சிமைப்பட்ட பண்புகளையுடைய அவரது மனைவியார். அடுத்து ஏவாமக்களாய், எண்ணால் நிரம்பாது அறிவால் நிரம்பிய அறிவறிந்த மக்கள், மூன்றாவதாக அவர் பணியாட்கள் அவரது குறிப்பறிந்து செயலாற்ற வல்லவர்கள். அவரது மனமொத்த பணியாட்கள் அவர் எண்ணுவதனையே தாமும் எண்ண வல்லவர்கள். அவர்கள் பெறுகின்ற இடம் மூன்றாம் நிலையாகும். ஒரு வீடு சிறக்க, மேற்கூறிய மூன்று நிலைகளும் சிறந்திருக்க வேண்டும். இம்மூன்றன் சிறப்பினையும் பெற்ற புலவர் பெருமான்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

களால் தலையாயதாகப் போற்றப்படும் சிறப்பு வாய்ந்தது. இதனை கி பி. 1011 ல் இராசராசனிசன் அலுவலனொருவன் எடுத்தான் என்ற செய்திகளை வெண்காட்டுக் கல்லெழுத்துக்கள் பறை சாற்றுகின்றன.

எழில்மிகு இப்பதியில் கிடைத்த உமையொருபாகன், ஆடவல்லான், பிச்சையுகக்கும் பெருமான், மணவரை மணவாளன், சேத்திரபாலர், காழிப்பிள்ளையார், ஆரூரனார், நங்கை பரவையார் போன்ற திருமேனிகள் இரசராசன் காலத்து வார்ப்புக் கலையின் உன்னத படைப்புக்கள்.

இதே கலைப்பள்ளி, நல்கிய கண்ணப்பர் பிரதிமத்தின் அழகோ ஏட்டில் வடிக்க இயலாத வொன்று. ''காப்பதோர் வில்லும் அம்பும், கையதோர் இறைச்சி பாரம், தோற்பெருந் செருப்புத் தொட்டு, தூயவாய்க் கலசம் ஆட்டி, தீப்பெருங் கண்கள் செய்ய குருதி நீர் ஒழுகத் தன் கண்' தோண்டி எடுத்த அந்த தூய உருவினைச் செம்பில் வடிக்கச் செய்த இம் மன்னவனின் திறம் தான் என்னே...!

வீட்டின் விளக்கத்தைப் பெற்றார். வீடு அமைந்த ஊர், ஊரில் வாழும் அண்டை அயலார் இவர்களது சூழலையும் அடுத்து விளக்குகின்றார் ஊரில் வாழும் அண்டை அயலார் ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்களாம். ஆகவே ஊரும் சிறப்புடைய தாய் விளங்குகிறது. மேலும் நாட்டையாளும் மன்னன் எவ்வாறு என ஐயுறுவார்க்கு அதனையும் இறுதியாக விளக்கி விடுகின்றார். நாட்டையாளும் வேந்தன் அல்லவை எண்ணாது நல்லவை செய்யும் நல்லோன், கண்ணினைக் இமையிற் காக்கும் காவலனா யும், உயிரெலாம் உறைவதோர் உடம்பாய் இலங்கும் உத்தமனாயும் மன்னன் விளங்கினான் என்றும் கூறுகின்றார். ஆகவே வீட்டைப் பற்றியும், நாட்டைப் பற்றியும் சிறிதும் கவலை கொள்ளவில்லை யாம். அதன் பயனால் நரை திரை முதலிய குறிகள் பெறவில்லை யாம். இதனைப் பிசிராந்தையார் என்ற புலவர் பெருமகனார் கீழ்க் காணும் புறப்பாடல் மூலம் இனிது விளக்குகின்றார்.

*"யாண்டு பலவாக நரையில வாகுதல்*
*யாங்கா கியரென வினவுதி ராயின்*
*மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்*
*யான் கண்டனையர் என் இளையரும், வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும், அதன் தலை*
*ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழு மூரே"*

இவ்வாறு பிசிராந்தையார் கூறிய இலக்கணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த பெருமன்னனே இராசராசன் என அறிய லாம். அம்மாமன்னனது வாழ்க்கைச் சூழ்நிலை இப்புறப் பாடலை நினைவுறுத்தி நிற்கின்றது. மனையறத்திற்குரிய மாண்புகள் அனைத்தும் பெற்ற மனையாள் மாதேவியார் ஆவார், பேரெழிலும், பெருங் கற்பும் பெற்ற ஆன்றவிந்தடங்கிய பெண்மைப் பண்புகள் அத்துணைக்கும் தாயகமாய் விளங்கியவர் மாதேவியார். பிறந்த குடியும் புகுந்த குடியும் சிறந்தமைந்தபோது உயர்பண்புகளும் இயற்கையாகவே மலர்ந்திருக்கும். இந்நல்லாளும், பெருமன்னன் இராசராசனும் ஆற்றிய இல்வாழ்வின் நற்கலனாய்த் தோன்றிய பெருந்தகையே 'பூர்வ தேசமும், கங்கையும், கடாரமும் கொண்ட கோப்பர கேசரிவர்மன்' என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும் இராசேந்திரனாவான். ஒருவனது நாட்டு வாழ்வு சிறப்பாய் அமை வதற்கு அவனது வீட்டு வாழ்வு சிறப்புடன் அமைதல் வேண்டும். எதிர்காலத்தில் பெரு வெற்றியும், பெரும் புகழும், செயற்கரும் செயலும் ஆற்றுவதற்கு அவனது இல்லறத் துணைவி மாதேவியாரே காரணமானார்கள். சைவ சமயப்பற்றும், சிவாலய வழிபாடும், இம்

மன்னனைப் பெருங்கோயில் எடுக்கத் தூண்டு கோலாய் அமைந்தது. பெருவுடையார் கோயிலை இம்மாமன்னன் எடுக்கத் தூண்டு கோலாய் அமைந்தவர்கள் இவனை வளர்த்த பாட்டியார் செம்பியன் மாதேவியாரும், தமக்கையார் குந்தவை பிராட்டியும் எனக்கூறினும் அவன் மாதேவியாரும்காரணமானவர் என்பதனை யாரும் மறுத்தல் இயலாது. இம்மங்கை நல்லாளது சைவசமய ஈடுபாடு பிறசமயப்பொறை முதலிய பண்புகளே இராசராசனது சைவசமய வளர்ச்சிக்கும் சிற்பம், ஓவியம், இசை முதலான கலை வளர்ச்சிக்கும் இவற்றிற்கும் மேலாகச் சமயப் பொறைக்கும் காரணங்களாக விளங்கின. இனி, இப்பெருமன்னன் கட்டிய பேராலயம் பற்றிச் சிறிது சுருக்கமாகக் காண்போம்.

"உலகிலேயே தமிழர்கள் தாம் அரும் பெருங்கோயில் அமைக்கும் பணியில் தலைசிறந்து விளங்குகின்றனர். பாரதத்திலேயே தஞ்சைப் பெரிய கோயிலே தனக்கு ஒப்பும், உயர்வும் இல்லாத உயர்ந்த கோயில் ஆகும்" என்று மேலை நாட்டுப் பேரறிஞர் ஒருவர் தமிழரது கோயிற் பணியைப் புகழ்ந்துரைத்துள்ளார். தஞ்சாவூர் என்னும் பெயரினை இந்நகர் பெற்றமைக்குப் பலர் பலவாறு விளக்கம் கூறுவர்.

சோழ மன்னர்களில் சிறந்த மன்னனாகிய 'விசயாலயன்' (கி. பி 846 – 880) என்பவனே இந் நகரைத் 'தஞ்சைபுரி' என்ற பெயருடன் அமைத்தான். இன்றும் தஞ்சையின் வடபால் விண்ணாற்றங்கரையில் உள்ள பழைய சிவாலயம் 'தஞ்சை புரீஸ்வரர்' ஆலயமென்ற பெயரால் விளங்குவது இதற்கு ஒரு சான்றாகும். இவ் விசயாலயன் மரபில் சோழப் பெருவீரனாய்த் தோன்றிய சோழன் இராசராசனே (கி. பி 985 – 1013) இப் பெருவுடையார் ஆலயத்தை நிறுவினான். இக் கோயில் அவன் பெயரால் 'இராசராசேச்சுரம்' என வழங்கப் படுகிறது. இப்பெருங் கோயிலில் வீற்றிருக்கும் பெருமான் 'பிருகதீசுவரர்'(பெருவுடையார்) என்றும், அம்மையார் 'பிருகந்நாயகி' (பெரியநாயகி) என்றும் கூறுவர். இப்பேராலயத்தை நிர்மாணிப்பதற்குச் சோழப் பெருமன்னன் இராசராசன் ஆறு ஆண்டுகள் அயராது உழைத்தான் என்று கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம். கீழை நாட்டைக் கண்டு களிக்க வரும் வெளிநாட்டு மேலை நாட்டுப் பயணிகள் தமிழகத்தின் தலை சிறந்த கோயிலாகிய, இவ்வாலயத்தைக் காணாது செல்லார். நஞ்சை சூழ்ந்த தஞ்சையில் மருந்திற்குக்கூட மலையே காணவியலாத பகுதியில் இத்தகு வியத்தகு பேராலயம் கல்லால் அமைத்தது செயற்கரிய செயலாகும்.

இக்கோயில் அமைப்பினை உற்று நோக்கினால் இது ஒரு கோட்டையின் அமைப்பினை ஒத்து விளங்குவதை உணரலாம். இக்கோயில் கோட்டையினைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற அகழி விளங்குவதையும் காணலாம். இக் கோயில் அமைந்துள்ள இடப் பரப்பு 800 அடி நீளமும் 400 அடி அகலமும் ஆக அமைந்துள்ளது. இக் கோயில் கேரளாந்தகன் வாயில், அணுக்கன் திருவாயில், இராசராசன் திருவாயில் என்ற மூன்று வாயில்களைப் பெற்றுள்ளது. இப்பெருவுடையார் ஆலயத்தில் நுழைந்தவுடனே, அனைவர் கவனத்தையும் கவரக் கூடியது நந்தியின் திருவுருவமேயாகும். ஒரே பெரிய கல்லால் சிறந்த வேலைத்திறனோடு அமைந்த சிற்ப வடிவே இந்நந்தி உருவமாகும். இப்பெரு நந்தி 12 அடி உயரமும் 19½ அடி நீளமும், 8¼ அடி அகலமும் உடையதாகும். இதன் நிறை 25 டன் ஆகும். இந்தியாவில் உள்ள பெருநந்திகளுள் இதுவும் ஒன்றாகும்.

இப் பெருவுடையார் ஆலயம் கருவறையினையும், அதனைச் சார்ந்த அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தபன மண்டபம் ஆகிய மூன்றினையும் ஒருங்கு பெற்றுள்ளது. இம் மண்டபத்தில் தியாகராசர் உருவம் பொலிவுடன் விளங்குகிறது. நர்த்தன மண்டபமும், வாத்திய மண்டபமும் அதனைச் சார்ந்து அமைந்துள்ளன.

இச் சிவலிங்க உருவம் பேரெழிலும், பேருருவும் படைத்தொளிர்கின்றது. இப்போது தமிழகத்தில் விளங்கும் சிவலிங்கங்களிலேயே மிகப் பெரிய இலிங்க வடிவம் இதுவேயாகும். நுழை வாயிலின் இருபுறமும் 18 அடி உயரமும், 8 அடி அகலமும் உடைய துவார பாலகர்கள் உருவங்கள் பெருமிதத்துடன் விளங்குகின்றன. கருவறையின் உள்பிரகாரச் சுவர்களில் சோழர்கால வனப்பு மிக்க ஓவியங்கள் விளங்குகின்றன. ஆனால், அச்சோழர் கால ஓவியங்களின் மேல் பிற்கால நாயக்க மன்னர்களின் ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன. கைலாயத்தில் சிவபெருமான் அமர்ந்துள்ள திருக்கோலம், அடியவராகிய சுந்தரர், சேரமான் பெருமாள் இருவரும் செல்லும் கயிலைக்காட்சி, நடராசர் திருவுருவம், அடியார்குழு, திரிபுரம் எரித்த விரிசடைச்சிவனின் தோற்றம் முதலாகியபலவும் வண்ண ஓவியங்களாகச் சுவரில் வரையப் பட்டுள்ளன. இக்காட்சி காண்போர்க்குச் சைவசமய உணர்வையும் ஆர்வத்தையும் எழுப்பும்.

மேலும் கருப்பக் கிருகத்தின் மேல் எழுப்பப்பட்டுள்ள பெரிய விமானம் தென்னகத்துச் சிற்பக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இன்று நம் நாட்டில் மிக உயர்ந்த விமானத்தினைப் பெற்ற கோயில் இது ஒன்றேயாகும். இதன் உயரம் 216 அடியாகும்.

இவ்விமானத்தைத் தாங்கும் அடித்தளம் 96 அடி சதுரமாகும். இவ் விமானத்தை மூடுவதற்குப் பயன்பட்ட பிரமரந்திரக்கல் 25 அடி சதுரக் கல்லாகும். இப்பிரமரந்திரக்கல்லை இக்கோயிலின் உச்சிக்கு ஏற்ற ஐந்து கல் தொலைவிலிருந்து சாரம் - போட்டனர். இதனால் இவ்விடத்திற்குச் 'சாரப்பள்ளம்' என்று பெயர். குடந்தை - தஞ்சை நெடுஞ்சாலையில் வயலூர் என்ற ஊர் 'வயலூர் சாரப்பள்ளம்' என்றே வழங்கப்பெற்றுள்ளது.

இப்பேராலயத்தின் பின்புறம் கருவூர்த்தேவர் ஆலயம் அமைக் கப்பட்டுள்ளது. இக்கருவூரார் பெருஞ்சித்தராய் இப்பெருமானைப் பிரதிட்டிக்க உதவியவர். இவரே பெருவுடையார் மீது 'திருவிசைப்பா' ஒன்று பாடியுள்ளார்

இக்கோயிலைச் சுற்றி அமைந்த கோயில்களுள் முருகனின் ஆலயம் அழகியதாகும் இக்கோயில் அமைப்பு பிற்கால நாயக்க மன்னர்களின் வேலைப்பாடாக அமைந்தபோதிலும் குதிரைகள் பூட்டிய தேர்போல அமைந்திருப்பது சிற்ப நுணுக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அடுத்துப் பிராகாரத்தில் அமைந்துள்ள அம்மையினுடைய ஆலயம் கோநேரின்மைகொண்டான் என்ற 13ம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டிய மன்னன் எடுப்பித்ததாகும். இச் சிறு ஆலயத்தில் அமைந்துள்ள சிற்பம் நுணுகிய வேலைப்பாடு அமைந்ததாகும். கணேசர், இலக்குமி, பிட்சாடனர், சூலதேவர், தட்சணாமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராசர், இலிங்கோற்பவர், அர்த்தநாரீசுவரர் கங்காதரர், கல்யாணசுந்தரர், மகிடாசுர மர்த்தினி முதலிய உருவங்கள் சிற்ப நுணுக்கத்திற்குச் சிறந்த எடுத் துக்காட்டாய் இலங்குகின்றன.

இக்கோயிலின் சுவர்களிலே அமைந்துள்ள கல்வெட்டுக்கள் வரலாற்றுச்சிறப்பு வாய்ந்தனவாக அமைந்துள்ளன. இராசராசன் நாள் வழிபாட்டிற்கும் திருவிழா நடத்துவதற்கும், நந்தா விளக்கு எரிப்பதற்கும், பலகிராமங்களையும் மிகுதியான பொருளையும் நிவந்தமாக அளித்துள்ளான் என்று அறியலாம்.

நாடோறும் 'திருப்பதியம்' விண்ணப்பஞ்செய்யவும், நாட்டியம் நிகழ்த்தவும் பல நிவந்தங்கள் அளித்துள்ளான். மேலும் சைவசமய குரவர்கட்குப் படிமங்கள் அமைத்து வழிபாடு செய்தான் இராச ராசன் வாழ்ந்த அரண்மனை அழிந்துபோனபோதிலும், அவன் பக்தியோடு அமைத்த இப்பேராலயம் அவன் நிலையான புகழை நீள் நிலத்தில் பறைசாற்றிக்கொண்டு பெருமிதத்துடன் விளங்கு கிறது. இம்மன்னனின் அழியாச் சிவபக்திக்கு இதனினும் வேறு சான்று என்ன வேண்டும்?

இராச ராசனின் தந்தையர் இரண்டாம்பராந்தகன் என்ற பெரு மன்னராவர். இவர் இயற்கையிலேயே எழிலுடன் விளங்கிய காரணத்தால் 'சுந்தரசோழன்' என்ற வேறுபெயரும் பெற்றிருந்தார். அவர் தன் மகனுக்கு இட்டு வழங்கிய பிள்ளைத்திருநாமம் 'அருண் மொழிவர்மன்' என்பதேயாகும். ஆனால் ஆட்சி ஆண்டு இராச ராசன் என்ற பெயருக்கு உரியவன் ஆனான். அருள்மொழிவர்மன் தன்னாட்சி கி. பி. 905 முதல் 1014 வரை பெருமன்னனாயும் வாகை சூடிய வெற்றி வேந்தனாயும் விளங்கினான். இவன்தன் ஆட்சிக் காலத்தில் ஆற்றிய போர்களும் அடைந்துள்ள வெற்றிகளும் இவனது 'மெய்க்கீர்த்தி' மூலம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் இவன் பிறந்தநாள் சதயநன்னாள் என்பது'இவன் திங்கள் தோறும் சதயநாளில் விழா எடுப்பதற்கு விட்ட நிவந்தங்களைக் குறிக்கும் கல்வெட்டால் அறியலாம். மேலும் இவன் " சதயநாள் விழா உதியர் மண்டலந்தன்னில் வைத்தவன்'' என்று சயங்கொண் டாரால் கலிங்கத்துப்பரணியில் போற்றப்படுகின்றான். ஆகவே இயற்கை, எழிலும் திருவும் ஆண்மையும், ஆற்றலும், திண்மையும், திறனும் ஒருங்கே இவன் பெற்றமை வழிவழி வந்த பெரும் பண்பு களாகும்.

அடுத்து இவன் வாழ்வின் உயர்விற்கு இவன் மகன் இராசேந் திரனும், பெண்மக்கள் மாதேவடிகளும், இரண்டாம் குந்தவையும் காரணமாயிருந்தனர். தமக்கையாருக்கும் இளைய மகளுக்கும் ஒரே பெயர் குந்தவை என இருந்தமையால், தமக்கையாரை குந்தவை I அல்லது பெரியகுந்தவை என வழங்கி வந்தனர். ஆக இம்மூவரும் தந்தை ராசராசனின் ஏவாமக்களாய் வாழ்ந்து, சோழப் பேரரசின் வெற்றிக்கு உறுதுணையாய் விளங்கினார்கள். இராசேந் திரனுக்கு இராசராசன் வைத்த பிள்ளைத்திருநாமம் 'மதுராந்தகன் என்று திருவலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. இவன் பிறந்த நாள் மார்கழித்திங்கள் 'திருவாதிரை' நன்னாளாகும். செலவன் இராசேந்திரன் தந்தையைப்போலவே பெரு வீரனாய் விளங்கி உள்நாட்டுப்போருடன் நிற்காது கடல் கடந்தும் போரிட்டு பெரு வெற்றி பெற்றான். கடாரம் ஈழம் (முந்நீர்ப் பழந்தீவு பன்னீர் ஆயிரம்) முதலிய இடங்களைக் கடல்கடந்து களத்தில் சென்று போருடற்றி வென்ற திறன் தந்தையின் ஆற்றலை நினைவுறுத்து கின்றது தந்தை எடுத்த தஞ்சை'இராஜராசேச்சுரம்' போன்று மகனும் கங்கைகொண்ட சோழபுரத்தில் பேராலயம் எடுத்தான். தன் வெற்றியின் அறிகுறியாய் அந்நகர்க்குக் "கங்கை கொண்ட சோழபுரம்" எனப் பெயரமைத்தான். இராசராசன் கி.பி. 1012ம் ஆண்டில் தம் மகன் ராசேந்திரனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி, ஆட்சி அனுபவம் பெற வாய்ப்பு அளித்தது போல இராசேந்

தானும் தன் முதற் புதல்வன் இராசாதிராசனுக்கு கி. பி. 1018ல் அதாவது (கி. பி 1012 முதல் 1044 வரை) ஆட்சி ஆண்டின் ஏழாம் ஆண்டிலேயே இளவரசுப்பட்டம் கட்டிப் பல சிக்கல்களை நீக்கி விட்டான் மகனுக்கு அரசியல் அறிவூட்டவும் ஆட்சிப்பொறுப் பேற்கவும். தாயத்தார் எதிர்காலத்தில் உரிமைச்சிக்கல் எழுப்பாத வாறும் இளவரசுப்பட்டம்கட்டிவிட்டான். இது மிகப்பெரிய அரசியல் நுண்ணறிவு ஆகும். தந்தை வழிபெற்ற இராச தந்திரமாகும் இது. 'தந்தையறிவு மகனறிவு' அல்லவா !

அடுத்து இராசராசப் பெருமன்னனின் அரசியல் அலுவலரே அவனது பெரு வெற்றிக்குக் காரணமாயிருந்தனர் என்பதனை ஆராய்வோம். பிசிராந்தையார் கூற்றினைப்போல் இராசராசன் மக்களை எண்ணால் நிரப்பாது அறிவால் நிரப்பி இன்றையத் தேவை போலவே பெற்றிருந்தான். இதனைப் போலவே குறிப்பறிந்து பணியாற்றும் அரசியல் அலுவலர்களையும் பெற்றிருந்தான்.

இராசராசன் ஆட்சியில் அமைச்சர்களாகவும், தளபதிகளாகவும், நாட்டதிகாரிகளாகவும், திருமந்திர ஓலைநாயகமாயும், அற நிலையப் பாதுகாவலராயும் அமர்ந்து ஆட்சியைப் போற்றியவர் களைப் பற்றி அவன் கல்வெட்டுக்கள் சிறப்பான செய்திகளை வெளிப்படுத்துகின்றன.

1. சேனாதிபதி கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரமராயன் 2. பரமன் மழபாடியானான மும்முடிச் சோழன் 3. சேனாபதி குரவன் உலகளந்தானான இராசராசமாராயன் இம் மூவரும் படைத்தலைவர்களாய் விளங்கி, இராசராசன் ஆட்சிக்கு அணிசெய்தவர்கள் ஆவார்கள் இவர்களில் முன்னவன் அந்தணர் இனத்தைச் சார்ந்து, வேந்தன் ஆணைப்படி, தஞ்சைப் பெரு வுடையார் ஆலயத்தின் திருச்சுற்று மாளிகையை எடுப்பித்தவன். இரண்டாமவன் ஆந்திர நாட்டுப் பகுதிகளாகிய நெல்லூர், சிட்புலி நாடு முதலிய இடங்களைவென்று, பலதிறைப் பொருள் களைக் கொணர்ந்தவன் இத்திறைப் பொருள்களைக் கொண்டு தன் மன்னவன் பெயரால் 'அற ஆவணம்' செய்தான் மூன்றாமவன் அரசன் ஆணைப்படி கி. பி. 1001ல் சோழப்பேரரசு முழுமையும் அளந்து (urvey) நன்செய். புன்செய் நிலங்களைக் கணக்கிட்டு முறையான வரி விதிப்பு ஏற்பாடு செய்தவன் ஆவான்.

அடுத்து, அறநிலையம் பேண "மதுராந்தகன் கண்ட ராதித்தன்" என்ற அரசியல் அலுவலர் அமர்த்தப்பட்டார். இவர்

# பேரரசன் இராசராசனும் ஈழமும்

திருக்குறள்மணி டாக்டர் **க. த. திருநாவுக்கரசு**

இன்றைய ஸ்ரீலங்கா, பண்டைக் காலத்திய தமிழ் மக்களால் 'ஈழம்' என்னும் பெயராலேயே சுட்டப்பட்டது. 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்' எனும் பட்டினப்பாலையின் அடி (பட்டி. 191) இதற்குச் சான்று பகருகிறது. மற்றும் சங்க காலத்துப் புலவர்களுள் ஈழத்துப் பூதந்தேவனார் எனும் இலங்கையைச் சேர்ந்த புலவர் மதுரையில் சிறப்புற்று விளங்கியதை, அவர் பாடியுள்ள ஏழு பாடல்களால்[1] அறிகிறோம்.

சங்க காலத்திற்குப் பிறகு, பல்லவர் ஆட்சிக்காலத்தில் ஓரளவிற்கு அரசியல் பண்பாட்டுத் தொடர்புகள் இவ்விரு நாடுகளுக்கு இடையேயும் நிலவின

1. அகநா. 88, 231, 307, குறுந். 189, 343 360, நற் 366

(முன் பக்கத் தொடர்ச்சி)

இராசராசனின் சிறிய தந்தை உத்தமச் சோழனின் மகனாவார். இவர் மன்னனின் உளப்படி கோயில்கள் கண்காணிப்பில் தவறு இழைத்தவர்களைத் தண்டித்து, அறநிலையம் பேணி வந்தார்.

பின்னர் பாளூர் கிழவன் அரவணையான் மாலரி கேசவன், இராசகேசரி நல்லூர்க்கிழவன், காறாயில் எடுத்தபாதம் முதலியோரும் முறையே இராசராசனின் ஸ்ரீ காரியக் கண்காணி நாயகமாகவும், திருமந்திர ஓலை எழுதும் அதிகாரியாகவும் இருந்து மன்னனின் ஆணையைச் செயற்படுத்தும் கடமையுணர்ச்சி மிக்க அலுவலர்களாய் இருந்தனர் என அறிகின்றோம்.

பலமண்டலங்களைத் தன்பாற்கொண்டு விளங்கிய சோழப் பேரரசுக்குப் பெருமன்னனாய் விளங்கி, ஆட்சி செலுத்திய இராசராசன் காலத்தில் அரசியலில் பல துறைகளிலும் அதிகாரிகளாய் அமர்ந்து சிறக்கப்பணி புரிந்தோர் பலரும் ஆவர். ஆனால் சிலரைப் பற்றியே கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன இவ்வாறு மனைமாட்சி நிறைந்த மனையாளும், ஏவாமக்களாய் அமைந்த மாவீரன் இராசேந்திரனும், குந்தவையாரும் குறிப்பறிந்தாற்றிய ஏவலரும், சால்றோர்களாய் விளங்கிய நாட்டோரும், இருந்த காரணத்தால் தான் இராசராசன் பெருமன்னனாய், சோழர்குலத்திலகனாய் விளங்க முடிந்தது என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை!

## இராசராசனுக்கு முன்னர் ....

பேரரசன் இராசராசன் கி. பி. 985ல் அரசனானான். இதற்கு முன்பே, சோழ வேந்தர்களுக்கும் ஈழத்திற்கும் அரசியல் தொடர்புகளும், பண்பாட்டுத்தொடர்புகளும் உண்டாகிஇருந்தமைதெரிகிறது

முதற் பராந்த சோழனுடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 910ல்) பாண்டிய அரசனுக்கு உதவியாக வந்த சிங்களப்படை, பராந்தகனால் 'வெள்ளூர்' எனும் இடத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இராசராசனுடைய தந்தையான இரண்டாம் பராந்தகன் எனப்படும் சுந்தரசோழன் காலத்தில், வீரபாண்டியன், நான்காம் மகிந்தனுடைய படை உதவியோடு, சோழரை எதிர்த்துப் போரிட்டான். வீரபாண்டியன் படையும், அவனுடைய நண்பனின் படையும், படுதோல்வி அடைந்தன. ஆதித்த கரிகாலன் (இராசராசனின் அண்ணன்) கி. பி. 970ல் வீரபாண்டியனைக் கொன்றான். பிறகு கொடும்பாளூர் சிறிய வேளார் தலைமையில், சோழரின் படை ஈழத்தைத்தாக்கியது. அப்போரில், இராசராசன் கலந்து கொண்டதாகத் தெரிகிறது. ஆனால் அப்போரில், கொடும்பாளூர் சிறிய வேளார் கொலை செய்யப்பட்டார்.

## பேரரசனின் படையெடுப்பு

சோழப் பேரரசர்களுள் தலை சிறந்து விளங்கிய இராசராசனும், அவன் மகன் இராசேந்திரனும் ஈழப்படையெடுப்புகளில் ஈடுபட்டனர்.

கி. பி 982ல், இலங்கையின் அரசனாக ஐந்தாம் மகிந்தன் முடிசூட்டிக்கொண்டான். இராசராசனுடைய பகைவர்களாகிய பாண்டிய சேர, அரசர்களுக்கு அவன் உதவி செய்யத் தொடங்கினான். இதனால், இராசராசன் ஈழத்தின் மீது படையெடுக்க வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று, இராசேந்திரனின் தலைமையில் பெரும் படை ஒன்று இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அந்நிலையில் இலங்கையில் உள்நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. அதை அடக்க முடியாது மகிந்தன் தத்தளித்தான். சோழரின் படையெடுப்பைப் பற்றிக் கேள்வியுற்ற உடனே, இதுதான் நல்ல சமயம்' என்று எண்ணி, தெற்கே உள்ள ரோகண நாட்டிற்கு அவன் ஓடிவிட்டான்; தலை மறைவாகிவிட்டான்.

சோழப் படையை எதிர்த்த சில சேனைத்தலைவர்களும், இளவரசனும், கலகக்காரர்களும் எளிதில் முறியடிக்கப்பட்டனர். திருவா

லங்காட்டுச் செப்பேடு, இராசராசனின் இலங்கைப் படையெடுப்பைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகிறது.

"வானரப் படையின் உதவியைக் கொண்டு அயோத்தி அரசன் இராமன், கடலின் மீது பாலம் அமைத்தான். பிறகு அரும்பாடு பட்டு இலங்கை வேந்தனைத் தன் கூரிய அம்பினால் கொன்றான். அந்த இராமனை விட இந்த இராசராசன் பேராற்றலும் பெருந் திறனும் உடையவன். இராசராசனுடைய பேராற்றல் வாய்ந்த படை மரக்கலங்களைக் கொண்டு அலை கடலைக் கடந்தது: இலங்கை மன்னனைத் தீயிட்டுக் கொளுத்தியது என்பது திருவாலங்காட்டுச் செப்பேட்டின் வாசக (செ 80) மாகும். இதனால் இந்த ஈழத்துப் போர், முக்கியத்துவம் வாய்ந்த போராக அக்காலத்தில் கருதப்பட்டாமை புலனாகிறது.

ரோகணம் வரையிலான. ஈழத்தின் வடக்கு, மையப் பகுதிகள் சோழப் பேரரசோடு இணைக்கப்பட்டது. பேரரசின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 'மும்முடிச் சோழ மண்டலம்' எனும் பெயர், அதற்குச் சூட்டப்பட்டது. இராசராசனின் சிறப்புப் பெயர்களுள் 'மும்முடிச் சோழன்' என்பதும் ஒன்றாகும்.

## சோழரின் தலைநகரம்

நெடுங்காலமாக இலங்கையின் தலைநகராக விளங்கிய அனுராதபுரம் சோழரின் படையெடுப்பால் அழிக்கப் பட்டது. இன்றும் அதன் இடிபாடுகளைக் காணலாம். இதனால், அந் நாட்டின் நடுப்பகுதியில் இருந்த புலத்திய புரியைப் 'பொலனறுவா' எனும் பெயருடைய நகரமாகச் செய்து, சோழப் பேரரசன் ஈழத் தலைநகரமாக அதனைச் சோழப்பேரரசின் அமைத்துக் கொண்டான். பிறகு அதற்குச் 'சனநாத மங்கலம்' எனும் புதுப் பெயரிடப்பட்டது. 'சனநாதன்' என்பதும் இராசராசனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. 'சனநாதன்' என்பதற்கு (ஜன—சன =மக்கள்; நாதன் = தலைவன்) 'மக்கள் தலைவன்' என்பது பொருளாகும். தமிழரின் அரசியல் சிந்தனையில் அரசனை மக்களின் தலைவனாகக் கருதுவது சங்க காலம் முதற்கொண்டு வளர்ந்து வந்துள்ள ஒரு கருத்தியல் நிலையாகும்.

## இராசராசேச்சுரம்

மும்முடிச் சோழ மண்டலமாகிய ஈழத்தில் இருந்த மாதோட்டம் எனும் ஊருக்கு 'இராசராசபுரம்' எனும் பெயர் வழங்கியதைக் கல் வெட்டுகள் தெரிகின்றன. அந்த ஊரில், சோழப் படைத்தலைவன்

ஒருவன், ஒரு சிவன் கோயிலை எழுப்பி இருந்தான். அந்தக் கோயிலுக்கு 'இராசராசேச்சுரம்' எனும் பெயர் வழங்கியது. அந்தக் கோயிலின் அன்றாட அர்த்த சாம வழிபாட்டிற்கும், வைகாசித் திருவிழாவிற்கும் அறக்கட்டளைகளை அவன் நிறுவினான் என்பதையும் அறிகிறோம்.

அந்தப் படைத் தலைவன், "சோழ மண்டலத்துச் சத்திரிய சிகாமணி வளநாட்டு வெளா (விளா) நாட்டுச் சிறுகூற்ற நல்லூர்க் கிழவன் தாழிகுமரன்"[2] என்பவனாவான்,

## வானவன் மாதேவீச்சுரம்.

சோழரின் தலைநகரமாக இருந்த பொலனறுவாவில் சிவன் கோவில் ஒன்று கற்றளியாக அமைக்கப்பட்டு இருக்கிறது. கி. பி. பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் எடுக்கப்பட்ட சோழர் கோயில்களைப்போல், இக்கோயில் அமைக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அக்கோயிலை 'வானவன் மாதேவீச்சுரம்' எனும் பெயரால் அக்கோயில் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.

இராசராசனுடைய மனைவியும், இராசேந்திரனின் தாயுமான வானவன் மாதேவியின் பெயரால் இந்தக்கோயில் கட்டப் பட்டுள்ளமை, இதன் பெயரால் புலனாகிறது.

## பெரியகோயிலுக்கு மானியம்

தான், தஞ்சையில் எடுப்பித்த பெரிய கோயிலுக்கு ஏராளமான பொன்னையும் பொருளையும் மானியமாக வழங்கியதோடு, பல ஊர்களையும் தானமாக இராசராசன் கொடுத்துள்ளான். அவற்றின் வருவாயைக் கொண்டு நாள் பூசையும் சிறப்புமிகு திருவிழாக்களை யும் நடத்துவதற்கு இராசராசன் ஏற்பாடு செய்து இருந்தான்.[3]

## இராசராசப் பெரும் பள்ளி

பேரரசன் இராசராசனுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பௌத்த சமய விஜாரைகள் பல பழுதுபார்க்கப்பட்டன, புதுப்பிக்கப் பட்டன. சில புதியதாகக் கட்டப்பட்டன. இவற்றிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திருக்கோணமலைப் பகுதியில உள்ள வேளகாம விகாரையைக் குறிப்பிடலாம். இராசராசன் ஆட்சியில், இந்த விகாரை புதுபிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. இந்த விகாரை யில் உள்ள இராசராசன், இராசேந்திரனுடைய தமிழ்க் கல்வெட்டு

2. கொழும்பு அரும்பொருள் காட்சியகத்தில் உள்ள கல்வெட்டு.
3. தெ. இந். கல். தொகுதி. 2; எண் 92.

# மன்னர்மன்னனும் மாதேவர் கோட்டமும்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட

..............................................................

தேசுகொள் கோராச கேசரி வர்மன்
உடையர் ஸ்ரீராசராசதேவர் எனக்
கல்லெழுத் தாவணம் கழறுமா மன்னவன்
விஞ்சையர் வியப்பத் தஞ்சைமா நகரில்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கள், இந்தப் பௌத்த விகாரையை 'இராசராசப் பெரும் பள்ளி' எனும் தமிழ்ப் பெயரால் சுட்டுகின்றன.[4] இதனால் சோழப் பெரு வேந்தனது சமயப் பொறையை அறிகிறோம்.

ஆட்சி முறையிலும், ஈழம் தமிழகத்தைப் பின்பற்றத் தொடங்கியது. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள், இக்காலம் முதற் கொண்டு பேரளவில் அங்குக் குடியேறத் தொடங்கினர்.

இதன் விளைவாக, நீரோடை நிலங்கிழிக்க நெடுமரங்கள் நிறைந்து பெருங்காடாக விளங்கிய அந்த நாடு, தமிழர்களின் அயராத உழைப்பால் பொன் கொழிக்கும் திருநாடாக மாறியது. வாழ்வியல் துறையிலும் கலைத்துறையிலும் தமிழ்ப் பண்பாட்டின் உந்துதலால், புதியதோர் எழுச்சியைப் பெற்றது.

---

4. இலங்கைக் கல்வெட்டியல் அறிக்கை (ASCAR) 1953. P. P. 9-12.

மஞ்சுசூழ்க் திலங்கும் மாமலை புரையக்
கலைவளம் யாவும் நிலைகொளச் செம்பொன்
மேருவென்றான்றோர் வியப்புறத் தெய்வத்
திருநகராகும் தேவகோட்டமாம்
கருவரை ஓங்கிய பெரிய கோயிலை
அமரச் சிற்பியர் அதிசயங் கொள்ள
கமழுங் கட்டிடக் கலைவலாரெல்லாம்
தலையண்ணாந்து மலைப்பொடு காணப்
பொறியிய லாளர்நெஞ் சிறும்பூது கொள்ளச்
செய்வினைச் செழிப்பும் கைவினைச் சிறப்பும்
கவினுறப் பூத்துக் களிப்புற ஓங்கிக்
கற்பனைக் கெல்லாம் கற்பனை வழங்கிப்
பொற்புற விளங்கி அற்புதம் விளைக்கும்
சிற்பத் திறனெலாம் தெய்வத் தச்சரும்
இமையா நாட்டத் தெழிலுறக் காண
அடிமுதல் முடிவரை படிமுறை யாக
அளந் தளந் துவக்க அசையாத் தேரெனக்
கண்ணிய கலைக்கெலாம் கண்கூடாக
எண்ணி எழுப்பிய பொன்னியின் செல்வன்
பொருள் மிகுநெறிதேர் அருண்மொழி வன்மன்
தெய்வமும் கலையும் வேறுவே றில்லெனும்
மெய்தெரிந் தியலிசை நாடகம் மூன்றையும்
கைவர வளர்த்த காவலன் பொய்தவிர்
நாவினர் மன்பதை நலம்பெற நவின்ற
பாவளர் செந்தமிழ் மாமறை யாகிய
பொருவறு திருமுறை பூவினிற் பொலிவுறப்
பண்ணொடு பாடவும் கண்ணுதற் பெருமான்
தளிதொறும் பூவையர் களிநடம் புரியவும்
உவந்துபல் லாயிரம் நிவந்தம் புரிந்த
நெடுநோக் காளன் நேரியர் செம்மல்
அருவரை எனத்திகழ் ஆலய மதனுள்.
கருவரைச் சுற்றிற் காவிய மாக
தேவியல் கமழும் ஓவியம் வரைந்தோன்
தவநிலை சூழும் அவிநய நாடகம்
ஒருநூற் றெட்டையும் திருவறைச் சுற்றில்
கவிநயந் தோன்றக் கல்லில் வடித்த
பொற்பமை சிற்பப் புரவலன் அற்புதக்
கவின் கலைக் காதலன் கலைஞர் தம் காவலன்
தேவர்தம் உருவெலாம் செம்பொனாற் சமைத்துக்

கோவிலின் மாண்பினை பூவினில் உயர்த்திய
செம்பியன் தென்னகச் செஞ்சுடர்ப் பேரொளி
குடவோலை முறையாற் குடிமக்களாட்சியை
நடைமுறைப் படுத்தி நாட்டை அளந்து
கோட்டம் வகுத்துக் காட்டிய கோமகன்
ஏந்துறு கொள்கையை மாந்தர்க் குணர்த்திய
வேந்தருள் வேந்தன் விளைத்த பொற் கோயில்
வரை சிறிதின்றி மருதமாய் விளங்கும்
தஞ்சைமா நகரில் மஞ்சு சூழ்ந்திலங்கும்
தெக்கண மேருவாய்த் திகழ்தரலாலே
மாபெருங் கோயில் எனமதிப்பார் சிலர்
அருவுரு வாகிய பெருவுடை யாரின்
திருவுரு நோக்கிப் பெரிய கோயிலென
ஒருசிலர் கூறி உளமுவப் பார் சேர்
கலையெலாம் பொலியும் நிலையினால் ஓங்கி
அளவினா உயர்ந்ததாற் பெரிய கோயிலென
விளம்புவார்சிலர் உளங்கொள நோக்கின்
கலையினும் அளவினும் இதனினும் மிக்கவை
உலகிடைக் காணுதற் இயலும் அதனாற்
காரணம் வேறெனக் கருதுதல் வேண்டும்
சாதியும் சமயமும் ஓதுறும் வேதமும்
மொழியும் வாழ்க்கை முறைமையும் கடந்து
கடல்மலை எல்லை இடம் படக் கடந்து
தமிழகச்சால்பினை தமிழ் மொழிமாண்பினை
இமிழ்கடல் சூழ் புவி எங்கணும் பரப்பி
வல்லிதின் விளக்கும் வாய்மையினாலும்
மெய்யுணர் வளிக்கும் சைவ நன்னெறியின்
தெய்விக மாண்பினைச் செப்பு தலாலும்
கலையெலாம் தெய்வ நிலையினை எய்தக்
கருவியென்றுணர்த்தித் திருவருள் பயக்கும்
உணர்வினைப் பெருக்கும் ஒண்மையினாலும்
அரிய நற்பெரிய கோயிலென் அறைக !
நிலமுள்ளளவும் நீருள்ளளவும்
கலை உள்ளளவும் நிலை பெற்றோங்கும்
இறை உறை கோயிலை எழுப்பிய மன்னவன்
நிறைபுகழ் ஓங்க வாழ்த்துவம் நினைந்தே.

# ஊதியமும், நுகர்பொருட்களின் விலை நிலையும் 1000 ஆண்டு ஒப்பீடு

த. பத்மநாபன் M. A., M. L. I S.

தஞ்சை பெரியகோயில் நிர்வாகத்திற்கும், பராமரிப்பிற்கும் தேவையான ஊழியர்களுக்கு, அவர்கள் செய்கின்ற ஊழியத்தின் மதிப்பிற்கேற்ற ஊதியம் தருவதிலும் சமுதாயத்தில் அவர்களுக்கிருந்த நிலைக்கேற்றவாறு அவர்களைப் பாகுபடுத்துவதிலும்; மாமன்னன் இராசராச சோழன் தராசின் முள்ளுக்கொப்ப சீர் தூக்கும் தன்மைபெற்றிருந்தான்.

## நாட்கூலி

1. ஆலயத்தில் திருப்பதிகம் பாடுவோர் ஆண்டு முழுதும் நிலைத்து ஒரு ஆலயத்தில் ஊழியம் செய்யமாட்டார்கள் என்றும், பல ஊர்களில் உள்ள பல ஆலயங்களுக்குச் சென்ற வண்ணம் இருப்பாகள் என்றும், அத்தகையயோரை நிரந்தரமான பணியில் வைத்துக்கொள்ளாது, ஒருவருக்கு நாளொன்றுக்கு 3 குறுணி நெல் மட்டுமே ஊதியமாகக்கொடுக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது, அதைத்தவிர காசுகள் எதுவும் கொடுக்கப்படவில்லை.

2. திருமணம் ஆகாத ஆலய வேலையாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு 2 குறுணி நெல்லும், ஆண்டுக்கு 4 காசுகளும் ஊதியமாகக்கொடுக்கப்பட்டன.

3. நிரந்தரமான ஆலய வேலையாட்களுக்கு நாளொன்றுக்கு 3 குறுணி நெல்லும், ஆண்டுக்கு 4 காசுகளும் ஊதியம் கொடுக்கப்பட்டன.

4. மாலைகட்டுவோர் சில நாட்களில் ஆலயப்பணியை விடுத்து வேறுபணிகள் செய்யச் செல்வாராகையால், நிரந்தரமாக அவர்களைப் பணியில் வைக்காது. நாளொன்றுக்கு 2 குறுணி நெல்லும், ஆண்டுக்கு 5 காசுகளும் கொடுத்தது பொருந்தும்.

## ஆண்டு ஊதியம் பெற்ற நிரந்தர ஊதியர்கள்

செய்கின்ற பணியின் சமுதாய மதிப்பை அடிப்படையாகக் கொண்டு, ஆலயத்தில் மற்ற ஊழியர்கள் பல நிலைகளில் மதிக்கப்பட்டனர் என்பதை இராசராசன் வழங்கிய ஆண்டு ஊதிய முறையிலிருந்து அறுமானிக்க முடிகிறது.

**1. முதல்நிலை ஊழியர்.** ஆண்டு தோறும் 200 கலம் நெல் ஊதியமாகப் பெற்றவர்கள் :

கணக்காளர்

நட்டுவனார்

கோயில் கணக்காளர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தஞ்சைத் தலைநகரில், திருவாரூரிலிருந்து ஊர் மாறிவந்து தங்கி, நாட்டிய மாட்டுவிக்கும் ஊழியம் செய்வதை நட்டுவனார்கள் விரும்பி ஏற்கவேண்டும் என்ற காரணத்தால், அவர்கட்குக் கணக்காளருக்கு இணையான முதல் நிலை ஊதிய முறையமைத்தது இராசராசனின் நுண்ணறிவின் விளைவேயாகும்.

**2. இரண்டாம் நிலை ஊழியர்.** ஆண்டு தோறும் 175 கலம் நெல் ஊதியமாகப் பெற்றவர் :

வீணை வாசிப்பவர்

மற்ற இசைக்கருவிகள் வாசிப்பதை விட, வாய்ப்பாட்டுப் பாடுவதையும் விட வீணை வாசிப்பது திறமையான கலையாக மதிக்கப்பட்டது தெரிகிறது.

**3. மூன்றாம் நிலை ஊழியர்.** ஆண்டுதோறும் 150 கலம் நெல் ஊதியம் பெற்றவர்கள்.

பாடகர் — சமஸ்கிருதமொழி
பாடகர் — தமிழ்மொழி
பொன்னாபரணந்தைப்பவர்
தலைமைத் தச்சர்.

சமஸ்கிருதமொழி, தமிழ்மொழிப் பாடகர்களை இணையாகப் போற்றியது பாராட்டுதற்குரியது.

தலைமைப் பொற்கொல்லரைக் காட்டிலும் பொன்னாபரணார் தைப்பவர்களுக்குக் கூடுதலான ஊதியம் கொடுக்கப்பட்டது. பொற்கொல்லர் தொழிலோடு, தையல் தொழிலும் தெரிந்தவரை மேல் நிலையில் வைத்தது பொருந்தும்.

தலைமைத்தச்சர் என்னும் பெயர் தலைமைச் சிற்பியையும் குறிக்கும்.

**4. நான்காம்நிலை ஊழியர் :** ஆண்டுதோறும் 100 கலம் நெல் ஊதியம் பெற்றவர்;

நாட்டிய மகளிர்
மத்தளம் வாசிப்பவர்
வண்ணார்
தையற்காரர்
கன்னார்
பொற்கொல்லர் மேற்பார்வையாளர்

மத்தளம் வாசிப்பவர் பாடல்களுக்கும், நாட்டியத்திற்கும் இணைந்து வாசிப்பவரே ஆவர். ஆனால், பறையடிப்பவர்களுக்குரிய ஊதியம் ஆலயத்திலிருந்து பெற்ற கடனிற்குரிய வட்டித்தொகைக் கீடான பணியாகக் கருதப்பட்டது.

பொற்கொல்லர்களை மேற்பார்வையிடுவோருக்குரிய ஊதியம் மட்டுமே குறிக்கப்பட்டதிலிருந்து, பொற்கொல்லர்கள் ஆலயத்தின் நிரந்தரப்பணியாளர்களாக நியமிக்கப்படவில்லையென்றும், அவ்வப்போது ஆபரணங்கள் செய்யும் தேவை ஏற்படும் போது மட்டுமே நியமிக்கப்பட்டனர் என்றும் தெரிகிறது.

**5. ஐந்தாம் நிலை ஊழியர்:** ஆண்டுதோறும் 75 கலம் நெல் ஊதியம் பெற்றவர்:

துணைக்கணக்காளர்
தச்சர்

சாதாரண தச்சர்பெறும் ஊதியத்தைவிட, தலைமைத் தச்சர் இருமடங்கு கூடுதலான ஊதியம் பெற்றார்.

**6. ஆறாம் நிலை ஊழியர்.** ஆண்டுதோறும் 50 கலம் நெல் ஊதியம் பெற்றவர்.

விளக்கேற்றுபவர்
நாவிதர்.

**7. ஏழாம் நிலை ஊழியர்.** ஆண்டுதோறும் 40 கலம் நெல் ஊதியம் பெற்றவர் :

குடைபிடிப்பவர்

உடல் வலுவற்றவர், வயோதிகர் ஆகியோரே இச்சிறு பணியினைச் செய்வாராகையால், அத்தகையோர் கடைநிலை ஊதியம் பெற்றனர்.

## கருதப்படவேண்டியவை.

நிரந்தரமான ஆலய வேலையாட்கள் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு 3 குறுணி நெல் வீதம் ஓராண்டுக்குக் கணக்கிட்டால்

92 கலமும், 4 காசுக்களுக்குரிய நெல் 8 கலமும் சேர்த்து மொத்தம் 100 கலம் நெல் ஆண்டு ஊதியம் பெற்றனர். இவர்கள் நான்காம் நிலை ஊழியர்களான நாட்டிய மாணிர், பொற்கொல்லர் மேற் பார்வையாளர் ஆகியோருக்கிணையாக ஊதியம் பெற்றனர். ஆனால் ஆலய வேலையாட்களுக்கு ஆண்டு ஊதியமாகக் கொடுக்காது நாட்கூலியாகக் கொடுத்தது இராசராசனின் ஆலய நிர்வாகத் திறமையையே காட்டும்.

ஆண்டு ஊதியம் பெறுபவர்கள் கூறும் குற்றேவல்களைக் கேட்டுச் செயல்படுவது ஆலய வேலையாட்கள் கடமையாதலால் அவர்களை நாட்கூலியாக நியமித்தது வியக்கத்தக்கது.

அர்ச்சகர், ஆலய அதிகாரி போன்றவர்கள் இப்பட்டியலில் இடம் பெறாதது அவர்கள் செய்த பணிகளுக்காக, நிலங்களை மானியமாகப் பெற்றனர் என்பதை உணர்த்துகிறது.

## நுகர் பொருட்களின் விலை நிலை

### நாணயவிலை

அக்காலத்தில் **கிடைப்பதற்கரிதான பொருட்கள் மட்டுமே** நாணய மதிப்பில் விற்கப்பட்டன.

**முகத்தல் அளவை:** ஏலம்—1 காசுக்கு-1 குறுணி 4 நாழி
செண்பகமொட்டுகள்- 1 காசுக்கு - ½ பதக்கு.

### நிறுத்தல் அளவை

இலாமிச்சம் வேர்—1 காசுக்கு — 605 பலம்
சூடம் — 1 காசுக்கு — 3 கழஞ்சு
சர்க்கரை — 1½ காசுக்கு — 3 பலம்

1½ காசுக்கு 3 கலம் நெல் விற்ற அக்காலத்தில் ஒரு பலம் சர்க்கரையின் விலை ஒரு கலம் நெல்லுக்குச் சமமாக இருந்த தென்பது, கரும்பு சாகுபடி செய்தல் மிகக்குறைவென்பதைக் காட்டுகிறது.

மிக விலைமதிப்பு அதிகம் இருந்தது சூடத்திற்கு. சீன நாட்டி லிருந்து இறக்குமதியான பொருள் என்பதே அதன் காரணமாகும்.

### பண்டமாற்று

சோழநாட்டிலேயே அதிகம் விளைவிக்கப்பட்ட பொருட்கள் நெல்லுக்கு பண்டமாற்றாகக்கொடுக்கப்பட்டன.

அவ்வாறு முகத்தல் அளவையில் கொடுக்கப்பட்ட பொருட்கள் பருப்பு, மிளகு, கடுகு, உப்பு, பயிறு, தயிர், நெய் ஆகியவையாகும். நிறுத்தல் அளவையில் புளி கொடுக்கப்பட்டது.

வாழைக்காய், வாழைஇலை, வெற்றிலை, பாக்கு ஆகிய காய்கறி வகைகள் பண்டமாற்றில் கொடுக்கப்பட்டமை, அவை அதிகமாகக் கிடைக்காததையே சுட்டிக்காட்டும்.

எள், மற்ற காய்கறி, கனிவகைகள் கல்வெட்டுக் குறிப்புகளில் இடம் பெறாதது அவை மக்கள் வீட்டுத்தோட்டங்களிலேயே எளிதாகக் கிடைத்தன என்பதை ஊகிக்கச்செய்கிறது.

## கருதப்பட வேண்டியவை

இராசராசன் காலத்தில் உப்பும், நெல்லும் ஒரே விலை மதிப்பைப் பெற்றிருந்தன. சோழநாட்டில் நெல்விளையும் நிலங்கள் அதிகமாக இருந்ததால் மற்ற பொருட்களுடன் ஒப்பிடும்போது, நெல்லின்விலை மதிப்பு குறைவாகக் கருதப்பட்டது எனலாம். அதே சமயம் உப்பு தயாரித்தல் உமணர் என்ற இனத்தவரிடம் மட்டுமே அரசின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டிலும் நடந்ததால் உப்பின் விலை மதிப்பு கூடுதலாக இருந்திருக்கிறது. உப்பளங்கள் மரக்காணம், ஆயதுரை, வாரியூர், கன்னியாகுமரிஆகிய இடங்களில் இருந்தமை கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பண்டமாற்று விகிதத்தில் 60 வெற்றிலைகளும் 30, பாக்குகளும் என்று இணையாகக் குறிக்கப்பட்டிருப்பது, இரண்டு வெற்றிலைகளுக்கு ஒருபாக்கு என்ற விகிதத்தில் பயன்படுத்தும் பழக்கம் தற்போது இருப்பதைப் போலவே அக்காலத்திலும் இருந்ததை அனுமானிக்கத் தூண்டுகிறது.

## 1000 ஆண்டுகளுக்குப்பின் ஊதியம்-விலை நிலை ஒப்பீடு

கி.பி 984 ஆம் ஆண்டின் ஊதியத்தையும், நுகர் பொருட்களின் விலைநிலையையும், கி.பி. 1984 ல் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இராசராசன் காலத்தில் நான்காம் நிலை ஊழியர்கள் ஆண்டு தோறும் 100 கலம் நெல்லை ஊதியமாகப் பெற்றனர். 1984 ல் 100 கலம் நெல்லின் விலை மூட்டை ஒன்று ரூ 100 வீதம் சுமார் ரூ 5000 ஆகும். இதை மாத ஊதியமாகக் கணக்கிட்டால் மாதம் சுமார் ரூ 420 ஆகும்.

# ஒலோக மாதேவீஸ்வரம்

திரு. நடன காசிநாதன்

## பட்டத்தரசி எடுத்த கோயில் :-

பேரரசன் இராசராசனின் மனைவியர்களில் தலைமைத் தேவியாக, பட்டத்தரசியாக விளங்கியவள் 'ஒலோக மாதேவி' கல்வெட்டுகளில் 'உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் நம்பிராட்டியார் தந்திசக்தி விடங்கியரான ஸ்ரீ ஒலோக மாதேவியார்' என்று பெருமதிப்புடன் இவர் குறிப்பிடப்படுகின்றார். ராஜராஜன் தன் பெயரில் தஞ்சையில் 'ராசராசேச்சுரம்' என்ற பெயரில் பெரியகோவில் கட்டத் துவங்கிய காலத்திலேயே இவளும் திருவையாற்றில் தன் பெயரால் 'ஒலோக மாதேவீச்சுரம்' என்ற ஒரு சிறிய கோயிலைக் கட்டத்தொடங்கினாள். சிறிய கோயில் ஆதலால் தஞ்சைக் கோயில் கட்டி முடித்து வழிபாட்டிற்கு வருவதற்கு 4, 5 ஆண்டுகளுக்கு முன்னதாக இக்கோயில் முடிவுற்று வழிபாட்டிற்கு வந்துவிட்டது.

ராசராசன் தன் கோயிலைக் கட்டி முடித்து வழிபாட்டிற்கு கொண்டு வந்ததின் பிறகு தன் கோயிலில் 400 நாட்டிய மகளிர்களை நடனமாடச் சோழ நாட்டுக் கோயில்களில் இருந்தெல்லாம் வரவழைத்துப் பெரியகோயிலை ஒட்டிக் குடியிருப்புகள் அமைத்து அவர்களுக்கு வீடுகள் வழங்கினான். இக்குடியிருப்பு 2 வீதிகளை உடையதாக 4 வரிசைகளில் வீடுகளுடன் விளங்கியது. அந்த

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நான்காம் நிலை ஊழியர்கள் பெறும் ஊதியமும், 1000 ஆண்டுகளுக்கு முன் இராசராசன் காலத்தில் அதே நிலையிலிருந்த ஊழியர்கள் பெற்ற ஊதியமும் ஏறத்தாழ சமமேயாகும்.

ஊதியநிலை, நுகர் பொருட்களின் விலைநிலை இவை இரண்டும் ஒன்றுக்கொன்று இணையாகவே காலந்தோறும் அமையும்.

## ஆதார நூல்கள்

South Indian Inscriptions Vol. II
கே. கே. பிள்ளை, சோழர் வரலாறு
T. V. சதாசிவபண்டாரத்தார்: பிற்காலச் சோழர் வரலாறு.

நாட்டிய மகளிர் குடியிருப்பில் (தவிச்சேரி) முதல் 2 வரிசைகளிலும் முதலில் உள்ள வீடுகளில் யாரைக் குடியமர்த்தினான் தெரியுமா ? இந்தப் பட்டத்தரசி கட்டிய ஒலோக மாதேவீஸ்வரத்தில் நாட்டியப் பெண்களாகப் பணிபுரிந்த பெண்களைத்தான். மொத்தம் 9 பேர்கள். இப்படிச் சிறப்புமிக்க இக் கோயிலின் கல்வெட்டுச் செய்திகள், கட்டிட அமைப்பு, சிற்பச் செழுமை மற்றி இங்கு காண்போம்.

## கோயிலை உருவாக்கிய சிற்பிகள் :-

பெண்ணரசியின் பெண்மைக்கும், நளினத்துக்கும் அழகிற்கும் ஏற்ப அற்புதமாக அமைந்த இக்கோயிலை வடிவமைத்து உருவாக்கிய பெருந்தச்சர், தச்சர் ஆகியோரை மறவாது அவர்களுக்கு கோயில் நிலங்களில் தச்சக்காணி பங்கு கொடுத்து அவர்கள் பெயர்களையும் கல்வெட்டில் ஒலோக மாதேவி பொறித்துள்ளாள். அவர்கள் தச்சாசாரியன் எழுவடியான் காரோணனான புவனி மாணிக்க ஆசாரியன் என்பவனும், நக்கன் ஆச்சனான கலியுக ரம்பைப் பெருந்தச்சனும் ஆவர்.

## கட்டிட அமைப்பு

இக்கோயில் ஒரு தளத்தையும் நாகர சிகரத்தையும் உடைய ஏகதள விமானக் கற்றளியாகும். முழுதும் கல்லால் அமைக்கப்பட்ட இக்கோயிலின் விமானப் பகுதி இன்று செங்கல் சுதையால் பழுது பார்க்கப்பட்டுள்ளது. சிறு அர்த்த மண்டபம், இடை நாழிகை, மகா மண்டபம் ஆகியவையுடன் இக்கோயில் திருவையாற்றில் ஐயாறப்பன் கோயிலின் வட புறத்தில் வடகயிலாயம் என்ற பெயருடன் தனி மதிலுக்குள் கிழக்கு நோக்கி விளங்குகின்றது. அர்த்த மண்டபத்தூண்கள் சிறுசிறு சுதைச் சிற்பங்களுடனும் அழகிய அணி வேலைப்பாடுகளுடன் கூடியவை. மகாமண்டபத்தூண்கள் எளிமையாக எவ்வித வேலைப்பாடும் இல்லாதவை. கருவறை, அர்த்த மண்டப அதிஷ்டானப் பகுதிகள் மிகுந்த அழகான வேலைப்பாட்டுடன் பத்மஜகதி விருத்த குமுதம், யாளிவரியுடன் கூடியவை. இச்சிறு கோயிலுக்கு பரிவார ஆலயங்கள் என்னும் சுற்றுக் கோயில் இருந்திருக்க வேண்டும் இன்று அருகில் தோப்பில் கிடக்கும் கன்னியர் எழுவர் சிற்பங்களை நோக்கும் போது சுற்றுக் கோயில் இருந்திருக்கக் கூடிய வாய்ப்பு உறுதிப்படுகிறது.

## சிற்பங்கள் :

கருவறைச் சுவரில் மூன்று மாடங்கள் உள்ளன. அவற்றில் தெற்கில் தென்திசைக் காவலனும், வடக்கில் நான்முகனும் உள்ளனர். மேற்கு மாடத்தில் சிற்பம் ஏதுமில்லை. தெற்கில்

உள்ள தென்திசை மூர்த்தி சிற்பம் சிறிது சிதைந்திருந்த போதிலும் மிக அழகான சிற்பம். சோழர்காலச் சிற்பங்களை ஆய்வு செய்த திரு டக்ளஸ் பேரட் ராசராசன் காலச் சிற்பங்களிலேயே இச்சிற்பம் மிக அழகும் வனப்பும் உடைய சிற்பம் என்கின்றார். தென்திசைக் காவலனுக்கு நிழல் தரும் ஆலமரத்தில் பூக்குடலை, அணில், பாம்பு, பறவைகள், அக்கமாலை என்று சிறுசிறு உருவங்கள் சிறப்புடன் விளங்குகின்றன. நான்முக மூன்று முகத் தோற்றமும் தலைக்கு மேல் உள்ள வெண்சாமரங்கள், கொற்றக்குடையும் காலைவைக்க அமைந்த திண்டும் மிகநேர்த்தியானவை. அர்த்தமண்டபத்தில் நடராசர் உருவம் இருந்து மிகவும் சிதைந்து மறைந்து விட்டது. கோயிலின் எதிரில் உள்ள சிறுநந்தி உருவம் கூட அதன் நாக்கு, பார்வை, வால், முதுகில் கட்டிய ஆசனத்துணி ஆகியவற்றால் சிறப்புற அமைந்துள்ளது. துவாரபாலகர்கள் அச்சம் தரும் உருவத்துடனும் புன்னகை தவழ் முகத்துடனும் விளங்குகின்றனர்.

## கல்வெட்டுச் செய்திகள் :

இக்கோயிலில் ஒலோகமாதேவியாராலேயே ஆணையிடப் பட்டுப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், இராசேந்திரன் காலக் கல்வெட்டுகள், ராசாதி ராசன் காலக் கல்வெட்டுகள் என்று சோழர் காலக் கல்வெட்டுகள் மட்டுமே உள்ளன.

ஒலோகமாதேவியர் கோவிலை உருவாக்கியதோடு மட்டும் இல்லாது அக்கோயிலுக்கு வேண்டிய செப்புத் திருமேனிகள், திருமேனிகளுக்கு வேண்டிய அணிகள், வழிபாட்டிற்கு வேண்டிய பரிகலன்கள்,வழிபட்டுப் பணி புரிய சகலவிதமான பணியாளர்கள், வழிபாட்டிற்கும் பணியாளர்களுக்கும் வேண்டிய செலவினத்திற்காக நெல், நிலம் என்று அனைத்தையும் வழங்கிக் கல்வெட்டுப் பொறித் துள்ளார்.

## உடன் ஆணை :

இரண்டாம் ராசராசன் மெய்க்கீர்த்தி அவனுடைய பட்டத்தரசி உடன் ஆணையும் உடன் இருக்கையும் உடையவள் என்று குறிப்பிடும். அதற்கு முன்னோடியாக முதல் ராசராசனைப் போலவே அவனது பட்டத்தரசி ஒலோகமாதேவியும் ஆணையிடு வதையும், தான் எடுத்த கோயில் என்று சொல்லிக் கொள்வதையும் அவளது கல்வெட்டு வரிகளால் அறிகின்றோம். அவை

*"உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் நம்பிராமராயர்*
*தந்தி சக்தி விடங்கியரான ஒலோக மாதேவியார்*
*ராஜேந்திர சிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டு*

> திருவையாற்றுப் பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி.
> ஒலோகமாதேவீஸ்வரம் உடைய மகாதேவர்க்கும்
> ஒலோக விடங்கதேவருள்ளிட்ட திருமேனிகளுக்கும்
> செய்வித்த பொற்கொள்கை முதலிய உள்ள
> திருவாபரணங்களும் கல்லிலே வெட்டிவிக்க
> என்று அருளிச் செய்ய'' (521/V)

என்ற வரிகளாகும்.

## பெண் அதிகாரிகள்:

ஒலோக மாதேவிக்கு என்று தனி அதிகாரிகள் இருந்தனர். அவர்களில் அதிகாரிகளும், அதிகாரிச்சிகளும் இருந்தனர் என்பதை அறியும் போது சோழர் காலத்தில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பிடத்தையும் அவர்களுக்கு இருந்த திறமையும் கண்டு வியக்காதிருக்க முடியாது.

> "உடன் கூட்டத்து அதிகாரம் செய்கிற
> கோவலூர் உடையான் காடன்
> னூற்றெண்மரையும் அதிகாரிச்சி
> எருதங்குஞ்சரமல்லியையும்'' (521/V)

என்று எருதந்குஞ்சர மல்லி என்ற அதிகாரிச்சி கல்வெட்டில் குறிக்கப்படுகின்றார். இராசாதிராசன் காலத்திலும் இக் கோயில் கல்வெட்டில் அதிகாரிச்சி ஒருத்தி குறிக்கப்படுகின்றாள் அவளது பெயர் 'அதிகாரிச்சி சோமயன் அமித்ரவல்லி' என்பதாகும். (520/V)

## அணிகலன்கள் :

ஒலோகமாதேவி பல்வேறு அணிகளைத் தானமாக இக்கோயிலுக்கு வழங்கியதைக் கல்வெட்டுகள் விளக்குகின்றன. இவை பொன்னாலும், வெள்ளியாலும், முத்துக்கள், பவழம், மாணிக்கம், பொத்தி, நீலம், தருப்பு, ஸ்பிரயோகம் ஆகிய மணிகள் பதித்தும் கோத்தும் இருந்தன. அவ்வணி கலன்கள் பட்டம், திருமுடி, குதம்பைகள் (காதணி) தாழ்கூட்டு, மாலை, தனிவடம், திரிசரம், பஞ்சசரி, ஸ்ரீ சந்தம், முத்துப்பட்டிகை, பொற்கைக்காறை, பொற்காரைகால் நீலத்தாலான நுழுத்து, முத்தின் நுழுத்து, திரு, முத்து வளையல், முத்துப்பட்டிகை, சுட்டி இடுக்கு வளையல் முதலியனவாகும். இது தவிர பொற்கொள்கை என்று சொல்லக்கூடிய பொன்னால் ஆகிய அங்கிக்கவசங்களையும் இவள் வழங்கியிருக்கின்றாள். பொன்னாலேயே பூக்கள் செய்தும் வழங்கியுள்ளாள்.

**திருப்பரிகலன்கள் :**

வழிபாட்டிற்கு உபயோகப்படும் வண்ணம் பொன், வெள்ளி, செம்பு, தரா ஆகியவற்றால் கலன்கள் இக் கோயில் வழிபாட்டிற்குத்தரப் பட்டன. அவை பொற்றளிகை, ஒட்டு வட்டில், மடல், மாநவட்டில், சாமரக்கை, ஈச்சொப்பிகை, பள்ளித் தொங்கல் மகுடம், மண்டை, வெள்ளித்தளிகை, வெள்ளிக்கலசம், சட்டுவம், கைச்சோலம், செம்புத் தளிகை, பலித்தாலம், மூக்கில்லாத கைவட்டகை, செம்பு, காளம், துத்துரு, கலசம், தராக்கெண்டி, சங்கு கால்கள், சட்டி கால்கள், அட்டவனைக்கால்கள், ஆக்கு பானைக்கால்கள் தூப்பாத்திரம், திருச்சத்திரம், சருவம், சருவச்சட்டி, இலைத்தட்டு, சட்டுவம், காக முகிழ், தூபமணி, சேகண்டிகை, கைமணி, எறிமணி, ஆகியவையாகும்.

**கண்ணாடி**

ஒலோக மாதேவி மேலும் செம்பால் செய்து பொன் போர்த்திய கண்ணாடி ஒன்று செய்து கொடுத்தாள். அதன் வட்டத்தைச் சுற்றி சிறு சிறு பாவை உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆடும் பாவைகள், உடுக்கை வாசிக்கும் பாவைகள், மத்தளம் கொட்டும் பாவைகள், பாடும் பாவைகள் என்று அவை விளங்கின. இவை கல்வெட்டின் மூலம் தான் நாம் அறியக் கிடைக்கின்றன. ஒலோக மாதேவியின் கலையார்வத்தை விளக்குவன இவை.

**விமலாதித்தன்**

இராசராசனின் மகள் குந்தவை வேங்கிச் சாளுக்கிய இளவரசன் விமலாதித்தனுக்கு மணம் முடிக்கப்பட்டாள். இவ்விமலாதித்தன் ஒலோகமாதேவீசுவரத்திற்கு வருகை புரிந்து வெள்ளிக் கலசம் கொடையாகக் கொடுத்துள்ளான். "ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு 29 வது ஸ்ரீ விஷ்ணுவர்த்தன மகாராஜராகிய விமலாதித்ததேவர் வடகரை இராஜேந்திர சிம்ஹ வளநாட்டுப் பொய்கை நாட்டுத் தேவதானம் திருவையாற்று மகாதேவர்க்கு குடுத்த வெள்ளிக் கலசம்" (514/V) என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

**பணியாளர்கள்**

ஒலோகமாதேவியார் இக்கோயிலில் பணிவிடை செய்யப் பல பணியாளர்களை நியமித்து அவர்களுக்கெல்லாம் ஊதியமாக நிலமும் நெல்லும் வழங்கியுள்ளார். அப்பணியாளர்கள் பட்டியல் கீழ்வருமாறு : ஆர்யபோகம், மாணிதிருக்கள், பதியிலார் (நடன மகளிர்) (32), நட்டுவர், கரணர், மெய்மட்டு, மோர்வியன் வங்கியன், வீணைக்காரர், உடுக்கை வாசிப்பவர் உவச்சு, தலைப்பறை,

# இராசராசன் காலத்து அளவைகள்

சொ. சாந்தலிங்கம், எம். ஏ.

சோழமன்னர்களின் ஆளுகையில் சோழ இராச்சியம் மும்முறை அளக்கப்பட்டது. அவற்றுள் முதன்முதலாக சோழப்பேரரசன் முதலாம் இராசராசன் காலத்திலேயே அளக்கப்பட்டது. அக்காலத்தில் நிலம் அளந்த கோல் 'உலகளந்த கோல்' என வழங்கப்பட்டுள்ளது. இக்கோல் 16 சாண் நீளமுள்ளது எனத்தெரிகிறது.[1] கோவில்களுக்கு நிலம், பொன், அணிகலன்கள், பரிகலன்கள், நெல் நெய் போன்றவற்றைப் பலரும் தானமாக அளித்துள்ளனர். அவ்வாறு அளிக்கப்படும் தானங்கள் அவ்வக்கோயில்களுக்கு எவ்விதக் குறைபாடும் இன்றி சென்று சேர வேண்டும் என்ற எண்ணத்தில்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மத்தளம், தாளம், காடிகை, கண்டை, திமிலை, கைம்மணி, குசவன், வண்ணத்தான், வண்ணான், காச்சுவன், கொல்லன், மரத் தச்சன், ஊர்பறையன், திருவாராதனை செய்வார். (520/V)

## நம்பிகாடன் நம்பி

மேலே கடைசியாகத் திருவாராதனை செய்வாராகக் குறிக்கப்பட்டவரில் "ஸ்தானமுடைய கேத்திர சிவபண்டிதர்க்காக திருவாராதனை செய்யும் ஆத்திரையன் நம்பிகாடநம்பி'' என்பவர் குறிக்கப்படுகின்றார். வரலாற்றாசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் இவர் திருவாரூரிலும், சிதம்பரத்திலும் ஒவ்வொரு பாடல்கள் பாடிய நம்பிகாடன்நம்பி என்று கருதுகின்றார்.

திருவையாற்றில் இராசராசனின் பட்டத்தரசி ஒலோக மாதேவியாரால் சற்றேறக்குறைய கி. பி 1006 ல் கட்டப்பட்ட ஒலோக மாதேவீசுவரம் இவ்விதம் கட்டிடக்கலையாலும் ; சிற்பச் செழுமையாலும் ; நிறைந்த கோயில் வழிபாடு, சமுதாய வரலாறு போன்ற செய்திகள் அடங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வெட்டுகளாலும் சிறந்து விளங்கிய ஒரு கோயிலாகும். இராசராசனைப் போலவே அவனது பட்டத்தரசியும் தெய்வ பக்தியும், ஆளும் திறனும் கொண்டு விளங்கியது. அப்பேரரசனின் சிறப்புகளுக்கெல்லாம் அவள் பக்க பலமாக விளங்கியிருப்பாள் என்று நாம் உணர்ந்து உவகை எய்தலாம்.

அதற்குரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதனை ஆண் டாண்டு தோறும் அளப்பன அளந்து குடுத்தும், நிறுப்பன நிறுத் திட்டும் எண்ணுவன எண்ணிக்குடுத்தும், ஆண்டாண்டு தோறும் நிச்சல் நிவந்தம் சந்திராதித்தவல் செலுத்தக்கடவோம்'[2] என்று கூறும் கல்வெட்டால் அறிகிறோம். இவ்வகையில் இராசராசன் காலத்தில் வழங்கிய நீட்டல், நிறுத்தல், முகத்தல் என்ற மூவகை அளவைகளும் சோழராச்சியம் முழுமையும் வழங்கிவந்தபான்மையை அறிவதே இச்சிறுகட்டுரையின் நோக்கம்.

### நீட்டலளவைகள்:

நிலங்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டவை நீட்டல் அளவைகள். நிலங்கள் எல்லாம் குழி, மா. வேலி என்ற முறையில் கணக்கிடப்பட்டன.

100 குழி — 1மா
20 மா — 1வேலி

என்ற அலகுகள் வழக்கத்திலிருந்தன என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. இது தவிர சதுரம், செய், பட்டி என்ற அலகு களும் கிடைக்கின்றன. பொதுவாக 16 சாண் கொண்டது ஒரு கோல் என்று இருந்தாலும் சோழ இராச்சியத்தின் பல்வேறு பகுதி களில் இராசராசன் காலத்திலேயே இவ்வித கோல்கள் மாறுபட்ட அளவுகளில் வழங்கியுள்ளன. அவை, 16 சாண் கோல்[3], 12 சாண் கோல்[4] 18 சாண் கோல்[5] என்று பாகுபட்டுள்ளன. 'எங்களூா பன்னிரு சாண்கோலால் எண்ணூறு குழி கொண்டது (ஒரு) பட்டியாக' என்று திருவல்லம் கல்வெட்டொன்று கூறுகிறது [6]. 'பதினெண் சாண் கோலால் ஆயிரம் குழி கொண்டது (ஒரு) பட்டியாக' என்று செஞ்சி வட்டம் மேல் சேவூர் கல்வெட்டொன்று கூறுகிறது [7]. எனவே வெவ் வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான அளவு கோல்களும், அவை குறிக்கும் நிலப்பரப்புகளில் வேறுபாடும் இருந்துள்ளமை தெளி வாகிறது. 'விளைக் கோலால் 256 குழி கொண்டது ஒரு மா'[8] என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இத்தகு அளவு கோல்கள் கடிகை களத்துக்கோல்[9], இவ்வூர் வெள்ளிக்கோல் காஞ்சிபுரத்து நின்றா னோடொக்கும் கோல்[10], என்று அவ்வவ் பகுதிகளுக்குத் தக்கபடி பலவித பெயர்களில் வழங்கி வந்துள்ளன.

அக்காலத்தில் தஞ்சைப் பெருங் கோயிலில் செப்புத் திரு மேனிகள் வழங்கிய அரச குடும்பத்தார்கள் அதன் உயரம், நிறை ஆகியவற்றை மிகத் துல்லியமாக அளந்து கணக்கிட்டு வழங்கி யுள்ளனர் என்பதற்கு இக் கோவிலில் உள்ள பல கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன. 'ஒரு முழமே இருவிரல் நீளத்து பதின்அறு

விரல் அகலத்து அறுவிரல் உசரத்து பீடம், ஒருவிரலே ஒரு தோரை உசரத்து பத்மம்' என்று இவ்வித அளவைகள் கூறப்பட்டுள்ளன. எனவே, முழம், சாண், விரல், தோரை என்ற துல்லியமான அலகுகள் இராசராசன் காலத்தில் வழங்கியுள்ளமை பெறப்படும்.

## முகத்தலளவை :

நெல், நெய், போன்றவற்றை அளப்பதற்குப் பயன்படுத்தப் பட்ட அளவைகள் உழக்கு, ஆழாக்கு, நாழி, உறி, பதக்கு, தூணி, குறுணி, செவிடு, காடி, கலம் எனப் பல பிரிவுகள் கொண்டவை. இவை,

| | | |
|---|---|---|
| 4 உழக்கு | — | 1 நாழி |
| 8 நாழி | — | 1 குறுணி |
| 2 குறுணி | — | 1 பதக்கு |
| 2 பதக்கு | — | 1 தூணி |
| 3 தூணி | — | 1 கலம் |

என்ற வாய்பாட்டில் அமைந்திருந்தன. இவை தவிர மரக்கால் என்னும் ஒரு அளவை கல்வெட்டுகள் பலவற்றில் இடம் பெற்றுள் ளன. இம் மரக்கால் பேரரசன் பெயரையும், அவனது குல முதல் வனாகிய நடராசப் பெருமானின் பெயரையும் கொண்டிலங்கின. இராசகேசரி என்னும் மரக்கால், ஆடவல்லான் என்னும் மரக்கால், வீதிவிடங்கன் என்னும் மரக்கால் என்று அவை பெயர் பெற்றிருந் தன. இராசகேசரியும், ஆடவல்லானும் ஒரே அளவில் இருந்தன என்பதை, இராசகேசரி யோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்கால், என்னும் கல்வெட்டுக் கூற்றினால் அறிய முடிகிறது. வேறு சில ஊர்களில் அவ்வவ்வூரில் உறையும் இறைவன் பெயரா லேயே இவ்வித அளவைகள் வழங்கியுள்ளன. 'திருநாரணத் தோடொக்கும் உழக்கு'[11] என்று ஓர் உழக்கு வழங்கியுள்ளது. 'எண்ணாழிக் காலோடொக்கும் நாழி'[12] வாடாகோமளத்து நாராசக் காலோடொக்கும் மரக்கால்,[13] மாம்பழவனேடொக்கும் உழக்கு,[14] கச்சிப் பேட்டு ஊரகத்து நின்ருர் நாழியோடொக்கும் உழக்கு,[15] திரி புவன மாதேவி பொற்கால் னாலாயிரவறோடொக்கும் சிவலோக னான மரக்கால்,[16] என்று பலவித பெயர்களில் பல்வேறு பகுதிகளில் அளவைகள் இராசராசன் காலத்தில் வழங்கி வந்தன.

## நிறுத்தலளவை

பொன் வெள்ளி போன்றவற்றை நிறுப்பதற்கும், செப்புத் திரு மேனிகளை நிறுப்பதற்கும் நிறுத்தலளவைகள் பயன் படுத்தப் பட்டுள்ளன. இவற்றின் அலகுகளாகக் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி

என்பன வழக்கில் இருந்தன. இவ்வித எடைகளை நிறுப்பதற்குத் துலாக் கோல்கள் இருந்தன. அவற்றிற்குப் பெயர்கள் இருந்தமையும் கல்வெட்டுகளால் அறியப் படுகிறது திருவையாறு உலோகமா தேவீச்சுரத்தில் பயன்படுத்தப்பட்ட துலாக்கோல் 'ஒ லோ க விடங்கன்'[17] என்றுபெயர் பெற்றிருந்தது 'துரையாக் கலியென்னும் திலாக்கோல்'[18] ஒன்று இருந்தது என்பதனைத் திருப்புறம்பியம் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. 'ஆடவல்லான் என்னும் கல் இராசராசன் காலத்தில் பரவலாக வழங்கிவந்த எடைக்கல் ஆகும். இது தவிர, தட்சிண மேருவிடங்கன் என்னும் காசுக்கல் ஒன்றும்வழக்கில் இருந்தது. 'தட்சிண மேருவிடங்கன்' என்னும் கல்லால் நிறை எடுத்துப் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை எடுத்தும் கல்லில் வெட்டினபடி[19] என்று கல்வெட்டுக் கூறுவதால் இவ்விரு எடைக்கற்களும் பெருவாரியாக வழக்கில் இருந்தமை பெறப்படும்.

மேலேகுறிப்பிட்டவை தவிரக் காணி,அரைக்காணி, முந்திரிகை, அரைமா, பலம் என்ற சிறிய அலகுகளும் அக்காலத்தில் வழக்கில் இருந்துள்ளன. இவற்றைக் கல்வெட்டுகளில் பொறிக்கும் பொழுது குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளனர். வெற்றிலையைக் கணக்கிடுவதற்குக் கூடப் 'பற்று'[20] என்னும் ஒருவகை அளவு பயன் பட்டுள்ளது. இராசராசன் காலத்திய அளவைகளை இன்னும் நுணுகி ஆராய்ந்தால் சுவையான பல செய்திகள் வெளிப்படும்.

**அடிக்குறிப்புகள் :**

1. பிற்காலச் சோழர் வரலாறு. T. V. சதாசிவபண்டாரத்தார், பக். 536, 537
2. ARE 21/1922
3. ARE 514/1921
4. ARE 238/1921
5. S. I. I. Vol. XVII 243
6. ARE 238/1921
7. S. I. I. Vol. XVII 243
8. S. I. I VII 142
9. ARE 172/1921
10. S. I. I. VII 411
11. S. I. I. XIII 29
12. ARE 171/1915
13. ARE 273/1910
14. ARE 286/1917
15. S. I. I. VII 440
16. S. I. I. XVII 222
17. திருவையாறு, சு. இராசகோபால் பக். 113.
18. ARE 338/1927
19. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் (முதல் தொகுதி) தொல் பொருள் துறை வெளியீடு
20. ARE 120/1925

# தஞ்சைப் பெரிய கோயில் சிற்பங்கள்

பேராசிரியர் **சி. கோவிந்தராசனார்**

இராசராசேச்சரத்தின் கருவறையில் எழுந்தருளப் பெற்றுள்ள திருவுருவம் இலிங்கத் திருமேனியாகும். வடிவில் மிகப் பெரிதாகை யால் பிற்காலத்தில் 'பெருவுடையார்' என்று பெயர் பெற்றுள்ள தாயினும், 'இராசராசேச்சரமுடையபரமசுவாமி என்றே இராசராசனின் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இவ்விலிங்கத் திருமேனியின் 'ஆவுடையார்' என்னும் அடி பீடம் 54 அடி சுற்றளவும், 6 அடி உயரமும் கொண்டதாகும். 'பாணம்' என்னும் இலிங்கம் திரண்டு உருண்ட, நீண்ட வடிவத்ததாகும். இதன் உயரம் 13½ அடியாகும்.

இலிங்கத்தினை நிறுவி மருந்து சாத்தியபோது (பந்தனம்) மருந்து இறுக்கம் பெறாமல் இளகியதால் கருவூர்த் தேவர் எழுந் தருளித் தமது சித்தினால் பந்தனப்படுத்தினார். என்பது புராணச் செய்தி.

இத்திருமேனியுள்ள கருவறையின் வாயில் உயரம் 13½ அடி யாகவும், அகலம் 6½ அடியாகவும் இருப்பதால் இச்சிறு வழியே எப்படி இலிங்கத்தை அமைக்க முடிந்தது ? என்றெண்ணி ஆயும் போது, ஆவுடையார் பல கற்களின் இணைப்பால் உருவாக்கப் பட்டுள்ளமை புலனாகின்றது. ஆதலின் திருப்பணி முடிந்தவுடன் இலிங்கத்தைச் சிற்பியர் இலகுவாக அமைத்திருப்பதும் புலனா கின்றது.

பாணத்திற்கான கல்லினைச் சோழநாட்டு வணிகச் சாத்தினர் இராசராசனின் விருப்பப்படி வடக்கே நருமதையாற்றங்கரையி லுள்ள மலையினின்றும் கொண்டு வந்துள்ளனர். இதனை இன்றும் கோயில் சித்திரைத் திருவிழாவில் அஷ்ட கொடியன்று, அறுபத்து நான்கு மனைவேளாண்வணிகரை அழைப்பித்துச் சிறப்பிக்கும் செயலுக்குரிய கோயில் மரியாதை நிகழ்ச்சியினின்றும் அறிய முடிகிறது என அறிஞர் குறிப்பர்.

## கருவறைத் திருச்சுற்றுத் தெய்வச் சிலைகள்

### வீரபத்திரர்

இத்திருச்சுற்றின் மூன்று பக்க உட்சுவர்களின் நடுவே பெரு வடிவில் தெய்வ மாடப் புரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தென்புற மாடத்தில் ஒரே கல்லால் ஆன திரிபுராந்தக மூர்த்தம் வலது கையில் வாள், இடது கையில் சூலம் ஏந்திய பாங்கில் வீரப் பொலிவுடன் வீற்றிருக்கின்றது. இக்கற் சிற்பத்தின்மீது சுண்ணச் சுதையால் ஒப்பனை செய்யப்பட்டு வண்ணந்தீட்டப்பட்டுள்ளது. அச்சுண்ணம், வண்ணப் பூச்சு இது போது இல்லை. இதனைச் 'சுரதேவர்' என்று கூறுவர். இச்சிலையின் தோற்றப் பெருமிதத் தாலும், ஏந்தியவாள், சூலங்களைக் கொண்டும் இதனை வெற்றித் திருவுருவான திரிபுராந்தக மூர்த்தம் எனக் கொள்வர். வீரபத்திர வடிவெனவும் கொள்ளலாகும்.

## சதுரக்கூத்தர்

மேற்குப்புற மாடத்தில் இரு காலையும் நொடித்து நடமிடும் சிவமூர்த்தம் உள்ளது. மேல்சுதையிட்டு வண்ணந் தீட்டப்பட்ட நிலைகுலையாமலுள்ளது. இதனைச் 'சத்யோஜோடர்' என்பர். சுண்ணச் சுதையால் முடி, கழுத்து, கைகள், கால்கள், மார்பு, இடுப்பு ஆகிய இடங்களில் சோழர்காலத்து வேலைப்பாடமைந்த அணி கலன்களும் காணப்படுகின்றன. வண்ணப் பூச்சும் ஓரளவு காணப் படுகின்றது. தங்கக் குழம்பினைக் கொண்டு இராசரான் இச் சிற்பத்தினை ஒப்பனை செய்துள்ள அருமை கண்டு வியக்கத் தக்க தாகும்.

## பராசக்தி

வடக்குப்புறம் அமர்ந்த நிலையில் மார்பில் கச்சை விளங்க அருளுருவான பெண் தெய்வம் அமர்ந்த கோலத்தில் உள்ளது. திரண்ட மார்பகங்களில் பட்டைக் கச்சை விளங்க கலைமகளுக் கும், திருமகளுக்கும் உரிய தோற்றங்களுடன் திகழும் இத் திருமேனி யில் அடி முதல் முடிவரை சோழர் கால அணிகலன்கள் காணப் படுகின்றன. இப் பெண் தெய்வத் திருமேனியினை ஆண் வடிவாகக் கருதி 'வாமதேவர்' என்ற பெயரால் வழங்கி வருகின்றனர்.

## விமான முகப்புக் கயிலைக் காட்சி

முழுதும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள 'தக்கணமேரு' எனும் இராசராசேச்சர விமானத்தின் நான்காம்,ஐந்தாம்மாடத்தள கிழக்கு முகப்பு முழுதும் புடைப்புச் சிற்ப அமைதியுடன், கயிலைக்காட்சி உருவாக்கப்பட்டுள்ளது. கயிலை மலையின்மேல் சிவபெருமான் உமையுடன் அமர்ந்துள்ளார். விநாயகரும் முருகனும் இருபுறமும் உள்ளனர். விநாயகரைச்சார்ந்து தாடி மீசையுடன் பைரவர் தோற்றமளிக்கின்றார். அப்பகுதிக்குக்கீழே தேவர்களும் பூதகணங்

களும் நிற்கின்றனர். முருகனைச்சார்ந்து முறையே பிரமன், சிவயோகி ஆகியோர் நிற்கின்றனர். இத்தகைய தெய்வச்சிலைகளுடன் விமான முகப்பு பொலிவுடன் தெய்வீகமாக விளங்குவதனாலேயே இவ்விமானம், வடமேருவாம் கயிலைக்கு ஒப்பாக நிற்கின்றது. இக்குறிப்புடனேயே 'தக்கணமேரு' என இராசராசன் இதனை வழங்கியுள்ளான்.

## கருவறைச் சுவர் சிற்பங்கள்

கருவறை வெளிப்புறச் சுவர் முகப்பிடங்கள் 'சாலை' எனப்படும். அப்பகுதிகளை வெற்றிடமாக விடாமல் அவற்றின் நடுவே தெய்வ மாடப் புரைகள் அமைக்கப்படும். அவற்றுள் வலமிருந்து இடமாக இராசராசேச்சரத்திற்கே உரிய அழகிய சோழர் கலைப்பாணியுடன் தெய்வத் திருமேனிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தென்புறத்தில் பிள்ளையார், திருமால், கலைமகள், (விக்கிரமன் வாயில்காவலர்) சந்திரதேவர், அண்ணாமலையார், பிட்சதேவர், சூலதேவர், காலாந்தகர், நடராசர் என்ற தெய்வ மூர்த்தங்கள் உள்ளன. இராசராசன் காலத்திற்கே உரிய முக்குடையினைத் தலைப்பில் பெற்றனவாகப் பிள்ளையார் கலைமகள் ஆகிய திருமேனிகள் காணப்படுகின்றன. மீசையுடன் கூடியதாகக் காணப்படும் சூலதேவர் சிவமூர்த்தம் அரிய காலைப்படைப்பாகும்.

சூலதேவருக்கும் காலாந்தகருக்கும் இடையே தென்முகக் கடவுளின் உருவம் இணைக்கப்பட்டு அதற்குத் தனியே பிற்காலத்தில் கட்டுமானக் கோயில் ஒன்றும் எழுப்பப்பட்டுள்ளது.

இவ்வமைப்பினைக் கொண்டு சிந்திக்கின்றபோது பெரிய கோயில் ஆக்கத்தில், தென்முகக் கடவுளின் படைப்பினை முன்னிரு வாயிற் கோபுரங்களின் தென் முகப்புகளில் காணமுடிகின்றதேயொழிய, விமானத்தின் கருவறைத் தென்புற முகப்பில் காட்டப்படவில்லை என்ற உண்மை புலனாகின்றது. ஆயின் மேலே விமானத்தின் மூன்றாம் தளம் முதல் முகப்பின் தென்புற மையத்தில், எஞ்சிய பதினொரு அடுக்குத் தளங்களிலும் தென்முகக் கடவுளின் திருமேனிகள் காணப்படுகின்றன.

மேற்குப்புறத்தில் சங்கரநாராயணர், இலிங்கோத்பவர், சந்திரசேகர் மூர்த்தங்கள் இரண்டு ஆகியவைகள் காணப்படுகின்றன. சந்திரசேகர மூர்த்திகளில் வடமேற்கு மூலையுள் உள்ளது விரிசிகையுள் காணப்படுகிறது.

வடக்குப்புறத்தில், இடபவாகனத்தோடு உமையொருபாகர், கங்கைச்சடைமுடியார், வாளேந்திய திரிபுராந்தகர், கல்யாண சுந்தரரேசுவரர் ஆகிய சிற்பங்களும் சூலதேவர், கலைமகள், கொற்றவை, பைரவர் என்ற சிற்பங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு கோயிலின் வலமிருந்து இடமாகச் சூழ்ந்து தொடர்ந்ததாகப் பிள்ளையாரில் தொடங்கி, பைரவரில் முடிகின்ற தெய்வ மாடத் திருமேனிகள் இடம்பெற்றுள்ளமை, இக்கோயிலின் வழிபாட்டு முறையினைத் தெளிவுபடுத்துகிறதெனலாம்.

இடை நாழிகையில் உள்ள கருவறைக் கிழக்கு முகப்புச்சுவரில் வில்லேந்திய திரிபுராந்தகர், சந்திரசேகரர் ஆகிய தெய்வத்திரு மேனிகள் உள்ளன. இவற்றிற்கும் சுவர்க்கால்களுக்கும் இடையே கும்ப பஞ்சரங்கள் காணப்படுகின்றன.

## திக்குக் காவல் தெய்வக் கோட்டங்கள்

திருச்சுற்று மாளிகையின் எட்டுத் திக்கிலும் மாளிகைத் தொடரின் இடையிடையே கருவறையினை அமைத்து அதன்மேல் தளம், கண்டம், சிகரம், கும்பம் என்ற பகுதிகளளவில், சிறியவடிவில் விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் தென்கிழக்கு முதலாக நாகராசன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்ற காவல் தெய்வங்கள் காணப்படுகின்றன.

இராசராசன் திருவாயிலின் வடமேற்குப் புறத்தின் ஆவரணக் கட்டுமானப்புரையுள் அமர்ந்தகோலத்தில் இந்திரனின் சிற்பம் காணப்படுகின்றது.

வடகிழக்கில், ஒரே கல்லால் ஆன விரிசிகையுள் யோக பட்டம் தரித்துக் குத்திட்டு அமர்ந்த கோலத்தில் அக்கினியின் திருவுரு காணப்படுகிறது. நெருப்புச்சுடரென எழுந்து குவிந்த தலை முடியும், நீண்ட தாடியும் கொண்டுள்ள இத்திருமேனி அக்கினி தேவருக்கு இராசராசன் காலத்தில் சிற்பியர் அமைத்தளித்த திருவுருவாகும்.

ஒரு காலை மடித்து, ஒரு காலைத் தொங்கவிட்டு இருக்கையில் அமர்ந்த பாங்கில் நிருதி, வருணன், வாயு, ஈசானன் ஆகிய சிற்பங்கள், அவ்வத் திக்குகளில் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் யாவும் இரண்டு கைகளினுடனேயே காணப்படுகின்றன,

ஏனைய இயமன், குபேரன் ஆகிய திருமேனிகள் இருந்த தெய்வக் கோட்டங்களுள் இவர்களது உருவச் சிலைகள் இதுபோது இல்லை. பழுதுற்று அழிந்தன போலும். இத்திக்குத்தேவர் கோயில் களுக்குச் செம்பின் மேல் பொன் கடுக்கின கலசங்களை இராசராசனின் 29-ஆம் ஆட்சியாண்டில் சைவாச்சாரியம் பவன பீடாரன் என்பவன் அளித்துள்ளான்.

## காந்தாரவழிப்பட்ட பௌத்தச் சிற்பம்

இராசராசேச்சரத்திற்கமைந்த தக்கணமேரு விமானத்திலும், இராசராசன் திருவாயிற் கோபுரத்திலும் இரண்டு பெண்சிற்பங்கள் ஒரே அமைப்புடையனவாக அமைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் வடக்குப் பக்கம், தொப்பியணிந்த தலையுள்ள விரிசிகைக்கு மேற்புறம் உள்ள விரிசிகையுள் ஒன்றும், இராசராசன் திருவாயில் கோபுர மேற்கு முகப்பு உச்சிக் கண்டத்தில் ஒன்றுமாக இவ்வுருவங்கள் காணப்படுகின்றன.

மேலாடையின்றி, ஒரு கையை மடித்து மார்பிலும், மறுகையை மடித்துத் தோளிலும் பொருத்திக் கொண்டிருப்பதுடன் ஒரு கால் மடித்தும், ஒருகால் குத்திட்டும் அமர்ந்த பாங்கில் இச்சிற்பங்கள் உள்ளன. கிரேக்கச் சிற்பங்களில் காணப்படும் சுருண்ட தலைமுடி ஒப்பனையும் ஆய்விற்குரித்தாகவுள்ளது.

கிழக்கிந்தியத் தீவுகளில் பரவிய பௌத்த சமயத்தைப் பின் பற்றிய துறவியர்தம் குருவிற்குப் பின்னாக அமரும் முறை சாவக நாட்டுப் பௌத்தச் சிற்பங்களில் வெளிப்படுகின்றது. இப்பௌத்தத் துறவியர் அமரும் முறையே இவ்விருவுருவங்களிலும் காணப்படு கின்றது. மற்றும் சுருண்டதலைமுடி ஒப்பனை காந்தாரக்கலை மாட்சியினைத் தெளிவாக்குகின்றது. ஆதலின் இவ்விரு சிற்பங் களும் காந்தாரக்கலை வழிப்பட்ட பௌத்தச் சிற்ப ஆக்கமே என்பது புலனாகின்றது.

அழகும், சிறப்பும் தனித்திறமும் கருதியே இராசராசேச்சரத்தில் இச்சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றே கருத வேண்டி யுள்ளது.

இத்தகைய காலத்தை வெல்லும் கலைச்சிற்பங்கள் பல தஞ்சை இராசராசேச்சரத்தில் முதல் இராசராசசோழனால் அமைக்கப்பட்டுத் தமிழகச் சிற்பக்கலையின் முன்னோடிகளாக விளங்கும் பெருமை தமிழகம் பெற்ற பேறாகும்.

# இராசராசனின் மெய்க்கீர்த்தி

புலவர் செ. இராசு எம் ஏ.

## மெய்க்கீர்த்தி :

தமிழ்க் கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்திப் பகுதிகள் வரலாற்றைக் கூறுவதுடன் சிறந்த இலக்கியமாகவும் திகழ்கின்றன. தமிழில் 96 வகைப் பிரபந்தங்களுள் **'மெய்க்கீர்த்தி'** அல்லது **'மெய்க்கீர்த்திமாலை'** என்பது ஒரு சிற்றிலக்கிய வகையாகக் குறிக்கப் பெறுகிறது.

## இலக்கணம் :

சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களைக் கூறும் பாட்டியல் நூல்களில் மெய்க்கீர்த்திக்கும் இலக்கணத்தைக் காணுகின்றோம்.

'சீர் நான் காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டுஎனத்
திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி' (1)

'நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம்
உரையாய் முடியும் எனஉரைத் தனரே' (2)

'தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீ ரடியால்
எழிலரசர் செய்தி இசைப்பர்' (3)

சிறந்தமெய்க் கீர்த்தி அரசன் செயற்சொற்
றவையாயச் செய்யுள்
அறைந்ததோர் சொற்சீர் அடியாய்' (4)

என்பவை மெய்க்கீர்த்தியின் இலக்கணம் கூறும் பகுதிகள் ஆகும்.

## இராசராசனின் மெய்க்கீர்த்தி :

'ஸ்வஸ்தி ஸ்ரீ
திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்

---

1. பன்னிரு பாட்டியல் — 311    2 மேலது — 312
3. வச்சணந்திமாலை — 14    4. நவநீதப்பாட்டியல் — 53

காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழில் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசு கொள்ஸ்ரீ கோவிராச கேசரி
வன்ம ரானஸ்ரீ இராச ராச தேவர்க்கு
யாண்டு 29 ஆவது' (5)

என்பது பெருமன்னன் இராசராசனின் இறுதி ஆட்சியாண்டின் பிற்பகுதியில் (1014) காணப்படும் முழுமையான மெய்க்கீர்த்தியாகும். இம்மெய்க்கீர்த்தியில் இராசராசனின் வெற்றிகள் அனைத்தும் குறிக்கப் பெறுகின்றன. ஆனால் மேற்கண்ட மெய்க்கீர்த்தி இலக்கணம் இதற்கு முழுமையாக ஒத்துவரவில்லை.

## இராசராசன் மெய்க்கீர்த்தி வளர்ச்சி:

இராசராசன் பெற்ற வெற்றிகளுள் முதலாவது காந்தளூர்ச் சாலையில் கலமறுத்து அருளியது. எனவே இராசராசனின் தொடக்க காலத்துக் கல்வெட்டுகளில்

'சாலை கலமறுத்த கோவிராச கேசரி' (6)

காந்தளூர்ச்சாலை கலமறுத்த கோவிராசகேசரி' (7)

என்ற தொடர்கள் மட்டுமே மெய்க்கீர்த்தியாகக் காணப்படுகிறது.

பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக்கு மேல் அப்போதைய வெற்றிகளுடன் இராசராசன் மெய்க்கீர்த்தி

'சாலை கலம் அறுத்து வேங்கை நாடும்
கங்க பாடியும் தடிய வழியும்
நுளம்ப பாடியும் தத்தபாடியும் கொண்ட
கோவிராச கேசரி' (8)

என்று காணப்படுகின்றது.

5. S. I. I. XXIII — 42
6. S. I. I. VII — 414.
7. S. I. I. VII — 857
8. S. I. I. III P. 5

14 ஆம் ஆட்சியாண்டுத் தொடக்கத்தில்

'காந்தளூர்ச் சாலை கலமறுத்து அருளி
கங்கபாடியும் நுளம்பபாடியும்
தடிகை வழியும் வேங்கை நாடும்
கொண்ட கோவிராச கேசரி' (9)

என்று காணப்படுகிறது. 'தத்தபாடி' நீக்கப்பட்டுக் காந்தளூர்ச் சாலை கலமறுத்த என்பதுடன் அருளி' என்ற சொல் சேர்க்கப் பட்டுள்ளது.

14 ஆம் ஆட்சியாண்டின் இறுதியில்

'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள
காந்தளூர்ச் சாலை கலமறுத்து அருளி
வேங்கை நாடும் கங்கபாடியும்
குடமலை நாடும் தண்டால் கொண்ட
கோவிராச கேசரி' (10)

என்று காணப்படும் மெய்க்கீர்த்தியில் 'திருமகள்' என்று தொடங்கும் இரண்டு வரிகளுடன் குடமலைநாட்டு வெற்றியும் சேர்க்கப் பெற்றுள்ளது. இப்போது மெய்க்கீர்த்தியின் அமைப்பை ஓரளவு பெறுகிறது

17. ஆம் ஆட்சியாண்டில் கொல்லம், கலிங்க வெற்றியும், ஈழமண்டல வெற்றியும், (11) 29 ஆம் ஆண்டில் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிர வெற்றியும் (12) சேர்க்கப் பெற்று இராசராசனின் மெய்க்கீர்த்தி முழுமை பெறுகிறது.

## காந்தளூர்ச் சாலை வெற்றி :

'காந்தளூர்ச் சாலை கலமறுத்து அருளி' என்ற தொடருக்குப் பல்வேறு வகையில் பொருள் கூறப்பெருகிறது. பொருள் எவ்வா றாயினும் அது இராசராசனின் மிக முக்கியமான முதல் வெற்றி யாகும் என்பதில் ஐயமில்லை.

இராசாதிராசன் மெய்க்கீர்த்தியில் காந்தளூர்ச்சாலை வெற்றி குறிக்கப் பெற்றுள்ளது.

'வேலைகெழு காந்தளூர்ச்சாலை கலமறுத்ததற்பின்' (13)

9. S, I. I. IV P, 129
10, S. I. I. VII 1015.
11. S. I. I XVII 243
12. S. I. I XXIII - 42
13. வரி - 12

என்பது இராசாதிராசன் மெய்க்கீர்த்தி வரியாகும். இதனால் காந்தளூர்ச்சாலை கடற்கரையில் உள்ளது பெறப்படுகிறது.

பாண்டியன் சடையவர்மன் பராந்தகன் மெய்க்கீர்த்தியில்
'கன்னிப்போர் செய்தருளிக்
காந்தளூர்ச் சாலை கலமறுத்து' (14)

என்ற தொடர் காணப்படுகிறது. இதனால் காத்தளூர் சாலையில் பாண்டியர், சேரர் போர் நடைபெற்றமையையும் அறிகின்றோம்.

விக்கிரமசோழன் உலாவிலும், கலிங்கத்துப் பரணியிலும் முறையே

'சேலைத் துறந்து சிலையைத் தடிந்திருகால்
சாலை கலமறுத்த தண்டினான்' (15)

'வேலை கொண்ட விழிஞம் அழித்ததும்
சாலை கொண்டதும் தண்டுகொண் டல்லவோ (16)

என்று இவ்வெற்றி குறிக்கப் பெறுகிறது. இதனால் இராசராசன் இரண்டுமுறை காந்தளூர்ச் சாலையில் போரிட்டுள்ளமை பெறப் படுகிறது; முதல் வெற்றிக்குப் பின் அடங்கியிருந்த சேரர்கள் மீண்டும் தலைதூக்கியிருக்க வேண்டும். அதனால் இராசராசன் இரண்டாம் முறை போர் தொடுத்துச் சேரரை அடக்கி, மீண்டும் சேரர் வசமே காந்தளூர்ச் சாலையை ஒப்படைத்திருக்க வேண்டும்; அதனைத் தான் 'அருளி' என்ற சொல் குறிப்பதாகக் கொள்ளலாம்.

## ஈழமண்டல வெற்றி

இராசராசனின் 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்தான் ஈழ மண்டல வெற்றி குறிக்கப்பெறுகிறது.

'முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும்' (17)

என்றவரிக்குப் பதிலாக இராசராசன் கல்வெட்டின் தொடக்கத்தில் காணப்படும் மெய்க்கீர்த்தி பலவற்றில்

'முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும்'
'எண்டிசை புகழ ஈழமண் டலமும்'
'எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்'
'எண்டிசை புகழ்தரு ஈழமண் டலமும்'
'எண்டிசை நிகழ ஈழமண் டலமும்'
'எண்டிசை நிகழ்தர ஈழமண்டலமும்'

---

14. வரி - 8
15. விக்கிரம சோழன் உலா - 24
16. கலிங்கத்துப் பரணி - 370.
17. S.I.I. II—3—65

'வண்டமர் பொழிலணி வாழ்கொளி சிறிதுறை
எண்டிசை புகழ்தரு ஈழ மண்டலமும்' (18)

'எண்டிசை புகழ்தர எறிகடல் ஈழமும்' (19)

'ஆழ்கடல் சூழ்ந்த அருநிதி ஈழமும்' (20)

என்ற தொடர்கள் காணப்படுகின்றன.

இலங்கையை மும்முடிச் சோழமண்டலமாக்கி, இராசராச வளநாடு, விக்கிரம சோழ வளநாடு என்ற உட்பிரிவுகளையும்ஏற்படுத்தி சில சிவாலயங்களையும் கட்டியபின் இராசராசன் ஈழமண்டலத்தை முரட்டொழில் சிங்களரின் ஈழமண்டலமாகக் கொள்ளாமல் தன தாக்கியதால் ஈழமண்டலமும் பற்றிய தொடரை மாற்றினான் போலும். இம் மாற்றம் இன்னும் ஆய்வுக் குரியது.

### பிறநாடுகள்

தடிகைபாடி—தடியபாடி தடிகைவழி என்றும். கங்கபாடி, கங்கவரடி கங்கைபாடி, கெங்கபாடி, கங்கவாடி என்றும்: இரட்டபாடி—ரட்டபாடி, லட்டபாடி, இலட்டபாடி என்றும்; குடமலை நாடு —குடகமலை நாடு — என்றும் குறிக்கப்பெற்றுள்ள மெய்க் கீர்த்திகளைக் காணுகின்றோம்.

### வரலாற்றாசிரியர் கருத்துக்கள் :

கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் மெய்க்கீர்த்தி கூறுவனவற்றை 'உயர்வு நவிற்சி' என்பார். கே கே. பிள்ளை அவர்கள் 'பொய்க் கீர்த்தி' என்பார். இவ்விருவர் கூற்றுக்களையுமே இராசராசன் மெய்க்கீர்த்தியைப் பொருத்தவரை ஏற்றுக் கொள்ள இயலாது. உயர்வு நவிற்சி என்பதைவிட இலக்கிய நயத்துடன் கூறுவதாகக் கொள்ளலாம். தமிழ் அரசர்களின் மெய்க்கீர்த்திகளைப் 'பொய்க் கீர்த்தி' என்பது பொருந்தா உரையாகும்.

மெய்க்கீர்த்தியைப் பொய்க்கீர்த்தி என்றால் புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களில் வரும் அரசர் பற்றிய புகழுரைகள் என்னாவது? களவழி நாற்பது, நந்திக் கலம்பகம், பாண்டிக்கோவை, முத்தொள்ளாயிரம் போன்று அரசர் களைப் புகழும் இலக்கியங்களைத் தள்ளிவிட முடியுமா? மூவருலாவும், கலிங்கத்துப் பரணியும், சங்கர சோழன் உலாவும் சிறப்புடைய வரலாற்றுச் சான்றுகள் என்று ஏற்றுக்கொள்ளுகிறோமே!

18. S. I. I, V 975 19. S. I. I. VII 152 20. S. I. I. VII 662

# இராச ராசன் கீர்த்தி

பேராசிரியர் க. இராமையன்.

1. அந்தமிழ் மூவ ருள்ளே
ஆன்றநம் சோழ ராட்சி
செந்தமிழ்ச் சங்க நாளில்
சீர்த்தியாய் இருந்து பின்னர்
நைந்திட உறையூ ரோடு
நற்புகார் நலிந்து வீழ
மைந்திகல் பல்ல வர்தாம்
மாப்புகழ் எய்தி வாழ்ந்தார்

2. நீண்டநாள் மழையே யின்றி
நிலத்திலே கிடந்த வித்து
மாண்செயும் மழைபெற் றக்கால்
மட்டின்றி முளைத்தல் போல
ஆண்டநற் சோழ ராட்சி
ஆறுநூ றாண்டு நைந்து
மீண்டுமே உயிர்த்த செய்தி
மேம்பட்ட வரலா றுகும்.

3 பெற்றதம் தந்தை கொன்று
பெற்றனர் அரசு பல்லோர்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

**முடிவுரை :**

பாட்டியல் நூல்கள் கூறும் இலக்கண அமைதியைப் பார்த்தால் இராசராசன் காலத்துக்கு முன்னரே அவ்வமைப்பிலான மெய்கீர்த்திகள் இருந்து அழிந்திருக்க வேண்டும்; அல்லது கைக்குக் கிடைக்காமல் இருக்க வேண்டும். இதனைப் பாண்டியர் செப்பேடுகளும், பதிற்றுப்பத்துப் பதிகங்களும் மெய்ப்பிக்கின்றன.

சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் '**மெய்க்கீர்த்திகள்**' என்ற மிக நல்ல தொகுப்பை வெளியிட்டுள்ளது. ஆனால் மெய்க்கீர்த்திகளில் இன்னும் விரிவான, ஆழமான ஆராய்ச்சி தேவையாகும்.

உற்றதன் அரசு தன்னை
உரிமையாக் கொள நினைந்த
சிற்றப்பச் சோழ னுக்குச்
சிறப்பொடு நல்கிப் பன்னுள்
சிற்றர சாயி ருந்த
சீர்த்திவே றுலகில் இல்லை.

4. நலிவுடல் கொண்ட நெஞ்சன்
நானிலம் புகழும் வீரன்
வலிகெழு போனப் பார்ட்டை
வாட்டர்லூ கடற்போ ரின்கண்
மெலிவுற வீழ்த்த செய்தி
மேம்படப் புகழும் நாமோ
நலந்திகழ் இராச ராசன்
நானிலக் கடல்வென் றிய்யை.

5. ஒருசிறி தறிவோ மல்லோம்
ஒப்பரு முந்நீர்த் தீவு
இருங்கடல் சூழி லங்கை
இயல்வளக் கீழைத் தீவு
மருகாந்த ஜூரின் சாலை
மற்றயல் நாடு தம்மைச்
செருக்கடல் வென்றி கொண்டு
திசையெலாம் நடுங்க வைத்தான்.

6. போரினில் முதன்மை கொண்டான்
புகழ்க்கலை முதன்மை கொண்டான்
பாரினில் நிலம ளந்த
பான்மையில் முதன்மை கொண்டான்
யாரினும் கிராம ஆட்சி
இயக்கலில் முதன்மை கொண்டான்
யாரினி ஞாலந் தன்னில்
இவன்றிறம் எய்த வல்லார்.

7. அமணர்க்கும் வைண வர்க்கும்
அரும்புத்த மொகலா யர்க்கும்
சமயத்தின் பொறையி னுலே
சலியாது நிலங்கள் ஈந்தான்

சமயவிப் பொறையைக் கண்டும்
சற்றேனும் திருந்தி டாது
இமயத்தின் அளவு தீமை
இழைத்திட்டான் மாலிக் காபூர்.

(வேறு)

8. குடமலையின் நாட்டரசன் மனிசா என்பான்
கூடுபெரும் வீரத்தைக் காட்டிப் போரில்
மடங்காது நின்றிட்டான் அன்னோன் தன்னை
மாவீரன் அலெக்சாந்தர் போரஸ் தன்னின்
அடங்காத ஆற்றலினைப் புகழ்ந்ததே போல்
அவனிபுகழ் அபயகுல சேக ரன்றான்
குடகாட்சி நாட்டரசை அவனுக் கீந்து
குவலயத்தில் பெருமிதத்தை நாட்டிவிட்டான்.

9. குடமலையைக் கொடையாக அன்று தந்தோம்
குடமலைவீழ் காவிரியின் நீரிற் கின்று
மிடறடைக்கும் போதினிலே நீரை வேண்டி
மெலிந்தேங்கும் பசுவைப்போல் வாடுகின்றோம்
அடங்கியவச் சேரலத்தை ஆள்வோர் இன்று
அணுகிடினும் மின்சாரம் இல்லை என்பார்
மடங்கிட்ட ஈழத்தார் மனச்சான் றின்றி
மாண்தமிழ மக்களையே மாய்க்கின்றாரே.

10. வெற்றிவீரன் அலெக்சாண்டர் சீச ரோடு
வீரங்கொள் மாபீட்டர் கரிபால் டிய்யும்
வெற்புத்தோள் நெப்போலிய வீரனோடு
வென்றிகொள் சிவாசியக்பர் இரஞ்சித் சிங்கும்
நற்றிருவைக் கொழிக்கின்ற அமெரிக்காவை
நல்கியநல் வாசிங்டன் என்னும் மேலோன்
பொற்புடைய அனைவரையோ ருருவில் கண்டால்
புகழ்பூத்த அவனேநம் இராசராசன்.

# இராசராசனின் சமயப்பொறை

பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி, எம். ஏ., எம். பில்.

கி. பி. 985 ஆம் ஆண்டு, புகழ் பூத்த சோழ மரபின் வரலாற்றில் மட்டுமன்றித் தென்னகத்தின் அரசியல் பண்பாட்டு வரலாற்றிலும் மறக்கவியலாத் தனிச்சிறப்புக்குரியதாகும். இவ்வாண்டிற்றான் தென்னகம் முழுவதனையும் தன்னடிப் படுத்தியமையோடமையாது, ஈழமண்டலத்தும் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தும் பிறாண்டும் புலிக்கொடியைப் பறக்க விட்ட மாவீரன் இராசராசன். காவிரி வளநாட்டின் காவலனாய் அறியணையேறினான். களப்பிரர் படையெடுப்பால் வலியொடுங்கிக் கிடந்த சோழர் மரபு, மாவீரன் விசயாலயன் முயற்சியால் மீண்டும் தலையெடுத்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் திருப்புறம்பியத்தில் நடந்த பெரும்போரின் விளைவால், பதுங்கிக் கிடந்த வயப்புலி பாய்ந்து வெல்லும் திறல் பெற்றது. இங்ஙனம் புதுவீறுபெற்ற சோழப் பேரரசினை அசையாத — அசைக்க வியலாத அடித் தளத்தில் நிறுத்தியமையோடு உலகு புகழும் உயர்வுடைத்தாக மாற்றியமைத்தவன் இராசராசனாவான். உலக வரலாற்றில், பேரரசுகளை நிறுவிய மாவீரர் வரிசையில் இடம்பெறும் இப்பெரு மகனுடைய நாடுபோல், அவன் உள்ளமும் விரிந்து பரந்து விளங்கிற்று அவனுடைய பேரரசின் அகலத்தையும், அவனுடைய உள்ளத்தின் விரிவினையும் நினைவூட்டும் அழியாச் சின்னமாக, கடந்த ஓராயிரமாண்டுகளாக விண்ணை அளாவிக்கொண்டு வீறுடன் நிற்கிறது தஞ்சைப் பெரிய கோவில். அரசியல் அறிஞனாக வும், ஆன்மீகச் செல்வனாகவும் விளங்கிய இம்மாவீரனை எண்ணிப் பெருமை கொள்ளும் உரிமை தமிழர்க்குண்டு. அவனுடைய சமயப் பொறை பற்றிக் கூற முயல்கின்றது இச்சிறு கட்டுரை.

## சிவபாத சேகரன்:

சோழர்கள் சைவப்பற்று மிக்கோராவர். தில்லைத் திருக் கோயிலில் முடி சூட்டிக்கொள்ளும் வழக்கத்தை அவர்கள் கொண்டிருந்தனர். சோழ மன்னர், சைவத்தினை கண்போல் போற்றி வளர்த்தனர் என்பது உலகறிந்த செய்தி. இராசராச சோழன், தன் முன்னோரைப் பின்பற்றிச் சைவத்தை வளர்ப்பதில் பேரீடுபாட்டைக் காட்டினான். சிவபெருமானின் திருவடிகளைத் தலையிற்சூட்டிக் கொண்டவன் என்னும் பொருளில் சிவபாத சேகரன் எனப்பட்டான் இராசராசன். 'திருவாரூர்த் தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சி' என்று கூறுகிறது திருமுறை கண்ட புராணம்.

தென்னகத்திலேயே மிகப்பெரிய திருக்கோயிலைச் சிவபெருமானுக்காகக் கட்டியதோடு அமையாது, மூவர் முதலிகளும் முக்கட் பெருமானை எண்ணிக் கசிந்து பாடியருளிய தேவாரத் திருப் பதிகங்களைத் தில்லையிலிருந்து வெளிப்படுத்தித் திருமுறைகளாக வகுத்தும், அவற்றை முறையாக ஓதுதற்கு ஓதுவார்களை அமர்த்தியும் அரும் பணியாற்றிய இராசராசன் எத்துணைச் சைவப்பற்றினன் என்பது விளங்குகின்றது. தான் சைவனாயினும், பிறசமயங்களையும் வளர்க்கும் பரந்த உள்ளத்தினனாக விளங்கினான் இராசராசன் என்பதனை அவன் வரலாறு உணர்த்துகின்றது.

## வைணவமும் இராசராசனும்:

சோழ மன்னர்கள் தீவிரச் சைவர்கள் எனினும் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டுள்ளனர். இராசராசன் பெங்களூர் மாவட்டத்திலுள்ள மணலூரில் சயங்கொண்டசோழ விண்ணகரத்தையும், தலைக்காட்டுக்கு அண்மையில் இரவிகுல மாணிக்க விண்ணகரத்தையும் எழுப்பிப் பெருமை கொண்டான். தஞ்சைப் பெருவுடையார் கோவில் சுவர்களில் வைணவ சமயத் தொடர்பான சிற்பங்களை அமைத்துள்ளமையும் எண்ணத்தக்கதாகும்.

## பௌத்தமும் இராசராசனும்:

கி. மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தமிழகத்திற்கு வந்த சமணமும் பௌத்தமும், களப்பிரர் காலத்தில் பெருவளர்ச்சியுற்றன. பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோற்றுவித்த பத்தி இயக்கம் இவ்விரு சமயங்களையும் நலிவுறச் செய்தது. எனினும். அவை முற்றாக அழிந்துவிடவில்லை. இராசராசன் காலத்தும் அதன் பின்னரும்கூட இச்சமயத்தினர் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து அமைதியான சமயப் பணியும் இலக்கிய இலக்கணப் பணியும் ஆற்றியுள்ளனர்.

தன் குடிமக்களின் ஒரு பகுதியினர் சமணராகவும் பௌத்தராகவும் இருப்பதனை நன்குணர்ந்த இராசராசன், தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களைத் தன் கொள்கைக்கு ஈர்க்க முயலாது, அவரவர் நெறியை அவரவரும் பின்பற்றி அச்சமின்றி அமைதியாக வாழ வழி செய்தான்.

பிறசமயத்தவரின் பால் இவன் கொண்டிருந்த பரிவினை நாகையில் பௌத்தவிகாரம் எழுப்பிட ஒப்புதலளித்தமை கொண்டு உணரலாம். சைலேந்திர மன்னன் சீமாறவிசயோத்துங்கவர்மன் நாகையில் சூடாமணி விகாரம் என்னும் விகாரத்தினை அமைத்திட

இராசராசன் ஒப்பியதோடமையாது, அதன் வளர்ச்சிக்கென ஆண்டொன்றிற்கு 8943 கலம் நெல்லை அளிக்கக் கூடிய 97 வேலி நிலமுடைய ஆனைமங்கலத்தை அதற்கு நிவந்தமாக விடுத்தான். இச்செயல், இவனுடைய பரந்த உள்ளத்தையும், இராச தந்திரத்தையும் விளக்குவதாகும். கீழைத் தீவுகளிலிருந்து தென்னகத்திற்கு வரும் கப்பல்கள் முதற்கண் வந்தடையும் துறை முகம் நாகைப்பட்டினமாகும். கீழைத்தீவுகட்கும் சோழநாட்டிற்கும் இடையே வணிகம் செழிக்க உதவும் என்னும் எண்ணத்திலேயே சைலேந்திர மன்னனோடு உறவை வலிமைப் படுத்திக் கொண்டான் என்று தோன்றுகின்றது.

தஞ்சையில் அவன் அமைத்த திருக்கோயிலில் முற்கூறியவண்ணம் வைணவம் தொடர்பான சிலைகளை மட்டுமன்றிப் பௌத்தம் தொடர்பானசிற்பங்களையும் அமைத்திட அவன் கட்டளையிட்டான் சைவனொருவன் எழுப்பும் சிவன் கோயிலில், முற்றும் மாறான சமயத்தைச் சார்ந்த சிற்பங்களை அமைக்கவேண்டிய கட்டாயம் இல்லை. இராசராசன், ஒரு குறிக்கோளுடனேயே திட்டமிட்டு இதனைச் செய்தான் எனல் வேண்டும். மக்களுடைய உணர்ச்சிகளை மதித்துப் போற்றுவதே நல்லரசாகும். குடிதழீஇக் கோலோச்சும் செங்கோலன் இராசராசன் ஆதலின் தன்னாட்டிலிருந்த வைணவர், பௌத்தர் போன்ற மக்களுக்கும் நன்மை புரிவதனைத் தன் கடனாகக் கொண்டதில் வியப்பில்லை.

இராசராசனுக்குக் கீழ்ப் பல குறுநிலத் தலைவர்கள் இருந்தனர். அரசியலில் அவர்களைத் தனக்கு அடங்கியோராகக் கருதினான் இராசராசன். எனினும், அவர்தம் ஆன்மீக வாழ்க்கையில் தலையிட விரும்பவில்லை. அவர்கள், தாம் மேற்கொண்ட நெறிகளைத் தொடர்ந்து பின்பற்றிடவும், அந்நெறிகளை வளர்க்கவும் உரிமையளித்திருந்தான்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்சபாண்டவர் மலைப்பகுதியை இலாடராயர் என்னும் சிற்றரச மரபினர் இராசராசனுக்கு அடங்கி ஆண்டனர். அம் மரபைச் சேர்ந்த சிற்றரசன் ஒருவன் சமணக் கோயிலுக்கு நிவந்தமளித்தான் என்று அறிய முடிகின்றது.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளால் மாமன்னன் இராசராசன் பெருவிறலும்,பேரறிவும் படைத்தோனாய் விளங்கிச் சோழர் மரபின் காவலனாயும் தமிழ்ப் பண்பாட்டின் நற்றாயாயும் விளங்கிய பான்மை விளங்கும். இந்தியாவிலாண்ட பெரும் புகழ்மிக்க பிற பேரரசர்களைப் போலவே சமயக் கொள்கையில் விரிந்த மனமுடையோனாய் விளங்கி, நாட்டின் எல்லாப் பிரிவு மக்களுக்கும் நலம் புரிந்தான் என்று உணர்ந்து பாராட்ட முடிகின்றது.

# அவிட்டமும் சதயமும்*
# ஆவணியும் ஐப்பசியும்

இல, தியாகராஜன், எம். ஏ. எம். பில். டி. இ. ஏ, பி,எட். (பி.எச்.டி)

இக்கட்டுரையில் முக்கியமான சுவையான செய்திகள் சில விவாதிக்கப்பட்டுள்ளன. ஒன்று. இதுவரை குந்தவைப் பிராட்டியின் பிறந்த நாள் எது என்பது வரலாற்றாசிரியர்களால் கண்டறிந்து எழுதப்படவில்லை. (1) இரண்டாவது அந்த நாள் சிறப்பாக விழாவாகக் கொண்டாடப்பட்ட செய்தி. அடுத்து இராசராசன் தனது தமக்கைக்கு 'அக்கன்' என்று கொடுத்த சிறப்பிடம் தஞ்சைக் கல்வெட்டால் இத்தரணி அறியும். தமக்கையைத் தம்பி மதித்தல் உலக இயல்பு. ஆனால் இந்த அன்பை இவன் குடிமக்களும் உணர்ந்து மதித்துப் போற்றியமையும் இருவருக்கும் சேர்த்து விழா எடுத்துச் சிறப்புச் செய்வதும் இதுவரை எங்கும் காணக்கிடைக்காத செய்தியாக, ஆனால் தற்போது அறிய முடிந்த ஒன்றாகக் கிடைத்துள்ளது. அடுத்தபடியாக இராசராசன் பிறந்த மாதம் ஆவணியா அல்லது ஐப்பசியா என்பதும் இக்கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளது.

திக்கெட்டும் புலிக்கொடி ஆணை செலுத்தித் தமிழகத்தை அன்றைய உலகில் தலைநிமிர்ந்து வாழவைத்தவன் இராசராசன். ஊர்கள்தோறும் திருக்கோயில்கள் எழுப்பி நாடு முழுவதும் தேவாரத் தேனிசை முழங்கத் தமிழகத்தைக் கலைக்கூடமாகவும் தெய்வீக மணம்கமழும் திருநாடாகவும் செய்தவன். ஆழ்ந்த சைவப்பற்றும், பரந்த சமய நோக்கும், நிறைந்த அரசியல் ஞானமும் கொண்டவன். விரிந்து பரந்த இவனின் பேரரசினையும், உயர்ந்து சிறந்து விளங்கிய இவனின் ஆளுமையையும் நல்லாட்சியையும் பிரதிபலிப்பதாக அமைந்ததே தட்சிண மேருவாம் தஞ்சை இராஜராஜேஸ்வரமான பெரியகோயில்.

இத்தகைய பேரரசனின் பிறந்தநாளை அன்றைய தமிழகம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடிய செய்திகளைப் பல கல்வெட்டுகள் நமக்குத் தருகின்றன.

பேரரசனை மட்டுமன்றி இத்தகைய மாமன்னனை வளர்த்து உருவாக்கிய பெருமையை உடைய சோழர் குலவிளக்காம் குந்தவையையும் தலைமேல் வைத்துப் போற்றினர், அவ்வம்மைக்கும் விழா எடுத்து மகிழ்ந்தனர்,

குந்தவை, இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனுக்கும் வானவன்மாதேவிக்கும் பிறந்தவர். (2) இராஜராஜனின் தமக்கை. இவர் வடார்க்காடு மாவட்டப் பகுதிகளை ஆண்ட வேந்தன் வல்லவரையன் வந்தியத் தேவனின் மனைவியாவார். இச் செய்திகளை

*"உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருத்தமக்*
*கையார் வல்லவரையர் வந்தியத்தேவர்*
*மகா தேவியார் ஆழ்வார் பராந்தகன்*
*குந்தவையாழ்வார்"*[3].

என்று தஞ்சைக் கல்வெட்டுகளும்,

*"உடையார் பொன் மாளிகையில்*
*துஞ்சிந தேவர் திருமகளார்*
*ஸ்ரீ பராந்தகன் குந்தவைப் பிராட்டியார்"*[4].

என்று தாதாபுரம் கல்வெட்டுகளும் கூறுவதால் அறியலாம்.

அவர் ஆழ்ந்த சைவப்பற்று மிக்கவர் என்ருலும் வைணவ சமண சமயங்களைப் பெரிதும் விரும்பிப் போற்றி வளர்த்தவர் என்பதற்குத் தாதாபுரம் என்ற ஊரில் இவர் கட்டிய 'இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்', 'குந்தவை விண்ணகரம்' 'குந்தவை ஜனாலயம்' ஆகிய மூன்று கோயில்களுமே சான்றாகும் (5).

இத்தகு மாண்புடைய இவ்வம்மையிடம் இராஜராஜன் வைத்திருந்த அன்பும் மதிப்பும் இவன் கட்டிய பெரிய கோயிலுக்குக் கொடுத்த கொடைகளைக் கூறும் கல்வெட்டில், (6)

*"நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி*
*ஸ்ரீ இராஜராஜீசுரமுடையார்க்கு*
*நாங்குடுத்தநவும் அக்கன்*
*குடுத்தநவும் நம் பெண்டுகள்*
*குடுத்தநவும்"*

என்று சிறப்பான இடத்தில் வைத்துப் போற்றியுள்ளமையால் அறியலாம். தன் ஒரே மகளுக்கும் குந்தவை என்றே பெயரிட்டு மகிழ்ந்தான்.

இத்தகு சிறப்புமிக்க தமக்கை, தம்பி ஆகியோரில் தம்பிக்கு மட்டும் பிறந்த நாள் விழாக் கொண்டாடப்பட்ட செய்தி பல கல்வெட்டுகளில் கிடைக்கிறது. ஆனுல் குந்தவையின் பிறந்த நட்சத்திரம் என்ன ? விழா எடுக்கப்பட்டதா என்ற கேள்விகளுக்கு இதுவரை நமக்குத் தகவல்கள் கிடைத்தில,

இக்குறை தற்போது நீங்கிவிட்டது. அதிலும் சிறப்பாகத் தமக்கைக்கும் தம்பிக்கும் ஒரே ஊரில் பன்னிரண்டு மாதங்களிலும் கோலாகலமாக விழா. இந்த ஒரு ஊர் கல்வெட்டு மட்டுமே இவ்வம்மை பிறந்த திருநட்சத்திரத்தைத் தருகிறது. **அது திரு அவிட்டம் ஆகும்.**

இத்துணைச் சிறப்புடைய ஊர் **பாச்சில்** என்று அழைக்கப்பட்ட இன்றைய **கோபுரப்பட்டி** ஆகும். இதுதிருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்தில் உள்ளது. இங்குள்ள அவனீஸ்வரம் என்ற சிவாலயத்தில் தான் இவ்விழாக்கள் கொண்டாடப்பட்டன. (7)

இக்கோயில் சோழர்குல திலகங்களாம் செம்பியன் மாதேவி, அவரின் மருமகளும் உத்தமசோழனின் மனைவியுமான வீர நாராயணியார் ஆகியோரின் நேரடி கவனத்தாலும் அன்புக் கொடைகளாலும் ஒளி பெற்ற திருக்கோயில். இதனை

> *"மழநாட்டுப் பாச்சில் திரு அவநீஸ்வர*
> *த்து மகாதெவர்க்கு கண்டிராதித்த*
> *பெருமாள் தெவியார் செம்பியன்*
> *மாதெவியார் வைத்த தராநிலை*
> *விளக்கு ... அஞ்சு".* [8]

என்றும்,

> *"மழநாட்டுப் பாச்சில் அவநீஸ்*
> *வரத்துக்கு வைகாசி விசாகத்*
> *திருவிழா எழுந்தருளுந்திரு*
> *வவணி சுந்தரர்க்கு தெவியார்*
> *உத்தம சொழர் தெவியார்*
> *நக்கனாரான வீர நாராயணி*
> *தெவியார் எழுந்தருளுவித்த*
> *உமா பட்டாரகி".* [9]

என்றும் பேசும் கல்வெட்டுகளால் அறியலாம்.

இந்த எழிலார்ந்த அவநீஸ்வரர் கோயிலில் தான் கி. பி. 1006 ஆம் ஆண்டு முதல் குந்தவை பிராட்டி பிறந்த திரு அவிட்டத்திலும் இராஜராஜன் பிறந்த திருச்சதய நாளிலும் பெரும் விழாக்கள் கொண்டாடப்பட்டன.

இவ்விழா இராஜராஜனின் 21–வது ஆட்சி ஆண்டுமுதல் கொண்டாடப்பட்டது. இதைச் செய்தவர்கள் இக்கோயிலின்

தேவதான ஊர்களான கொற்றங்குடி, பாணநல்லூர் ஆகியவற்றில் வாழும் மக்கள். இவ்வூரவர்கள் தாங்கள் அனுபவித்து வருகின்ற உரிமைப் பங்குகளில் கால்பங்கு, அரைப்பங்கு போன்ற அளவில் தங்கள் தங்கள் பங்காக வைத்து மொத்தம் முந்நூறு கலம் நெல்லை ஆண்டுதோறும் தருகின்றனர். இது "இராஜாஸ்ரயன்" என்ற பெயருடைய கோயில் பண்டாரத்து (கருவூல) மரக்காலால் அளக்கப்படுகிறது.

இந்த நெல்லில் 120 கலத்தைக் கொண்டு இறைவரை மாதம் தோறுமாக ஆண்டு முழுவதும் சதயத்திருநாள் அன்று சிறப்பு நீராட்டவும் பெருந்திருவமுது படைக்கவும் செய்தனர்.

மீதி 180 கலம் நெல்லைக்கொண்டு மாதம்தோறும் அவிட்டத் திருநாள் திருவிழாவை ஒரு நாள் கொண்டாடவும் இறைவனுக்குத் திருவமுது படைக்கவும் அப்போது முப்பது பார்ப்பனர்களையும் முப்பது தவசீலர்களையும் உண்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வகையில் கோலாகலமாக ஆண்டு முழுவதும் இவ்வூர் விழாக்கோலம் பூண்டு விளங்கும்படி செய்யும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கவனித்தவன் இராஜாஸ்ரய வளநாட்டை வகை செய்யும் அதிகாரி ஆவணமுடையான் மார்த்தாண்டன் உத்தமன் என்பவன்.

இதில் சிறப்பு என்னவெனில் கல்வெட்டின் அரசன் என்ற முறையில் இராஜராஜனின் சதய விழா முதலிலும், பிறகு அவனின் தமக்கை பிறந்த நாள் விழாவும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்படவேண்டும் என்று வருகிறபோது தமக்கையின் பிறந்தநாள் விழாவுக்கு அதிக அளவு பொருட் செலவு செய்தும் (180 கல நெல்) தம்பியின் பிறந்த நாள் விழாவை அதற்கடுத்தபடியாகச் சற்று ஆடம்பரம் குறைந்த முறையிலேயும் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளனர். இது இராஜராஜன் தன் தமக்கைக்கு அளித்த சிறப்பையும் மதிப்பையும் அவன் மட்டுமின்றி அவன் குடிமக்களும் உணர்ந்து மதித்துப் போற்றினர் என்பதையே இக்கல்வெட்டு நமக்குக் காட்டுகிறது.

*இத்துணைச் சிறப்புடைய இக் கல் வெட்டு,*
*"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் பொல ஸ்ரீகொ*

விராஜகெசரிபன் மராகிய ஸ்ரீ ராஜராஜ தெவர்க்கு யாண்டு உயக வது ராஜாஸ்ரய வளநாட்டு வகை செய்கின்ற ஆவண முடையான் மார்த்தாண்டன் உத்தமன் இந்நாட்டு பாச்சில் திரு அமலீஸ்வரத்து தெவர் நில நிவந்தக்காறர் இத்தெவர் தெவதானங் கொற்றங்குடியும் பாணநல்லூரும் முன்பு உண்டு வருகின்ற

பங்குகளில்..... இத்தெவர் தெவதானம் கொற்றங்குடியும் பாண நல்லூரும் உள்ளார் ஸ்ரீ பண்டாரக்கால் இராஜாஸ்ரைய நால் ஆட்டை அளக்கும் நெல்லு முன்நூற்று கலத்தாலும் உடையார் **ஸ்ரீ இராஜராஜ தெவர் பிறந்தருளின சதைய திரு நாளால்** இத் திருவமலி ஈஸ்வரம் உடைய மகாதெவர்க்கு திங்கள் ஒரு நாள் சதையத் திருநாளால் ஸ்னபனம் ஆடியருள வேண்டும் பல விசத்துக்கும் சதையத் திருநாளால் பெருந் திருவமுது செய் தருளவும் ஆக நெல்லு பதின் கலமாக ஓராண்டைக்கு நெல்லு நூற்று இருபதின் கலமும் **உடையார் ஸ்ரீ ராஜராஜதெவர்க்கு முன் பிறந்தருளின ஆழ்வார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் பிறந்தருளின அவிட்டத் திருநாளால் திங்கள்** ஒரு நாள் திருவிழா எழுந்தருளும் பெருந்திரு அமுது செய்தருளவும் ஆக அவிட்டத்திரு நாளால் ப்ராஹ்மணர் முப்பதின்மரும் தபஸ்யர் முப்பதின்மரும் உண்ண அட்டழிய வேண்டும் பல விசத்துக்கு ஆக திங்கள் அவிட்டத் திருநாளால் திருவிழா எழுந்தருள வேண்டும் பல விசத்துக்கு நெல்லு பதின்கலமாக ஓராண்டைக்கு நெல்லு நூற்றெண்பதின் கலமும் ஆக நெல்லு முந்நூற்று கலத்தாலும் இப்படி இன்னிவந்தம் முட்டாமல் செய்வொமானொம் இத்தளி பதிபாத மூல பட்டுடைய இசா சாற்றிய ரொம் இவை இத்தளி வண்ணக்கு கணக்குடைய வண்ணக் கரணத்தான் குமரன் அவன் சுந்தரநெழுத்து இவை...". (10) என்று மிக அழகாக இரண்டு பிறந்தநாள் விழாப்பற்றியும் கல்வெட்டுக் கூறுவதைக் காணலாம்.

## ஆவணியும் ஐப்பசியும் :

இனி, இராஜராஜ சோழன் பிறந்த நட்சத்திரம் சதயம் என்பது தெளிவாகக் கல்வெட்டுகளால் காட்டப்படுகிறது. ஆனால் அவன் பிறந்தது ஆவணிமாத சதயத்திலா அல்லது ஐப்பசி மாத சதயத்திலா என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

திரு சதாசிவபண்டாரத்தாரவர்கள்

*"ஐப்பசி சதையத்தில் பிறந்தவன் என்றும்*
*ஆவணி யில் பிறந்தவன் தான் என்பார்*
*கூற்றிற்கு சிறிதும் ஆதாரமின்மை காண்க"*

என்றும் பிற ஆசிரியர்கள் கருத்தை மறுத்துத் தனது நூலில் கூறியுள்ளார். (11)

தஞ்சை கோயிலில் இராஜராஜனின் சதைய விழா 12 நாட்கள்

கொண்டாடப்பட்டதாகக் கல்வெட்டுகளால் அறிகிறோம். ஆனால் அக் கல்வெட்டுகள் எந்த மாதத்தில் என்று கூறவில்லை. இதனை

"திருச்சதைய திருநாள் ஒன்றுக்கு
ஆடியருளுந் திருமஞ்சன நீரிலுந்
தண்ணீர் மீதிலும் இட ஏலவரிசி
ஆழாக்காகத் திருச்சதைய
த் திருநாள் பன்னிரண்டேக்கு ......". 12.

என்றும்,

"உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரம்
உடையார் கோயிலிற் எழுந்தரு
ளுந் திருச்சதையத் திருவிழாப்
பன்னிரண்டுங் கார்த்திகைக் கார்த்
திகை நாள் எழுந்தருளுந் திருவிழா
ஒன்றும் ஆகத் திருவிழா எழுந்த
ருளுநாள் பதின்மூன்றிற்கு ...". 13.

என்றும் கூறும் கல்வெட்டுகளால் அறியலாம்.

கேரள நாட்டில் உள்ள இவனின் 181 வது ஆண்டு கல்வெட்டு ஐப்பசி மாதத்தில் சதையவிழா செய்யப்பட்டதாகக் கூறுகிறது.

"ஸ்வதி ஸ்ரீ திருமகள் போல ஸ்ரீகோ
இராசராச கேசரிவன்மர்க்குயாண்டு
பதினெட்டாவது இராசராசதென்னாட்டு
வள்ளுவ நாட்டு முட்டம் முட்ட
மென்றும் பேரைத்தவிர்த்து மும்முடி
சோழ நல்லூர்ரென்று பேராக்கி
இந்நாட்டு திருநந்திக்கரை
மாதேவர்க்குப் பெருமாள் ஐப்பிசை
ச்சதயத்தினான்று ... திருவிழாவெடுத்து". 14

என்று கூறுவதனால் இவன் ஐப்பசியில் பிறந்திருக்கலாம். எனத் தெரிகிறது.

அதே சமயம் இவன் ஆவணி மாத சதயத்தில்தான் பிறந்தவனோ என்று எண்ணவைக்கும் வகையில் அமைந்த கல்வெட்டு ஒன்றும் உள்ளது. அது மகாபலீபுரத்துக்கு அருகில் உள்ள திரு இடவந்தை எனப்படும் ஊரில் உள்ள வராகசுவாமி கோயிலில் உள்ளது. கல்வெட்டானது ஆவணிச் சதையத்தில் விழா எடுத்த செய்தியைக் கூறுகிறது.

இவ்வூரில் கோயில் திருவிழாவின் போது தேர் இழுப்பதற் கென்றே தனியாகப் பன்னிரண்டு குடும்பங்கள் இருந்துள்ளன.

இவர்களின் தொழில் ஆடை நெய்தல், கடலில் மீன் பிடித்தல், இத்தொழில் கொண்டு இவர்கள் குடும்பத்துக்கு முக்கால் பொன் வீதம்செலுத்தும் இறையாக வருகின்ற மொத்தம் ஒன்பது பொன் கழஞ்சைக் கொண்டு இவ்விழா நடத்தப்பட்டது இவ்விழா இரண்டு நாட்கள் நடந்தது. அப்போது இப்பனிரண்டு குடிகளும் திருப்புரிச் சட்டம், திருக்கொடிக்கூறை, திருவமுது முதலியவற்றைக் கோயிலுக்கு இட வேண்டும்.

விழா முடிவில் இவர்கட்குக் கோயிலின் மரியாதையாகப் பிரசாதமும், பரிசட்டமும் (பரிவட்டம் கட்டுதல்) ஆகியனவும் அளிக்கப்பட்டன. இந்த விழாவைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பை ஊரவர்களும் சபையார்களும் ஏற்றுக் கொண்டனர்.

இப்படி விழா நடத்தும்படி செய்தவர்கள் இந்தப் பகுதியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களும் நிறைந்த அதிகாரங்களும் பெற்ற அரசு அதிகாரிகளும் ஆவர். இதனை “ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போல - ஸ்ரீ கொவிராஜ கெஸரிபன்மர்க்கு யாண்டு பதிந்னெழாவது ஆமூர்கொட்டத்துப் படுவூர் நாட்டுத் தெவதானம் திருவிடவந்தை ஆழ்வார் ஸ்ரீ வராகதெவர்க்கு இவ்வூரில்த் திருநாரா யனப்பர் நிலம் பட்டினவர் தேர் பற்றுங் குடிகள்-இப் பன்னிரண்டு குடியும் நெய்தும் கடல்புக்கும் இவர்களிடக் கடவ இறைப் பொந் பெரால் முக்காலாக பொன் ஒன்பதிந் கழைஞ்சும் திங்கள் தொறும் எப்பேர்ப்பட்ட இறையுங் கொண்டு ஸ்ரீராஜராஜ தேவர் திருநாள் ஆவணிச் சதையமாக எழுந்தருளும் திருவிழாச் செய்யவும் திருமஞ்சனஞ் செய்தருளிநால் ச்சார்த்தி அருள கழைஞ்சுப் பொன்பெற இரண்டு திருப்புரிச் சட்டம் திருநாள் களிரண்டிலும் இடக் கடவர்களாகவும் திருநாளிரண்டிநுக்கும் திருக் கொடிக் கூறை இடக் கடவர்களாகவும் திரு நாள்களிரண்டிலும் தீர்த்தம் பிரசாதிக்கும் அன்று அமுது செய்தருளிந படியே திருப்பாவாடையொடு பிரஸாதம் பெறக் கடவர்களாகவும் பாகில் முதலிகள் இருவர்க்கும் பரிச்சட்டம் பெறக்கடவர்களாகவும் இப்படி சந்திராதித் தவற் முட்டாமை செய்விக்கடவொம் இவ்வூர்ச் சவையொமும் ஊரொமும் இப்பட்டினவர் பன்னிரண்டு குடியும் புத்ரபவித்ராதிபதிகள் ஆழ்வார்க்கெய் திருப்பணி செய்வார்க ளாகவும் இப்பரிசு இத்திருவிழாச் சந்திராதித் தவற் செய்யலவத்தோம் இந்நாட்டு கண்டு காட்சி சுங்கமும் கரையுஞ் செய்கிற மாங்குடையாந் இராமன் குமாரநான சோழமுவெந்த

வெள் மாராயநும் இந்நாடு வகை செய்கிற எழிலூர்க் கிழவந் கற்றநாதித்தனாந தாநமு வேந்த வேளான் மாராயநும் இவ்விருவொம் சிலாலெகை செய்வித்தோம்" (15) என்றுகல்வெட்டு மிகத் தெளிவாகக் கூறுவதனால் அறியலாம்.

இப்படித் திட்டவட்டமாக இக்கல்வெட்டு "**ஸ்ரீ ராஜராஜ தேவர் திருநாள் ஆவணிச் சதயமாக**" என்று கூறுவதினின்று ஐப்பசி சதயத்தில் இவன் பிறந்திலன் என்பது தெளிவாகிறது. மேலும் இக் கல்வெட்டு 17-வது ஆண்டைச் சேர்ந்தது. ஐப்பசி சதயம் என்று கூறும் கல்வெட்டு இதற்குப் பின்னால் 18வது ஆண்டில் வெட்டப் பட்டது. எனவே முதலில் கூறப்பட்டுள்ளதே சரி என்று தோன்று கிறது.

மேலும் இக்கல்வெட்டானது முதலாம் இராஜேந்திர சோழனின் மார்கழித் திருவாதிரை நாளை குறிப்பிடுவது போல மிகத் தெளி வாகக் குறிப்பிடுதலையும் இங்கு ஒப்பு நோக்கிக் காணுதல் அவசிய மாகும்.

> *"திருவொற்றியூருடை மகா தெவர்க்கு*
> **உடையார் ஸ்ரீஇராசேந்திர சொழதெவர்**
> **திருநாள் மார்கழித் திருவாதிரை**
> *ஞாயன்று நெய்யாடி யருள ......* 16

என்று கூறுகிறது.

இவ்வாறு இன்று பலவாறாக வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது போலவே இராஜராஜன் காலத்திலும் மக்களிடையே அல்லது கோயில் அதிகாரிகளிடை யேயும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதோ என்னவோ தெரியவில்லை. அதைத் தீர்த்து வைப்பதற்கென்றே எழுதப்பட்டது போன்ற வகை யில் அமைந்த கல்வெட்டு ஒன்று இராஜராஜனின் 27-வது ஆட்சி ஆண்டில் திருவெண்காட்டுக் கோயிலில் எழுதப்பட்டுள்ளது. சிக்கலைத் தீர்க்க எழுதிய அக்கல்வெட்டு :

> *"— ஸ்ரீ ராஜராஜ தெவர்க்கு*
> *— யாண்டு உயஎ ஆவது வடகரை ராஜேந்திர சிம்ஹ*
> *வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர் ஸ்ரீதிருவெண்*
> *காடுடையார்க்கு ......* **திருவவதாரம் செய்தருளிய**
> **ஐப்பிணாக திங்கள் சதயத் திருநாள்** *நாற்று தீர்த்த*
> *மாடவும் அதற்கு முன்பு ஆறுநாள் திருவிழாப் பொதபும்*
> *இத்திருநாளில் ... ... ... ...* " 17

என்று தெளிவாக இவன் அவதாரம் செய்த மாதம் ஐப்பசி சதய நாள் என்று கூறுகிறது. எனவே ஆவணிச் சதயம் இவனின் பிறந்த நாள் மாதவிழாவாக இல்லாமல், இந்த மாதத்தில் வரும் நட்சத்திரத் தன்று எடுக்கும் ஒரு விழாவாகத்தான் கொண்டாடப்பட்டது என்றும்' துணியலாம். இதற்கு "திருநாள் ஆவணிச் சதயமாக" என்ற வரிகளை ஊன்றி படித்தால் புரிந்து கொள்ள முடியும். இதன் காரணம் பற்றியே கல்வெட்டுகளில் அவ்வாறு பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறலாம்.

மேலும் எண்ணாயிரம் என்ற ஊரில் உள்ள இராசேந்திர சோழனின் முப்பதாவது ஆண்டு கல்வெட்டு இராஜராஜனின் பிறந்த நாள் விழா சித்திரை மாதத்தில் ஒன்பது நாட்களுக்கு கொண்டாடப்பட்டதாக தெரிவிக்கிறது. [18]

*"உடையார் ஸ்ரீ ராஜராஜ தெவர் திருநக்ஷத்திரமை*
*சித்திரை சதைய திரு உத்ஸவம்*
*எழுந்தருளு இடத்துக்கு திருநாள் ஒன்பது*
*நாளைக்கும் வேண்டும் விசத்துக்கு உடலாக"*

என்று வரும் இக்கல்வெட்டு வரிகளால் இம் மன்னனின் சதைய விழா, சித்திரை மாதத்தில் வரும் சதைய நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்பட்டமை நன்கு புலனாகிறது.

## அடிக்குறிப்புகள் :

* இத்தலைப்பும் பொருளும் இக்கட்டுரையாசிரியர் எழுதி வெளியிட இருக்கும் "மழ நாட்டுக் கோயில்கள் - கள ஆய்வு" என்னும் நூலைத் தழுவி எடுக்கப்பட்டது.

1. அ) பிற்காலச் சோழர் வரலாறு - தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.
   ஆ) சோழர்கள் – கே. ஏ. நீலகண்டசாஸ்திரி
   இ) சோழ அரசிகள் காலத்தில் கோயிற்கலை – பா. வெங்கட்ராமன்.
   ஈ) தென்னிந்திய வரலாறும் சமுதாயமும், பதிப்பாசிரியர் : கரோஷிமா.
2. தென்னிந்தியக் கல்வெட்டுகள் மடலம் 2, பகுதி 2, எண்.6.
3. மேற்படி: மடலம் 1, எண் 2.
4. 17 / 19 19
5. 17 / 1919 : "நகரம் ராஜராஜபுரத்து உடையார் பொன் மாளிகையில் துஞ்சிந தேவர் திரு

மகளார் ஸ்ரீ பிராந்தகன் குந்தவைப் பிராட்டி
யார் எடுப்பித்தருளிந ஸ்ரீ இரவிகுல
மாணிக்க ஈஸ்வரத்து தெவர்ககும் ஸ்ரீ குந்தவை
விண்ண கரத்தெவற்கும்
ஸ்ரீ குந்தவை நாலயத்து தெவற்
கும் குடத்தருளிந பொன் ... "

6. தென்னிந்திய கல்வெட்டுகள் மடலம் 1, எண்: 1
7. தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினரால் அறிவியல் முறையில் திரும்பவும் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்ட சின்னமாக உள்ளது இக்கோயில். இங்குள்ள கல்வெட்டுகள் இதுவரை மைய தொல்பொருள் துறையால் படி எடுக்கப்படவில்லை.
8. நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது.
9. நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது.
10. நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது.
11. பிற்காலச் சோழர் வரலாறு
தி. வை. சதாசிவபண்டாரத்தார். பக்கம். 94.
12. தென்னிந்திய கல்வெட்டுகள், மடலம் 2, பகுதி 2, எண் 24
13. மேற்படி : எண். 25
14. பிற்காலச் சோழர் வரலாறு, பண்டாரத்தார், பக்கம் 94
15. இக்கல்வெட்டானது செல்வி எஸ். வசந்தி, தொல்பொருள் அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை அவர்களால் நேரில் படித்து எழுதப்பட்டது. அவர்கள் இக்கல்வெட்டை எனக்களித்து உதவினார்கள் 274/1910 ; தென்னிந்தியக் கல்வெட்டுகள் மடலம் 2, பகுதி 1, முன்னுரை பக்கம் 1.
16. தென்னிந்தியக் கல்வெட்டுகள் மடலம் 5, எண் : 1354.
17. தென்னிந்தியக் கல்வெட்டுகள் மடலம் 5, எண் : 979.
18. 341 1917.

# சிவபாதசேகரன் இராசராச சோழன்

**[திரு. கோ பஞ்சாபகேசன்]**

சால்பமைகல்வி தண்ணளி துணிவு, செங்
கோல்வளம் செவ்வி கொடைமடம் ஊக்கம்
குடி புறம் காக்கும் கொள்கைநற் சூழ்ச்சி
நடைநலம் படைவலி நட்பமை சீர்த்தி
அஞ்சா நெஞ்சம் அருந்திறல் அமைச்சொடு
எஞ்சா திலங்கி இப்புவி போற்ற
மலைமகள் மலர்மகள் கலைமகள் சூழத்
தலைமைகொள் வேந்தாய்த் தாரணி புரந்தோர்
எண்ணிலர் கண்ணகன் ஞாலம்ஆண் டவருள்
கண்ணிடிற் சிலரே கடவுளர் ஒப்பத்
திகழ்பவர், சான்றோர் சிந்தையில் வாழ்வோர்,
புகழ்உடம் போடு பொலிபவர், இந்த
உலகொருங் காண்டோர் எனினும் உலகம்
நலமுற நிலைபெறு புலனுறு செயலால்
வலமுற வாழா மன்னரை, உலகக்
காவலர் என்று கருதுவ தல்லால்
தேவரென் றுணர்வாற் சிந்தையில் வைத்துப்
போற்றுத லில்லை; பொன்றாப் புகழினை
ஆற்றலும் அறிவும் அளித்திடா; நிலைத்த
பெரும்புகழ் வேண்டின் பீடுசால் மன்னன்
அன்பெனும் படையும் அருளெனுங் குடையும்
இன்புறு சொல்லெனும் எழிலரி இருக்கையும்
தன்னல மறுப்பெனும் தியாகக் கொடியும்
முன்னிறை நெறியெனும் முடியுந் தாங்கித்
தவமுதிர் ஞானியர் தாளினை பற்றிப்
புவிமுறை ஆளின் இறையெனப் போற்றி
மன்னுயிர் வாழ்த்தி வணங்குதல் திண்ணம் ஆம்.
வளவர்தம் குடியில் அளவிலா வேந்தர்
அளிமிகு செங்கோல் ஏந்தினர் எனினும்
அருள்மொழித் தேவனும் பெரும்புகழ் வேந்தன்

பொருள்மிகு புகழைப் புவியெலாம் ஏத்தி
உவந்துமுன் வணங்கி ஓம்புதற் கவன்செய்
தவந்திகழ் செயலும், சைவ நன்னெறி
மண்ணகத் தோங்கி விண்ணகத் துறையப்
பண்ணிய செயலும் பைந்தமிழ் வேதமாம்
திருமுறைப் பதியம் திசைதிசை ஒளிவிடத்
தூண்டிய செயலும், காண்டகு வனப்பொடு
கலை நலம் மிளிர மலையெனத் திகழும்
நிலைஉயர் ஆலயம் நிறுவிய செயலும்
'ஆம்' எனின் உலகம் ஓம் என ஒப்பும்;
கோமுறை யாவதிக் குவலயத் துயிர்கள்
ஏமுறப் புரிவதென் றிறைநெறி யாளர்
இயம்பிய உண்மையை **இராச ராசனாம்**
நயந்திகழ் **சோழன்** வியன்பெறச் செய்தான்
செயற்கருஞ் செயலாம் திருப்பதி யங்கள்
திருக்கோ யில்தொறும் இசையொடு முழங்கச்
செய்தத னால்உயர் செந்தமிழ் மொழியும்
பொய்தவிர் பண்பும் பொலிவு பெற்றனவாம்
இறையுறை ஆலயம் முறைபெறச் சமைத்த
நிறைவுறு பணியால் நெடுந்தமிழ்க் கலையின்
தொன்மையுந் தூய்மையும் ஒண்மையும் தெய்வ
நன்மையும் நாளிலம் நயப்புறச் செய்தான்
வித்தகன் சத்திய வேந்தன் அருள்நெறிச்
சித்தன் செந்தமிழ்ப் பித்தன் திருப்பணி
போற்றி யவன்புகழ் புவியெலாம் பரவச்
சாற்றிய வேந்தன் முடிபுனை ஆயிரம்
ஆண்டு நிறைவிழாக் காண்டகப் போற்றி
வாழ்த்துவம் அவன்புகழ் வளர்கென இனிதே!

# "சோழர் கால நாணயங்கள்"

[இராம. இராமமூர்த்தி, அ. அ. ம. க; காரைக்கால்]

சோழர்கால நாணயங்களைப் பற்றிக் கல்வெட்டுகள் துணைக் கொண்டு அறியலாமே ஒழிய, இது வரை மிகுதியான நாணயங்கள் அகழ்வாய்வில் கிடைக்கவில்லை என்றே கூறலாம். உத்தம சோழன், இராசராஜன், இராசேந்திரன், குலோத்துங்கன் காலத்து நாணயங்களைப் பற்றிய சில செய்திகளை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காணலாம்.

சோழர் காலத்தில் பொற்காசுகளும், செப்புக் காசுகளும் வழக்கத்தில் இருந்தன. "உத்தம சோழன் காலத்துப் பொன் நாணயம் 58 பொன் துகள்" எடையுள்ளது என, டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

இராச ராசன் கால நாணயங்களில் செப்புக் காசுகளே மிகுதி; பொற்காசுகள் வழக்கில் குறைவாகவே இருந்தன. அக் காலப் பொற்காசுகளாக, "மதுராந்தக தேவன் மாடை, இராசராசன் மாடை, இராசேந்திர சோழன் மாடை என்ற நாணயங்கள் வழக்கிலிருந்தன என, "முதலாம் இராச ராச சோழன்", என்ற நூலில் அதன் ஆசிரியர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடுகின்றார். இப் பொற்காசுகள் ஏறத்தாழ ஒரு கழஞ்சு (நாற்பது குன்றிமணி) எடையினவாகவும் ஒன்பதரை மாற்று உடையதாகவும் விளங்கிற்று என்பர். மேலும், "அன்றாடு நற்காசு" எனவும், 'பழங்காசு', எனவும் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேற்குறித்த ஆசிரியர்கள் சுட்டுகின்றனர். (மாடை, உலோகம், பொன் இவற்றைச் சுட்டும் மாழை என்ற சொல்லின் திரிபாகவும் இருக்கலாம்.)

இப் பொற்காசுகளே அன்றி ஈழக் காசுகள் என்பனவும் சோழ நாட்டில் வழக்கிலிருந்தன. இவை அரைக் கழஞ்சு எடையும், ஒன்பதரை மாற்றும் உடையன. இலங்கையினின்றும் இவை சோழநாட்டுக்கு வந்திருக்கலாமென வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

மாடை, காசு முதலிய நாணயங்களுடன் "கருங்காசு," என்ற ஒருவகை நாணயமும் வழக்கிலிருந்ததாக அறிகிறோம். இதுவும் ஈழநாட்டினின்றும் வந்திருக்கலாமென அறிஞர் கூறுகின்றனர்.

அக்கம் என்ற ஒரு நாணயம் இராசராசன் காலத்தில் வழக்கில் இருந்துள்ளது எனவும் ஏழரை அக்கம் ஓர் ஈழக் காசுக்குச் சமமென வும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

திரமம் என்ற நாணய வகை ஒன்றும் இருந்ததாகக் கூறப் படுகிறது. இது ஒருநாணயமா அன்றா என்பதில் வரலாற்றாசிரி யர்கள் முரண்படுகின்றனர்.

செப்புக்காசுகளும் சோழர் கால வழக்கிலிருந்தன. அவை வட்ட வடிவின; அழகிய வேலைப் பாடுடையன. இராச ராசன் காலச் செப்புக் காசுகள் ஈழத்தில் கிடைத்துள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் செப்புக் காசையே'காசு'எனும் பெயராற் சுட்டியுள்ளனர்.

இராச ராசன் கால ஈழக்காசுகள் நல்ல தங்கமாயிருந்தன. ஆனால் பிற்காலத்தில் பொன்னோடு பிற உலோகங்களும் கலப்படம் செய்யப்பட்டு நாணயங்களின் மாற்றுக் குறைந்தது. தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி நாணயங்களும் வழக்கிலிருந்தன என வரலாற் றறிஞர்கள் சுட்டுகின்றனர்.

எனினும் சோழர்கால நாணயங்களைப் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. இத்துறையில் மேலும் ஈடுபாடு கொண்டு புதிய செய்திகள் வெளிப்படுத்தப்படுமாயின் சோழர்காலச் செய்திகள் மேலும் தெளிவு பெறும்.

[ இக்கட்டுரைக்குத் துணை நின்ற நூல்கள் :

1. பிள்ளை, டாக்டர். கே. கே.; "சோழர் வரலாறு;" தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977;

2. திருநாவுக்கரசு, க. த; "முதலாம் இராசராச சோழன்", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்; 1975.

3. பெருமாள் முதலியார், மு. ரா. (மொ. பெ.)," தென்னிந் தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்." தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்; 1976.]

(104ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்தது. குலோத்துங்கச் சோழதேவன் காலத்தில் அக்னீசுவரமுடைய மகாதேவர் திருக்கோயில் என்ற புதுபெயரைப் பெற்றது. பிற்காலத்தில், இங்கு சுற்றாலைத் தெய்வமாக அமைக்கபட்டிருந்த முருகனின் புகழ் சிறக்கவும் இது குமாரவயலூராய் வடிவு எடுத்தது.

இத் திருக்கோயிலில் உள்ள ஆதிநாதர் கருவறையின் புறச் சுவர்களில் தென்புறத்திலும் வடபுறத்திலும் இருந்து இருபது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.[1]

1. மன்னன் பெயர் தெரியாத இராசகேசரியின் கல்வெட்டுகள் —8
2. முதலாம் பராந்தகனின் கல்வெட்டுகள் —2
3. பெயர் தெரியாத பரகேசரியின் கல்வெட்டு —1
4. முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் —4
5. முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு —1
6. முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் —2
7. மன்னன் பெயர் தெரியாத, அடைமொழியற்ற கல்வெட்டுகள் —2

இங்குக் கிடைத்திருக்கும் மன்னன் பெயர் தெரியாத இராசகேசரியின் கல்வெட்டுகள் எட்டினுள், ஒன்று மட்டும் மிக உயரிய ஆட்சியாண்டினையுடையது. இது இராசகேசரியின் முப்பத்தோராம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தையாண்ட சோழர்களுள் இத்தகு உயரிய ஆட்சியாண்டைக் கொண்ட இராசகேசரிகள் நான்கு பேர்தான். முதலாம் ஆதித்தன் முப்பத்தாறு ஆண்டுகளும், முதல் இராசாதிராசன் முப்பத்தாறு ஆண்டுகளும், முதற்குலோத்துங்கன் ஐம்பது ஆண்டுகளும், மூன்றாம் இராசராசன் நாற்பது ஆண்டுகளும் அரசாண்டுள்ளனர்.[2] இவர்களுள் முதலாம் ஆதித்தன் தவிர ஏனைய மூன்று மன்னர்களுக்கும் மெய்க்கீர்த்திகள் உண்டு. பொதுவாக இம்மூவருடைய கல்வெட்டுகள் அனைத்திலும் இம்மெய்க்கீர்த்தி இடம் பெறும். ஆனால் வயலூரிலுள்ள இராசகேசரியின் முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் மெய்க்கீர்த்தி இல்லை என்பதுடன், அதன் எழுத்தமைதியும் இக்கல்வெட்டை ஒன்பதாம் நூற்றுண்டுடன் பொருத்துகின்றது. எனவே இக்கல்வெட்டுக்குரியவன் முதலாம் ஆதித்தன் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

இம்முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம், 'விடேல் விடுகு கல்' என்ற பெயரில் நிறுத்தலளவை ஒன்று

அக்காலத்தில் வழங்கி வந்த செய்தியை அறிய முடிகின்றது. உறையூர்க் கூற்றத்தைச் சேர்ந்த வயலூர் மகாதேவர் திருக்கோயிலில் ஒரு விளக்கெரிப்பதற்காக வல்லபி நாட்டைச் சேர்ந்த ஒருவர் விடேல் விடுகு கல்லால் அளக்கப்பட்ட முப்பது கழஞ்சு பொன்னைக் கொடையாகத் தந்ததும், அப்பொன்னைக் கொண்டு ஊரவையார், அவ்வறத்தைத் தொடர்ந்து நிகழ்த்தும் பொருட்டு நிலம் வாங்கியதையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது[3].

ஏனைய ஏழு இராசகேரிக் கல்வெட்டுகளுள் ஒன்று ஆட்சியாண்டு அறிய முடியாத நிலையில் உள்ளது. ஐந்து கல்வெட்டுகள் இராசகேசரியின் ஏழாம் ஆட்சியாண்டிலும், ஒன்று ஆறாம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட்டுள்ளன.

இராசகேசரியின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டு, இக்கோயிலில் நடைபெற்ற விழாக்கள் பற்றிய குறிப்பினைத் தருகிறது. நக்கன் நாகை என்னும் ஆடல்மகள் விஷுத் திருநாளின் போதும், வைகாசித்திங்களில் வரும் இன்னொரு திருவிழா நாளின் போதும் இத்திருக்கோயிலில் விளக்கெரிக்கவும், வழிபாடுகள் நிகழ்த்துவதற்கும் நிலக்கொடை அளித்த செய்தியையும், இவ்வூரின் மேற்கே அமைந்திருந்த அம்பலம் ஒன்றைப் புதுப்பிக்க நிலமளித்ததையும் இக்கல்வெட்டால் அறிய முடிகின்றது[4]. இராசகேசரியின் இந்தக் கல்வெட்டைக் கோப்பரகேசரிவர்மன் கல்வெட்டென்று வயலூர்த்தலவரலாறு பிழைப்படக் குறிக்கிறது.[5]

இராசகேசரியின் ஆறாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டு இக்கோயிலுக்கு ஊரார் செய்த நிலவிற்பனையைக் குறிக்கிறது[6]. இராசகேசரியின் ஏழாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டிருக்கும் ஐந்து கல்வெட்டுகளுள் ஒன்று, நக்கன் கரப்பாலை என்னும் ஆடல்மகள் தந்த பணக்கொடையை ஏற்றுக்கொண்ட வயலூர் ஊரவையார், கோயிலின் இரு தோட்டங்களையும் காத்து வந்த தோட்டக்காரர்களின் நல்வாழ்விற்காக, அப்பணத்திற்குரிய நிலத்தைத் தேவதானமாக விற்றுக்கொடுத்த செய்தியைக் கூறுகிறது[7]. இன்னொரு கல்வெட்டு, ஊரவையார், அழிஞ்சிக் கந்தன் என்பவரின் திருமகளாகிய கந்தன் சாத்திக்கு நிலமொன்றை வரியிலியாக விற்ற செய்தியையும் அந்நிலத்தைக் கந்தன்சாத்தி, வயலூர் கோயிலில் ஒரு விளக்கெரிப்பதற்காகக் கொடையளித்த செய்தியையும் கூறுகிறது[8]. இராசகேசரிவர்மனின் இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த பிறிதொரு கல்வெட்டு, வயலூரைச் சேர்ந்த எட்டிப்பட்டம் பெற்ற வேட்டன் சேந்தன் என்பாரின் திருமகள் சேந்தன்காரி, இத்திருக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்

காகப் பணக்கொடை தந்ததும், அத்தொகைக்குரிய நில மொன்றினை ஊரார் தேவதானமாக விற்றதுமான செய்திகளை விவரிக்கிறது[9].

நான்காவது கல்வெட்டு சிக்குடியைச் சேர்ந்த சங்கன் மாறன் என்னும் சிற்றூரில் வாழ்ந்த அந்தணப் பெண் ஒருவர் இக்கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்கப் பணக்கொடை அளித்ததையும், அதற் கீடான நிலமொன்றை விளக்கெரிக்கும் பொருட்டு ஊரார் விற்பனை செய்ததையும் உணர்த்துகிறது.[10] இந்த இராசகேசரியின் கல்வெட்டைக் கோப்பரகேசரியின் கல்வெட்டென்று பிழைபடக் குறிக்கும் வயலூர்த் தலவரலாறு செய்தியையும் பிழைபடவே தந்துள்ளது. "பரகேசரிவர்மனது 7 வது ஆண்டில் வயலூர்ப் பெருமான் கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்க ஊரார் 7 கழஞ்சரைப் பொன் கொண்டு நிலம் தேவ தானமாகக் கொடுத்தமை''. இது தலவரலாறு தரும் செய்தி[11]. இதில் எத்தனைத் தவறுகள் ! முதல் தவறு ராசகேசரியை பரகேசரியாக்கிருப்பது. இரண்டாவது தவறு, யார் கொடை கொடுத்தது என்பதைத் தெளிவுபடக் குறிக்காமல் விட்டிருப்பது. மூன்றாவது தவறு கல்வெட்டில் சொல்லப்படாத பெயரான 'வயலூர்ப் பெருமான்' என்ற பெயரைச் சேர்த்திருப்பது. இப்படித் தலவரலாறுகளில் தவறுகள் மலிந்து கிடக்கும் நிலைக்கு மாற்றம் எப்போது? ஐந்தாவது கல்வெட்டு, குல்வானை என்பவரின் மனைவி தொடப்பெற்றாள் என்பாள். இக்கோயிலில் நந்தா விளக்கெரிக்கப் பணக்கொடை அளித்ததையும், அதற்கு ஈடான நிலமொன்றை ஊரார் விற்றதை யும் கூறுகிறது[12] இந்தக் கல்வெட்டையும் வயலூர்த்தலவரலாறு பரகேசரியின் கல்வெட்டாய்க் காட்டுவதுடன், தொடப்பெற்றாளைத் தோடப்பெராளாக்கியிருக்கிறது.[13]

இக்கோயிலில் காணப்படும் மன்னன் பெயர் அறியமுடியாத, இந்த ஏழு இராசகேசரிக் கல்வெட்டுகளுள் சில முதல் இராசராசன் காலத்தினவாகலாம் என்று திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கருதுகிறார்.[14] இந்த ஏழுமே முதல் இராசராசன் காலத்தவை என்பதுதான் என் கருத்தாகும். இந்த ஏழில் ஆறு கல்வெட்டுகள் மகளிர் கொடுத்த கொடைகளைப் பற்றியே பேசுகின்றன. நக்கன் நாகை, நக்கன் கரப்பாலை, கந்தன் சாத்தி, சேந்தன்காரி, சங்கன் மாறனைச் சேர்ந்த அந்தணப்பெண் தொடப்பெற்றாள் என்னும் ஆறு பெண்கள் இந்த ஆறு கல்வெட்டுகளில் கொடையாளிகளாகக் குறிக்கப்பெறுகிறார்கள். இவற்றுள் ஐந்து கல்வெட்டுகள் இராசகேசரியின் ஏழாமாண்டைச் சேர்ந்தவை.ஒன்று ஆட்சியாண்டு தெரியாதது

இக்கோயிலில் இராசகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டில் கூறப்படும் செய்தி காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய இராசகேசிரிவர்மனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுடன் தொடர்புடையதாக இருப்பதால், இக்கல்வெட்டைக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய இராசகேசரிவர்மனான முதலாம் இராசராசனின் கல்வெட்டாகவே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். முதலாம் இராசராசனின் மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டே இங்குக் காணப்படும் போது, அம்மன்னனுடைய ஆறும், ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் ஏன் இங்கிருக்கக்கூடாது? மேலும் இராசகேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டில் குறிப்பிடப்படும் சேந்தன்காரி என்ற பெண், இக் கோயிலில் உள்ள பரகேசரிவர்மனின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலும் குறிக்கப் பெறுகிறாள்.[15] சேந்தன்காரி என்ற பெண்ணொருத்தி இக்கோயிலின் இறைவியானஉமா பட்டாரகியைத்தன் திருமகளாகத் தத்தெடுத்துக் கொண்டு, இறைவிக்கும் இறைவனுக்கும் திருமணம் செய்வித்து மகிழ்ந்ததுடன், தனக்குச் சீதனமாக வந்த நிலம் முழுவதையும் உமாதேவிக்குரிய நாள் வழிபாட்டிற்கும் படையல்களுக்குமாய் எழுதிவைத்தாள், என்ற சுவையான செய்தியைக் கூறும் இக்கல்வெட்டு பதினைந்து ஆண்டுகள் (கி. பி. 970 – 985) இச்சோழமண்டலத்தை ஆண்ட உத்தம சோழனுடையதாகக் கருதப்படுகிறது.[16] உத்தம சோழனை அடுத்து ஆட்சிக்கு வந்து இருபத்தொன்பது ஆண்டுகள் அரசாண்ட இராசகேசரி முதலாம் இராசராசன் தான் உத்தம சோழன் கல்வெட்டில் குறிக்கப்பெறும் சேந்தன்காரி என்னும் பெண் இராச கேசரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலும் குறிக்கப் பெறுவதை காணும்போது எழுத்தமைதியில் ஒத்துவரும் இராச கேசரிவர்மனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் அனைத்துமே முதலாம் இராசராசனுடையவை என்பது தெளிவாகும். இம்மன்னனுடைய மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்குக் காணப்படுவதை நினைவில் கொண்டால், இராசகேசரியின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டும் கூட இராசராசனுடையவை என்பது விளங்கும். மேலும் முதலாம் இராசராசன் காலத்தில் தான் ஆடல் மகளிருக்கு வளமும் வாழ்வும் பெருகியது. இதைத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் செவ்வனே உணர்த்துகின்றன. ஆட்சியாண்டுகளின் ஏறுவரிசை கூட பொருந்தி வருவது நோக்கத்தக்கது. மூன்றாம் ஆண்டு, ஆறாம் ஆண்டு, ஏழாம் ஆண்டு–இவை மன்னன் பெயரற்ற இராசகேசரிவர் மனின்கல்வெட்டுக்களின் காலம் 'காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளிய ராசகேசரிவர்மன்' என்ற அடைமொழியுடன் பதினோராம் ஆட்சியாண்டு, பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள்

காணப்படுகின்றன. 'திருமகள் போல' என்ற மெய்க்கீர்த்தியுடன் இருபத்து நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இவையனைத்தையும் நோக்க இக்கோயிலில் உள்ள மன்னன் பெயர் குறிப்பிடாத மெய்க்கீர்த்தியில்லாத இராசகேசரிக் கல் வெட்டுகள் அனைத்துமே (முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல் வெட்டுதவிர) முதலாம் இராசராசனுடையவை தான் என்று நன்றாகத் துணியலாம்.

இக்கோயிலில் முதலாம் பராந்தகனின் மூன்று கல்வெட்டுகள் முறையே அவனுடைய 7, 14, 41 ஆம் ஆண்டுகளைச் சார்ந்தனவாக உள்ளன என்று திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறிக்கிறார்[17]. இது தவறான செய்தியாகும். இக்கோயிலில் முதலாம் பராந்த கனின் கல்வெட்டுகள் இரண்டுதான் காணப்படுகின்றன[18]. அவை அம்மன்னனுடைய ஏழாம் ஆட்சியாண்டிலும், நாற்பத்தோராம் ஆட்சியாண்டிலும் வெட்டப்பட்டுள்ளன. திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் குறிப்பிடும் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கல்வெட்ட றிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது[19]. வயலூர்த் தலவரலாற்றில் காணப்படும் கல்வெட்டுகள் பகுதியிலும் இப்பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிக்கப்படவில்லை. காணப்படாத இககல்வெட்டைத் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எப்படி சேர்த்துக் கொண்டார் என்பது வியப்பாகவே உள்ளது.

முதலாம் பராந்தகனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, வயலூரைச் சேர்ந்த நக்கன் மறப்பிலிக்கு ஊரார் நில விற்பனை செய்த செய்தியைக் கூறுகிறது[20]. இம்மன்னனின் நாற்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, காவிரியின் தெற்குக் கரையில் அமைந் திருந்த பிரமதேயமான நந்திவர்ம மங்களத்தைச் சேர்ந்த நாலாயிரத்து முந்நூற்றுவன் எனப்படும் சந்திரசேகர் அரமைந்தன் இத்திருக்கோவிலில் பணியாற்றவும், திருப்பதியம் பாடவும் மூன்று பெண்களைக் கொடையாக அளித்த சுவையான தகவலைத் தருகிறது[21] திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இக்கல்வெட்டைப் பற்றி எழுதுமிடத்தில், முதற் பராந்தகன் தன்னுடைய 35-ஆம் ஆண்டுக்கு முன் கலலல் என்ற ஊரிலிருந்து பகைவர்களிடம் கைப்பற்றிவந்த பெண்டிர் மூவரை உறையூர்க் கூற்றத்திலுள்ள வயலூர்க் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்யவும், திருச்சாமரம் வீசவும் பணியாட்களாக நியமித்தான்' என்று குறிப்பிடுகிறார்[22]. கல்வெட்டறிக்கை சொல்வதற்கும் இவர் சொல்வதற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. கல்வெட்டறிக்கை யில் சந்திரசேகர அரமைந்தனே இம்மகளிரைக் கொடையளித்தான்

என்றிருக்க, இவர், முதற்பராந்தகன் தான் கைப்பற்றி வந்த மகளிரை நியமித்ததாகக் கூறுகிறார். இச்செய்தி திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்துக்கு எங்கிருந்து கிடைத்தது ? மேலும் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டிருப்பது பராந்தகனின் நாற்பத்தோராம் ஆண்டில் அவன் இப்பெண்டிரைக் கைப்பற்றிய தாகக் கூறுவது முப்பத்தைந்தாவது ஆண்டில். முப்பத்தைந்தாவது ஆண்டிலிருந்து நாற்பத்தோராவது ஆண்டு வரை, அதாவது கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் இவர்கள் எங்கிருந்தனர்? என்ன செய்து கொண்டிருந்தனர் ? முதலாம் பராந்தகனின் இந்த நாற்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மீண்டும் படிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் கல்வெட்டறிக்கை சரியா, திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் கூறுவது சரியா என்பது தெளிவாகும்.

இக் கோயிலில் முதலாம் இராசராசனின் அடைமொழியுடன் அல்லது மெய்க்கீர்த்தியுடன் கூடிய மூன்று கல்வெட்டுகளும், ராசகேசரிவர்மன் என்ற பெயரில் ஒரு கல்வெட்டும் காணப்படுகின்றன. ஏற்கனவே பார்த்த இராசகேசரிவர்மன் கல்வெட்டுகள் ஏழும் இம்மன்னனுடையவைதான் என்பதை மறத்தலாகாது. ஆக இம்மன்னனின் பதினோரு கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் முதலாம் இராசராசனின் செல்லப்பிள்ளையாய் விளங்கியமைக்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ ?

முதலாம் இராசராசனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, உறையூர்க் கூற்றத்திலுள்ள வயலூரைச் சேர்ந்த பெருமான் விடங்கன் என்னும் வணிகனால் 'ஐந்நூற்றுவன்' என்ற பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட்டதையும், அம் மண்டபத்தில் விளக்கெரிக்க, ஊரார் அவ்வணிகனுக்கு வரிநீக்கிய நில மொன்றினை விற்றுக் கொடுத்ததையும் கூறுகிறது.[23]

'காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தருளிய கோராசகேசரி வர்மன்' என்று தொடங்கும் இம்மன்னனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இதே மன்னனுடைய மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட பெருமான் விடங்கன், திருவெள்ளறை மயிலாட்டி என்றும் அழைக்கப்பட்டான் என்பதைத் தெரிவிப்பதோடு, இவன் கட்டிய ஐந்நூற்றுவன் என்ற மண்டபத்தைத் தொடர்ந்து சிறப்பாகப் பாதுகாப்பதற்கு இவ்வணிகனுக்கு ஊரார், தென்னூரைச் சேர்ந்த பல்லங்குடியில் நிலம் விற்றும் கொடுத்தமையையும் கூறுகிறது.[24] இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் தென்னூர் இப்போதும் திருச்சியில் தில்லைநகர்ப் பகுதிக்கருகில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

'காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தருளிய கோராசகேசரிவர்மன்' என்று தொடங்கும் இம்மன்னனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கோயில் பணியாட்கள் இருவர் ஒரு பெண்ணிடமிருந்து பெற்றுக் கொண்ட பணத்திற்காக இறைவனுக்கு காணிக்கைகள் செலுத்த ஒப்பந்தம் செய்து கொண்ட தகவலைத் தருகிறது.[25]

இராசராச சோழனின் புகழ்பெற்ற மெய்க்கீர்த்தியான 'திருமகள் போல' என்னும் தொடரைத் தொடக்கமாகக் கொண்ட கல்வெட்டொன்று, திணையன், ஊரன் என்பானுக்கு வயலூர்த் திருக்கோயிலில் திருப்பதியம் பாடுவதற்கு ஊரவையார் வரிநீக்கி, நிலக்கொடை அளித்தமையைக் குறிக்கின்றது.[26] இராசராச சோழனின் இறைப்பற்றும், திருப்பதிகங்களில் அவனுக்கிருந்த ஈடுபாடும், அவற்றைக் கோயில்களில் ஒலிக்கச் செய்ய அவன் மேற்கொண்ட முயற்சிகளும், இக்கல்வெட்டால் உணரக்கிடக்கின்றன.

முதலாம் இராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று இங்கு காணப்படுகிறது.[27] இது இக் கோயில் இறைவனுக்குச் சோலைத் தேவன் என்பான் பொற்பூவொன்றை அளித்த செய்தியைக் கூறுகிறது. இதனருகில் உள்ள துண்டுக் கல்வெட்டொன்று மாறன் நக்கன் என்ற செம்பியன் உறையூர் நாடு கிழவன் என்பான் இக்கோயிலுக்கு நிலக்கொடையளித்த செய்தியைத் தருகிறது.

முதலாம் குலோத்துங்கனின் இரண்டு கல்வெட்டுகள், இக் கோயிலில் உள்ளன. இம்மன்னனின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டு[28] வயலூரில் உள்ள அக்னீசுவரமுடைய மகாதேவர் கோயிலில் விளக்கொன்று எரிப்பதற்காக தேவதானமாக நிலக் கொடையளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இம்மன்னனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்குக் கொடையைப் பற்றிப் பேசுகிறது.[29]

மன்னன் பெயர், ஆட்சியாண்டு எதுவும் அறிய முடியாத கல்வெட்டொன்று இக்கோயிலில் விளக்கெரிக்க நெய் வழங்கும் பொருட்டு, இவ்வூராரின் பொறுப்பில் நிலமொன்று கொடையாகத் தரப்பட்ட செய்தியைக் கூறுகிறது[30]. இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இது முதற்குலோத்துங்கனுடையதாகலாம் என்று கல்வெட்டாய்வாளர்கள் ஊகிக்கிறார்கள்.

மன்னன் பெயர் அறிந்து கொள்ள முடியாத, ஆட்சியாண்டு மட்டும் இருக்கும் கல்வெட்டொன்றும் இக்கோயிலில் உள்ளது[31]. இது சோழ மன்னன் ஒருவனின் ஏழாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டால், இக்கோயிலுக்குக் கொடையாகத்

தரப்பட்ட பத்து கழஞ்சு பொன், நிலமாக மாற்றப்பட்டு, அதன் வருவாயிலிருந்து இக்கோயில் இறைவனுக்கு நாள் தோறும் நடத்தப்படும் மூன்று வழிபாடுகளின் போதும், இரண்டு சங்குகள் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டதை அறிகிறோம். ஏழாம் ஆட்சியாண்டு கல்வெட்டாக இது இருப்பதாலும், இதன் எழுத்தமைதி பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது போல் இருப்பதாகக் கல்வெட்டாய் வாளர்கள் கருதுவதாலும் துணிந்து இதை முதலாம் இராசராசனுடையதென்று கூறலாம். இதையும் சேர்த்தால் இக்கோயிலில் பன்னிரண்டு கல்வெட்டுகள் முதலாம் இராசராசன் காலத்தில் வெட்டப்பட்டன என்பதை அறிந்து மகிழலாம். வயலூர்த்தல வரலாறு இக்கல்வேட்டைக் குலோத்துங்க சோழதேவனுடையது என்று தவருகக் குறிப்பிட்டுள்ளது [32].

வயலூர்க் கோயிலில் காணப்படும் இவ்விருபது கல்வெட்டு களும் சோழர் காலத்து மகளிர் நிலை, அவர்தம் உரிமைகள். மகளிருக்குச் சீதனம் வழங்கப்பட்ட செய்தி, அச்சீதனத்தை அவர்கள் தங்கள் விருப்பம்போல் பயன்படுத்தத் தரப்பட்டிருந்த உரிமை, மணமான மகளிரும் அறம் செய்யுமளவு உரிமை பெற்றிருந்த மாண்பு, வணிகர்களுக்கு 'எட்டி' என்னும் சிறப்புப் பட்டம் தரப்பட்ட செய்தி, கோயில்களில் திருப்பதியம் ஓதப்பட்டமை, மக்கள் இறையிடமும், இறைக்கோயில்களிடமும் கொண்டிருந்த நம்பிக்கை, ஈடுபாடு முதலிய பல செய்திகளை நமக்கு உணர்த்து கின்றன. நிலக்கொடை, பணக்கொடை, பொற்கொடை போல மகளிரும் கூட கோயில்களுக்கு கொடையாகத் தரப்பட்டனர் என்பதும் இக்கல்வெட்டுகள் உணர்த்தும் செய்தியாகும்.

முதலாம் ஆதித்த சோழனால் கட்டப்பெற்று, முதலாம் பராந்தகனால் புரக்கப்பட்டு; முதலாம் இராசராசனின் காலத்தில் மக்களின் செல்லப்பிள்ளையாய் விளங்கிச் சீரும் சிறப்போடும் வளர்ந்து வாழ்ந்த இத்திருக்கோயில் இன்று புதுப்பொலிவோடு, சிவத்தலம் முருகன் தலமாக மாறிய நிலையில் குமரன் குடியிருக்கும் குமார வயலூராய்ச் சதுரதாண்டவப் பெருமானும் சக்தியும் விளங்கும் எழில் ஆலயமாய்க் காட்சியளிக்கிறது.

## அடிக்குறிப்புகள் :

1. டாக்டர். இரா. கலைக்கோவன், வயலூர்க் கல்வெட்டுகள், திருக்கோயில் பிப்ருவரி 1984.

2. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், பிற்காலச்சோழர் வரலாறு பக். 25, 197, 267, 432.